வெளியீடு 22-8-2005 Issued 22-8-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 7, 2005—தொகுதி 69—எண் 3

Monday, the 7th March, 2005—Volume 69—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

186275

[Price Rs. 3.00

566
21.2.06

[stamp]

**7-3-2005**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 287-321

**2. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

சுனாமி நிவாரணத்திற்கு மத்திய அரசு தொகை விடுவித்துள்ளது பற்றி மாண்புமிகு நிதி அமைச்சரின் அறிக்கை 322-324

**3. தகவல் கோரல்—**

பேரவை விதி 224-ன்படி ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையை அவையில் எழுப்புதல் 324-326

**4. கவன ஈர்ப்பு—**

கோயம்புத்தூர் மாவட்டம், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியையும் முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளியையும் தரம் உயர்த்துதல். 326-329

**5. வரவு-செலவுத் திட்டம், 2005-2006, பொது விவாதம்**—தொடர்ச்சி 330-412

*திரு. கே. மகேந்திரன் 330-340

திரு. சோ. இராசேந்திரன் 340-351

*திரு. ப. அரசன் 351,353-363

திரு. மீ.அ. வைதியலிங்கம் 363-367, 369-373

திரு. பி.கே. சேகர்பாபு 373,374, 380-383, 386-389,394-411

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 412

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 23, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 7, திங்கட்கிழமை

மாண்புமிகு. பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."

வாக்கில் இனிமையும், பிறருக்கு வழங்கிக் காத்திடும் தன்மையும் கொண்டவருக்கு இவ்வையகமே வசப்படும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**81—**

### பேருந்து வசதி

**•29629—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து புத்தனாம்பட்டி வரை வந்து செல்லக்கூடிய தடம் எண் 36, 36-பி, 27-சி நகரப் பேருந்துகள் அருகிலுள்ள அபினிமங்கலம் வரை வந்துபோக அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதன் விவரம் என்ன?

[2005 மார்ச் 7

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம், திருச்சி மண்டலம்மூலம் அபினிமங்கலம் கிராமம் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளது. மேலும், சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து ஓமாந்தூர், அபினிமங்கலம் வழியாக புத்தனாம்பட்டிக்கு 27-7-2004 முதல் தடம் எண் 27-சி நகரப் பேருந்துமூலம் ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், தமிழகத்தின் காவல் தெய்வம், என்னை வாழ வைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதம் தொட்டு வணங்குகின்றேன். திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, முசிறி ஒன்றியத்தில் அமைந்துள்ளது அபினிமங்கலம் கிராமம் ஆகும். இங்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இக்கிராமப் பொது மக்கள் மற்றும் திருச்சி சென்று பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் நகரப் பேருந்து வசதி வேண்டுமெனக் கோரிக்கை வைத்தனர். அம்மனுவின் அடிப்படையில், பொது மக்கள் நலன் கருதியும், ஏழையெளிய அடித்தளத்துக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் குறைந்த செலவில் திருச்சி சென்று வர, திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து மண்ணச்சநல்லூர், திருவல்லரை, ஓமாந்தூர் வழியாக புத்தனாம்பட்டி வரை இயக்கப்பட்டு வந்த தடம் எண் 27-சி பேருந்தை, மிகவும் அருகில் உள்ள அபினிமங்கலம் வரை நீட்டித்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற வினாவிற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற சொல்லிற்கு இலக்கணமாக, அப்பகுதி மக்களின், மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி, நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, கடந்த 27-07-2004 அன்று முதல் நகரப் பேருந்து புத்தனாம்பட்டியிலிருந்து அபினிமங்கலம் வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது என்ற அமைச்சரின் பதிலுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் முசிறி தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களில் சமர்ப்பணம் செய்கிறேன். மேலும், [illegible]து மக்களின் வசதிக்காகவும்,

186275
600 008



2005 மார்ச் 7]

நெரிசலைக் குறைப்பதற்காகவும், காலை 9-30 மணிக்கும், பகல் 2-30 மணிக்கும் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து அபினிமங்கலம் வரை இரண்டு நடைகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மல்லிகா சின்னசாமி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுத்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, அந்த வழித்தடத்தில் 27-சி நகரப் பேருந்துமூலமாக அபினிமங்கலம் வரை புதிய வழித்தடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அது 27-7-2004 முதல் ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, காலை நேரத்திலும், மதிய நேரத்திலும் கூடுதலாக இரண்டு நடைகள் இயக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூரினுடைய வடக்குப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியால் புதிய பின்னலாடைத் தொழில் பூங்கா தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில் பூங்காவில் 25 ஆயிரம் தொழிலாளர்களுக்குமேல் வேலை செய்கின்ற வாய்ப்பிருக்கின்றது. அந்தப் பகுதிக்குத் தொழிலாளர்கள் எல்லாம் சென்று வருவதற்குரிய போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற, திருப்பூரில் அமைந்திருக்கக்கூடிய பின்னலாடைத் தொழில் பூங்காவிற்கு, தொழிலாளர்களுடைய வசதிக்காகப் புதிய பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும்கூட நான் அதற்குப் பதிலளிக்க விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்களுடைய

கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 82, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**82—**

## வேளாண்மைக் கல்லூரி

**•23305—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் கோட்டை வளாகத்தில் காலியாக இருக்கும் நிலத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், குமரி மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தேவை என்பது பொது மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாகும். தமிழகத்தில் அனைத்து இயற்கை வளங்களும் நிறைந்த குமரி மாவட்டத்தில் விவசாய மக்களின் அத்தியாவசியத் தேவையான வேளாண்மைக் கல்லூரியை நடப்பு ஆண்டிலாவது அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிதாக ஒரு வேளாண் கல்லூரி துவங்கப்படவேண்டும் என்றால், அரசுக்கு சுமார் ரூ.137 கோடி செலவினம் ஏற்படுகின்றது. அதிலே குறிப்பாக, தொடராச் செலவினம் என்று பார்க்கின்றபோது ரூ.111 கோடியும், தொடரும் செலவினம் என்று பார்க்கின்றபோது ரூ.26 கோடியும் சேர்த்து, மொத்தம் ரூ.137 கோடி புதிதாக ஒரு வேளான் கல்லூரி துவங்கப்படவேண்டுமென்றால் அரசுக்குத் தேவைப்படுகின்றது. மேலும், ஒரு வேளாண் கல்லூரி துவங்குவதற்கு சுமார் 500 ஏக்கர் நிலமும், அதற்குக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நிலம், அடிப்படை வசதிகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்காக இந்த ரூ.137 கோடி தேவைப்படுவதால், தற்போது அரசினுடைய பரிசீலனையில் அதுபோன்ற ஒரு எண்ணம் இல்லையென்பதையும், அதே நேரத்திலே--மாணவ, மாணவியர்கள் மத்தியிலே—தற்போது தமிழகத்திலே இருக்கின்ற வேளாண் கல்லூரிகளிலே போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் சேரவில்லை என்பதையும் இந்த நேரத்திலே உங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியை 1980 ஆம் வருடத்தில் இந்த மாமன்றத்திலே கிளப்பி, அப்போது, இது பரிசீலனை செய்யப்படும் என்று ஒரு பதிலைத் தந்தார்கள். ஆனால், இன்றைய நிலையில் அதிக நிதி செலவாகும் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, அதுபோன்று இருக்கின்ற கல்லூரிகளில் போதுமான சேர்க்கை இல்லாத நிலை இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். ஆனால், இந்த மாவட்டத்தினுடைய பல்வேறுவிதமான விவசாயப் பொருள்கள், குறிப்பாக, இரப்பரானாலும் சரி, நெல்லானாலும் சரி, வாழையானாலும் சரி, இப்பயிர்களை அதிகமாகப் பயிர் ஏற்றுகின்ற ஒரு காரணத்தால் அரசுக்கு சற்று அதிகச் செலவினம் ஏற்பட்டாலும், பெருவாரியான மாணவர்கள் பிற மாவட்டங்களுக்குச் செல்லவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மீண்டும் இதைப் பரிசீலனை செய்து ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

[2005 மார்ச் 7

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகம் முழுவதும் 10 வேளாண் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக--மேலும் ஒரு பட்டயப் படிப்பு நிலையம், அதேபோன்று ஆதிபராசக்தி—தனியாருடைய வேளாண் கல்லூரியும் தற்போது தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றது. அதிலே ஒரு வருடத்திற்கு, அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டிலே 613 மாணவர்கள் சேர்க்கப்படவேண்டும். ஆனால், இந்த நிதியாண்டிலே 613 மாணவ, மாணவியர்களுக்குப் பதிலாக, 573 மாணவ, மாணவியர்கள்தான் சேர்ந்து இருக்கின்றார்கள் என்பதையும் குறிப்பாக நாம் பார்க்கின்றபோது, நான்கு ஆண்டுகளிலே சேர்க்கப்பட வேண்டிய மாணவ, மாணவியர்களுடைய எண்ணிக்கை 2,543. ஆனால், 4 ஆண்டுகளிலே சேர்ந்து இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் எண்ணிக்கையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 2,007 தான் சேர்ந்து இருக்கின்றார்கள் என்பதையும், அந்த அடிப்படையிலே மாணவ, மாணவியர்கள் தற்போது வேளாண்மைக் கல்லூரிகளிலே சேர்வதற்கு ஆர்வம் காட்டவில்லை என்பதையும், குறிப்பாக, தற்போது ஏழாயிரம் மாணவ, மாணவிகளுக்கு மேலாக வேளாண் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் என்பதையும், பொது நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் தற்போது வேளாண் பட்டதாரிகளுக்கு உரிய வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தாலே மாணவ, மாணவிகள் மத்தியிலே வேளாண் கல்லூரிகளிலே சேர்ந்து படிக்கின்ற ஆர்வம் குறைந்து வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அந்த அடிப்படையிலே சுமார் 137 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரி துவங்குவது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 83, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.



2005 மார்ச் 7]

முற்பகல் 10-10

83—

## அரசு மகளிர் கலைக் கல்லூரி

**•32054—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இராஜபாளையம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் விருதுநகர் மாவட்டம் கல்வியில் முதன்மை மாவட்டமாகத் திகழ்கின்றது. எனது தொகுதியில் கடந்த ஆண்டில் அரசுப் பள்ளிகளில் 98 சதவீதம் தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். மேலும், இம்மாவட்டத்திலுள்ள பெண்களும், மற்றும் எனது தொகுதியைச் சேர்ந்த பெண்களும் அரசு கலைக் கல்லூரிக்கோ அல்லது பொறியியல் கல்லூரிக்கோ செல்ல வேண்டுமென்றால், மதுரை மற்றும் பிற மாவட்டங்களுக்குச் சென்றுதான் பயில வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் படிப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து எனது தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் தொகுதியில் இயங்கிவரும் கல்லூரிகளின் விவரம்:—ராஜேஸ் கல்லூரி, இராஜபாளையம்; ஏ.கே.டி. தர்மராஜா பெண்கள் கல்லூரி, இராஜபாளையம்; ஏ.கே.சி. கல்லூரி,

கிருஷ்ணன் கோயில்; வி.பி. முத்தையாப்பிள்ளை மீனாட்சி அம்மாள் கல்லூரி, கிருஷ்ணன் கோயில் மற்றும் இராஜபாளையத்திலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் மூன்று கலைக் கல்லூரிகள் ஆகியவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மற்றும் தமிழகத்திலே 66, 67 அரசு கலைக் கல்லூரிகள் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. தேவையின் அடிப்படையில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும், தமிழக அரசின் நிதியுதவியின்றி சுயநிதிக் கல்லூரிகளைத் துவங்குவது குறித்து ஏதாவது கருத்துருக்கள் பெறப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலே அதற்கு அனுமதி அளிப்பதற்கு அரசு ஆணைகளை வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது தொகுதியிலும், பக்கத்திலுள்ள தொகுதியிலும் உள்ள கலைக் கல்லூரிகளைப் பற்றிச் சொன்னார்கள். அவை தனியார் கலைக் கல்லூரிகள். ஆனால் இன்றைக்கு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகள், தங்கள் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், அவர்கள் அரசுக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 85 கிலோ மீட்டர் மதுரைக்கு சென்றுதான் படித்து வரும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மீண்டும் அரசு கலைக் கல்லூரியை எனது தொகுதியில் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுடைய உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட பிறகு அந்தந்தப் பகுதியிலே கலைக் கல்லூரிகளை ஆரம்பிப்பது என்பது அந்தப் பல்கலைக்கழகங்களுடைய முடிவைச் சார்ந்தவையாகும். ஆகவே அந்தத் தேவைக்கேற்ப அந்தப் பல்கலைக்கழகங்களுக்கு முன் கோரிக்கை வரப்பெற்றால், அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் கண்டிப்பாக அதைப் பரிசீலிக்கும். அப்படி இராஜபாளையம் பகுதியிலே கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதற்கு, மதுரை பல்கலைக்கழகத்திற்கு எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.





**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெரம்பலூர் மாவட்டத்திலேயே அரியலூரில் ஒரே ஒரு அரசினர் கலைக் கல்லூரிதான் உள்ளது. அந்த அரசினர் கலைக் கல்லூரியில் எம்.காம்., முதுகலைப் பட்டப் படிப்பு இல்லை. அதை இந்த ஆண்டு துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா,. ஆணை வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அரியலூர் தொகுதியில் இருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரியில் ஒரு முதுகலைப் பாடப் பிரிவைத் துவங்குவதற்கு கோரிக்கை வரப்பெற்றிருந்தால், கண்டிப்பாக இந்த ஆண்டு அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்புக்கு நம்முடைய மாவட்டத்திலுள்ள மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. அண்ணாதுரை, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜரெத்தினம், என்னுடைய தொகுதியிலே இருப்பதனால் நானும் சேர்ந்து இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில், அரசு கலைக் கல்லூரிகளில், முதுகலைப் பட்டப் படிப்பு எத்தனை கல்லூரிகளில் துவங்கப்படுகிறது? அப்படித் துவங்கப்படுமானால், திண்டிவனம் அரசு கலைக் கல்லூரியில், எம்.ஏ., எம்.காம்., போன்ற வகுப்புகளைத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் எத்தனை கல்லூரிகளில்

[2005 மார்ச் 7

முதுகலைப் பட்டப் படிப்புகள் துவங்கப்படுகின்றன என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, திண்டிவனம் அரசு கலைக் கல்லூரியில் முதுகலைப் பாடப் பிரிவு தொடங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அதற்கான கோரிக்கை ஏற்கெனவே வரப்பெற்றிருக்கிறது. கண்டிப்பாக, இந்த ஆண்டு அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, பெண்கள் எல்லாத் துறைகளிலும் சம பங்கு பெற வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, அத்தனை துறைகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, காவல் துறையிலேயும்கூட, புதுமையாகப் பெண்களுக்கு வாய்ப்பினைக் கொடுத்து, அவர்கள் பணி சிறப்படைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிற இந்த ஆட்சியில், மகளிர் கல்லூரி என்பது அவசியமான தேவைகளில் ஒன்றாக இருக்கிறது. ஆண்கள் கல்லூரிகள் இருக்கின்ற அளவுக்கு மகளிர் கல்லூரிகளும் தமிழகத்திலே இடம்பெற வேண்டும் என்பதுதான் அநேகமாக முதலமைச்சர் அவர்களுடைய விருப்பமாகவும் இருக்கும். எனவே, இந்த ஆண்டில் தமிழகத்தில் எங்காவது மகளிர் கல்லூரி துவங்குவதற்குரிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய அரசு கலைக் கல்லூரிகள், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட பிறகு, அந்தந்தப் பகுதியிலே கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டுமென்பது, அவை சார்ந்திருக்கிற பல்கலைக்கழகங்களையே சார்ந்ததாகும். தமிழகத்திலே, பெண்கள் அரசுக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்போது, கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று தனியார் துறையிலே இருக்கின்றவர்கள் யாராவது விண்ணப்பித்தால், தாராளமாகக் கொடுப்பதற்கு அம்மாவினுடைய அரசு தயாராக இருக்கிறது. குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், மகளிருக்கென்று ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளில், சில கல்லூரிகளிலே



2005 மார்ச் 7]

போதிய மாணவிகள் சேரவில்லை என்ற காரணத்திற்காக இப்போது அவற்றை ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கின்ற கல்லூரிகளாக மாற்றித் தரவேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு, பல்வேறு தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிலே, மகளிர் கல்லூரிகளுக்கும் சிலர் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அம்மாவினுடைய அரசு அவை அனைத்தையும் பரிசீலனை செய்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்திலே, தனியார் அனுமதி கேட்கின்ற நேரத்திலே அனுமதி வழங்கப்படும்; தனியார் கல்லூரிகள் துவங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். தனியார் கல்லூரி என்று வருகின்ற நேரத்திலே, கட்டணம் மிகக் கூடுதலாக இருக்கிறது. மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழைக் குழந்தைகள் எல்லாம் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, தனியார் என்று சொல்கிற நேரத்திலே, கூடுதல் கட்டணம் என்ற காரணத்தினாலே, அதைத் தவிர்த்து அரசே துவங்கினால், ஏழைக் குழந்தைகள் படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அந்த அடிப்படையிலே, இப்படி ஏழைக் குழந்தைகள் படிக்க, அரசே துவங்குவதற்கு அரசு முன்வருமா? அதே நேரத்தில், அரசு கலைக் கல்லூரிகளிலே, பொறியியல் பாடங்களையெல்லாம் துவங்கலாம். பகுதிநேரப் படிப்பாக பொறியியல் படிப்பை அங்கே துவங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதையும் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளைத் துவங்குவது என்பது, அந்தந்தப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்தது என்ற வகையில் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்திருக்கிற பகுதியிலே, அப்படி ஏதாவது ஒரு அரசு கலைக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு வந்தால், அரசாங்கத்திற்கு அந்தப் பல்கலைக்கழகக் குழு அதனை அனுப்பி வைத்தால், அதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, அரசு கலைக் கல்லூரிகளிலே பொறியியல் பாடங்களை பகுதி நேரப் படிப்பாகப்

[2005 மார்ச் 7

படிப்பதற்கான எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி. மகளிர் கல்லூரியைப் பற்றிக் கேட்கிறார்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அரசினர் மகளிர் கல்லூரிகளில் அறிவியல் பாடப் பிரிவுகள் முழுமையாக இருப்பதில்லை. இயற்பியல் இருந்தால், வேதியியல் பாடம் இருப்பதில்லை. வேதியியல் பாடம் இருந்தால், உயிரியல் பாடம் இருப்பதில்லை. ஆகவே, அரசினர் பெண்கள் கல்லூரிகளில் அறிவியல் பாடங்கள் முழுமையாக இருப்பதற்கு, அரசினுடைய செயற்குறிப்பில் ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா என்பது என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில், எந்தெந்தப் பகுதிகளிலே, எந்தெந்தப் பாடப் பிரிவுகள் அங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து, அந்தந்தத் தேவைகளுக்கேற்ப, அந்தக் கல்லூரிகளினுடைய முதல்வர்கள், அரசாங்கத்திற்கு—கல்வித் துறை இயக்குநருக்குச் செயற்குறிப்பை அனுப்பினால், கண்டிப்பாக அதைப்பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 84, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**84—**

## தொழில்நுட்பப் பயிலகம்

**•53131—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 7]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதியில் பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதியிலே பல்தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற அன்னையே, தமிழர்களின் உயர்வை உலகம் அறியச் செய்த உன்னதத் தாயே, மகளிர் நலன் காத்த தங்கத் தாரகையே, சுனாமி எனும் கொடிய அரக்கனால் ஏற்பட்ட மாபெரும் இழப்பை இமைப்பொழுதில் ஈடு செய்த தனிப்பெரும் சக்தியே, தமிழகத்தின் முத்தான முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவை வணங்குகிறேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி. கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ள இந்தத் தொகுதியின் மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும் வகையிலும், மாணவர்களின் கல்வித் தரம் வளர்கின்ற எண்ணத்திலும், இந்தப் பகுதியிலே ஐ.ஐ.டி., பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரி எதுவும் இல்லாத இந்தத் தொகுதியிலே பாலிடெக்னிக் பயிலகம் ஒன்று அமைத்துத்தர மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க வேண்டுமென்றால், நில மதிப்பு நீங்கலாக சுமார் 10 கோடி ரூபாய் செலவாகும். அத்தியாவசியமான, அவசியமான காரணங்களுக்காக மட்டுமே இம்மாதிரியான செலவினங்களை அரசால் மேற்கொள்ள முடியும். ஆனால் மேலேயுள்ள புள்ளிவிவரங்களை—அதாவது, தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க வேண்டிய சூழ்நிலை இல்லை என்பதை இங்கே கொடுக்கப்படுகின்ற புள்ளிவிவரங்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம். ஒட்டப்பிடாரம் தொகுதி அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டத்தில், அரசு மற்றும் தனியார் தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளும், அவற்றில் 2003-2004 ஆம் ஆண்டில்

[2005 மார்ச் 7

ஒப்பளிக்கப்பட்ட, சேர்க்கப்பட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் காலியிட விவரம் வருமாறு:

இரண்டு அரசு பாலிடெக்னிக்குகள், பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக், எட்டயபுரம். ஒப்பளிக்கப்பட்ட மாணவர்கள் 320. இந்த ஆண்டு சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 174. காலியிடங்கள் 146; அரசினர் பாலிடெக்னிக், தூத்துக்குடி. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 240. சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 241. அரசு பாலிடெக்னிக்குகளில் மொத்தமுள்ள 560 இடங்களில் 415 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள்; 145 இடங்கள் காலியிடங்களாக உள்ளன. சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள். ஜெயராஜ் அன்னபாக்கியம் சி.எஸ்.ஐ. பாலிடெக்னிக் கல்லூரி, நாசரேத், மொத்த இடங்கள் 300; சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 186, காலியிடங்கள் 114; இலட்சுமி அம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி, கோவில்பட்டி. மொத்த இடங்கள் 300. சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 298.காலியிடங்கள் 2.சாமுவேல் பாலிடெக்னிக் கல்லூரி, தூத்துக்குடி.மொத்த இடங்கள் 120. சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 83. காலியிடங்கள் 37; புனித சேவியர் பாலிடெக்னிக் கல்லூரி, செய்துங்கநல்லூர், மொத்த இடங்கள் 210. சேர்ந்திருக்கின்ற மாணவர்கள் 186. காலியிடங்கள் 24; மொத்தம் 930 இடங்களில், 177 இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்திலே புதிய பாலிடெக்னிக் கல்லூரி திறக்கின்ற வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் பகுதியிலே 12 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு படித்துவிட்டு. அந்த மாணவர்கள் கல்லூரி செல்வதற்குப் போதுமான அளவு அவர்களிடத்திலே வசதியில்லாத காரணத்தினால், அவர்கள் தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி போன்ற பகுதிகளுக்கு அதிகமான மாணவர்கள் ஒட்டப்பிடாரம் பகுதியிலிருந்து தொழில் பயிற்சி கற்பதற்குச் செல்கின்றார்கள். ஆகையினால், அந்தப் பகுதியிலே ஒரு கல்லூரி அமைக்கின்ற காலகட்டத்திலே, அந்தப் பகுதியிலேயுள்ள நிலங்களை இலவசமாகத் தருவதற்கு அந்தத் தொகுதியில் வாழ்கின்ற மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், உடனடியாகக் கல்லூரி ஆரம்பிக்கத் தேவையான கட்டடங்களையும் அமைத்துத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரும் நிதியாண்டிலாவது இதைப் பரிசீலனை செய்வார்களா என் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தூத்துக்குடி மாவட்டத்திலே இயங்கி வருகின்ற பாலிடெக்னிக்குகளிலே, ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலே 322 இடங்கள் காலியாக இருக்கின்றன. தகுதியின் அடிப்படையிலே, மார்க்கின் அடிப்படையிலே அவர்கள் பெற்றிருக்கின்ற—அந்தத் தேர்விலே பெற்றிருக்கின்ற மார்க்கின் அடிப்படையிலேதான்—மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். அப்படியிருக்கும்போது, 322 இடங்கள் அங்கே காலியாக இருக்கின்றன. ஆகவே, தூத்துக்குடி மாவட்டத்திலே பல்தொழில்நுட்பப் பயிலகம் புதிதாகத் துவங்குகின்ற எண்ணம் அரசின் செயற்குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

முற்பகல் 10-25

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தூத்துக்குடி தொகுதியிலே மூன்று கலைக் கல்லூரிகள்தான் பெண்களுக்கு என்று இருக்கின்றன. கலைக் கல்லூரி வேண்டுமென்று நான் ஆரம்பம் முதலாகக் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன். என்னுடைய தொகுதி ஒரு பெரிய தொகுதியாக இருப்பதால், ஏழையெளிய மாணவர்கள் பயில அரசு கலைக் கல்லூரி வேண்டும்; பொறியியல் கல்லூரியும் இல்லை. பாலிடெக்னிக்கில் இவ்வளவு இடம் காலியாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மார்க்குகளின் அடிப்படையிலே எடுக்கிறோம் என்று சொல்லி, தனியார் கல்லூரிகளில் பணம் கொடுக்கக்கூடியவர்களாகப் பார்த்து எடுப்பதனால்தான் இடங்கள் காலியாக இருக்கின்றன. பாலிடெக்னிக் படிக்கும் மாணவர்களுக்கும் சிறிதளவு மார்க்குகளைத் தளர்த்தினால் கண்டிப்பாக அந்த இடங்கள் முழுவதும் நிரம்பிவிடும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் வரும் கல்வியாண்டிலாவது எனது தொகுதியில் ஒரு மகளிர் கலைக் கல்லூரி வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பாலிடெக்னிக் தொடங்கப்படுவது பற்றியது.



185275

[2005 மார்ச் 7

இருந்தாலும், அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குகிற செயற்குறிப்பு அரசாங்கத்திடம் ஏதும் இல்லை. தனியார் துறையிலே மகளிர் கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கு ஏதாவது செயற்குறிப்பு அனுப்பினால், கண்டிப்பாக இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, தனியார் பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு Fees அதிகமாக இருக்கின்றது என்று கூறினார்கள். அங்கேயிருக்கின்ற அரசு பாலிடெக்னிக்குகளிலே ஒப்பளிக்கப்பட்ட 560 இடங்களிலே 145 இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. கே.வி. முரளிதரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

85—

## கூட்டுறவு பட்டு நெசவாளர்கள் சங்கம்

***34624—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெங்கனிக்கோட்டை வட்டம், கேளமங்கலத்தில் கூட்டுறவு பட்டு நெசவாளர் சங்கம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அச்சங்கம் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தெங்கனிக்கோட்டை வட்டம், கேளமங்கலத்தில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ)கேள்வி எழவில்லை.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் தடவை பேசுவது கன்னிப் பேச்சு என்று சொல்கிறார்கள். இது கன்னிக் கேள்வி. This is my first question. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1971 ஆம் ஆண்டு பட்டு நெசவாளர்



2005 மார்ச் 7]

சங்கம் வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. சொந்தமாகக் கட்டடம் கட்ட, வங்கி மூலம் கடன் வாங்கி, பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 25% கடன் வழங்கப்பட்டு, மீதம் 75% தொகை தாமதம் செய்யப்பட்டதால், Working Capital பணம் எடுத்து சங்கக் கட்டடப் பணி முடிக்கப்பட்டது. Working Capital பணம் எடுத்துக் கட்டடம் கட்டியதால், 75 சதவிகிதத் தொகையை வங்கி அதிகாரிகள் கொடுக்க மறுத்து விட்டனர். எனவே, Working Capital இல்லாமல் மூடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தளி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதனாலும், இப்பகுதிகளில் தேச விரோத சக்திகள் ஊடுருவாமல், எல்லாத் துறைகளிலும் தளி தொகுதிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால், இந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கடனை ரத்துச் செய்து, மீண்டும் நெசவாளர் சங்கம் தொடங்க முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெங்கனிக்கோட்டை வட்டம், கேளமங்கலத்தில், அரசின் நிதியுதவியுடன் 30-1-1978 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டு, 26-4-1978 முதல் செயல்பட்டு வந்தது. கேளமங்கலம் பட்டு கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் செயல்படாமல் இருந்ததாலும், உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் நிலை ஏற்பட்டதாலும், இந்தச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு 137(2)-இன்கீழ் 24-9-1997-ல் கலைக்கப்பட்டுவிட்டது. இப்பகுதியிலுள்ள நெசவாளர்கள் எவரேனும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகப் பயன்பெற விரும்பினால், அருகிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகிப் பயன்பெறலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

86—

## மீன்பிடி படகுப் போக்குவரத்து

**•59886—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் கடற்கரையில் கலக்கும் உப்பனாற்றின் முகத்துவாரத்திலுள்ள மண்மேடுகளை அகற்றி மீன்பிடி படகுப் போக்குவரத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருமுல்லைவாசல் மீன்பிடிப் பகுதியில் ஆற்று முகத்துவாரத்தில் உள்ள மணல்மேடுகளை அகற்றி, மீன்பிடி படகுப் போக்குவரத்தைத் தடையின்றி ஏற்படுத்திடும் பொருட்டு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், திருமுல்லைவாசல் மீன்பிடிப் பகுதியின் ஆற்று முகத்துவாரத்தில் பூண்டி நீரேற்றியல் மற்றும் நீரியல் மையத்தின் மூலம் மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கையின் அடிப்படையில் மணல்மேடுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-30

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு நன்றி. சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியிலும், மற்றும் அருகிலுள்ள மீனவ கிராமங்களிலும் சுமார் 200-க்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் உள்ளன. இவற்றை நிறுத்துவதற்கு வசதி ஏதும் இல்லாததால் மீனவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி பேரலையால், திருமுல்லைவாசல் கிராமத்தில் கடல் நீர் ஒரு கிலோ மீட்டர் தூரம் ஊருக்குள் புகும் காட்சிகளை நானே நேரில் சென்று வீடியோ படம் எடுத்ததை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அனைவரும் ஜெயா டி.வி.-யில் பார்த்திருப்பீர்கள். சுனாமி பேரலையால் முகத்துவாரத்தில் மண்மேடுகள் அதிகமாக உருவாகிவிட்டன. மேலும், அருகில் இருந்த சுற்றுலாத் தலமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, திருமுல்லைவாசல் மற்றும் பக்கத்து கிராமத்திலுள்ள மீனவ மக்கள் படகில் சென்று மீன் பிடிப்பதற்கு வசதியாக மண்மேடுகளை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவும், திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தில் படகு நிறுத்தும் தளம் ஒன்றும் அமைத்துக் கொடுத்தால், கடல் நீர் உட்புகாமல் தடுத்திடவும், மீனவ மக்கள் வசிக்கும் பகுதிக்குப் பாதுகாப்பு அளித்திட ஏதுவாகும். எனவே, திருமுல்லைவாசல் மீனவ கிராமத்தில் ஒரு படகு நிறுத்தும் தளம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாசல் பகுதியில் மணல்மேடுகளை அகற்ற மாதிரி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 21-12-2000 ஆம் நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் அரசாணை எண் 184-ல், ரூபாய் 2.40 இலட்சம் வழங்கப்பட்டது. மாதிரி ஆய்வுகள் பூண்டி நீரியல் மற்றும் நீரேற்றியல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளும்முன், Numerical Model Survey and Pathymetry Survey ஆகியவை செய்யப்பட வேண்டுமென்று பூண்டி நீரியல் மற்றும் நீரேற்றியல் நிறுவனம் பின்னர் தெரிவித்தது. எனவே, Numerical Model Survey and Pathymetry Survey ஆகியவற்றை மேற்கொள்ள, கூடுதலாக ரூபாய் 6.02 இலட்சம் வழங்க மீன் துறை இயக்குநர் அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளார். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடுதலாகக் கோரப்படும் தொகை ரூபாய் 6.02 இலட்சம் ஒப்பளிக்கப்பட்ட பின்னர், மாதிரி ஆய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு, ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், திருமுல்லைவாசல் பகுதியிலே ஏற்படும் மணல்மேடுகளை நிரந்தரமாகத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, படகு நிறுத்தும் தளம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பாக நன்றியினை, பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**87—**

## ஆழ்துளைக் கிணறு

**•41487—திரு. எஸ். நடராஜன்:**

*மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் குடிநீர்த் தட்டுப்பாட்டைக் களைய ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப அவ்வப்போது ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, குடிநீர்த் தட்டுப்பாடு களையப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் கடந்த 3 வருடங்களாகப் பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தினால், வறட்சி மிகவும் கடுமையாக இருக்கின்றது. மேலும் என்னுடைய சட்டமன்றத் தொகுதியான நாட்ராம்பள்ளி தொகுதியில் 85 சிற்றூராட்சிகள் இருந்து வருகின்றன. அந்த சிற்றூராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகள் 300 அடியிலிருந்து 500 அடி ஆழத்தில் இருந்து வருகின்றன. மேலும் அதற்குப் பொருத்தப்பட்டுள்ள மின் இயந்திரம் 3 குதிரை சக்தியிலிருந்து 5 குதிரை சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது. ஆனால், தற்போது எங்களுடைய நாட்ராம்பள்ளி பகுதி மிகவும் மேடான பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், நிலத்தடி நீர் 700 அடி ஆழத்தில் இருக்கின்ற காரணத்தினாலும், எங்களுக்கு ஆழ்துளைக் கிணறுகளை 700 அடியில் அமைத்துக் கொடுக்கவும், அந்த ஆழ்துளைக் கிணற்றுக்கு மின் இயந்திரம் 7.5 குதிரை சக்தியிலிருந்து 10 குதிரை சக்தி வரை



2005 மார்ச் 7]

பொருத்தப்பட்டால்தான் நிலத்தடியில் இருக்கின்ற நீரை உறிஞ்சி மேல்நிலைத் தொட்டிக்கு வழங்க ஏதுவாக இருக்கும்; அதையும் அமைச்சர் அவர்கள் எங்களுக்குச் செய்து தரவேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி தொகுதியானது, கந்திலி ஒன்றியம், நாட்ராம்பள்ளி ஒன்றியம், ஜோலார்பேட்டை ஒன்றியம், திருப்பத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்டு, 86 ஊராட்சிகளும், நாட்ராம்பள்ளி சிறப்பு சிற்றூராட்சியையும் கொண்ட 3 இலட்சம் மக்கள் வசிக்கின்ற பகுதி. இந்தத் தொகுதியில் மொத்தம் 3281 ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. அவற்றில் 2558 கைப்பம்புகளும், 548 தனி மின்விசைத் திட்டங்களும், 175 சிறு மின்விசைத் திட்டங்களும் உள்ளன. இவற்றில் வறட்சியின் காரணமாக 1523 கைப்பம்புகளும், 361 தனி மின்விசைத் திட்டங்களும், 156 சிறு மின்விசைத் திட்டங்களும் மட்டுமே தற்போது பயன்பாட்டில் உள்ளன. அவற்றிலிருந்து அந்தப் பகுதிக்குத் தேவையான குடிநீர் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இயற்கை இடர்ப்பாடுகள் நிவாரண நிதியின்கீழ் வேலூர் மாவட்டத்திற்கென மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த நிதியிலிருந்து புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு, எவ்வளவு ஆழம் தேவையோ, அந்த அளவிற்கு ஆழம் போடப்பட்டு, அதன்மூலமாகக் குடிநீர்ப் பற்றாக்குறையை அந்தப் பகுதியிலே தீர்த்துக் கொடுக்கலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்ததன்பேரிலே, கடந்த 26-2-2005 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சராக இருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்தாய்வு செய்து, அதற்குப் பிறகு அந்தப் பகுதியினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, எத்தனை அடி ஆழம் ஆழ்குழாய்க் கிணறுகள் தேவையோ, அதைப் போட்டுக்கொள்ளலாம் என்ற அளவிற்கு முடிவு எடுக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 7

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து--சில ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் இருந்தும்--அதை எடுத்து உபயோகப்படுத்த முடியாத சூழ்நிலையில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு சக்தி வாய்ந்த மின் மோட்டாரை வழங்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியானது, முழுமையாக ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு மட்டும் அல்ல; தேவைப்படுகிற இடத்திலே, ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் இருப்பின், அங்கு மின் மோட்டாரை மாற்றி அமைப்பதற்கும் சேர்த்து இந்த நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. பல ஆண்டுகள் கழித்து பல இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் பாழ்பட்டு, தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட, பயன்படுத்தாமல் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் குழந்தைகள் விழுந்து உயிர்ச் சேதம் ஏற்பட்டுவிடுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, பயன்படுத்தாமல் உள்ள, பாழடைந்த ஆழ்துளைக் கிணறுகளை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பயன்பாட்டில் இல்லாத ஆழ்துளைக் கிணறுகள் இன்றைய நிலையிலே bleaching செய்யப்பட்டு, அங்கே தண்ணீர் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்பாடு செய்து, அது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்றது. அப்படியில்லையென்றால், அந்தப் பகுதியிலே மழை நீர் சேமிப்பிற்காக அது வடிவமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சீ. அன்பழகன்.



2005 மார்ச் 7]

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடந்த நான்கு ஆண்டுகளாக வறட்சி இருந்தபோதிலும், தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியால் பல திட்டங்கள் தமிழகத்திலே நடைபெற்று, குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல் எங்கள் மாவட்டத்திலே நிலத்தடி நீர் சேமிப்புத் திட்டங்களாகிய மூன்று அணைகளைக் கட்டி, எங்கள் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை இல்லாமலே மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, சிறு குடியிருப்புகள் உள்ள பகுதிகளில், பல திட்டங்கள் மூலமாக குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகளை அளித்த அம்மா அவர்களை வணங்குகிறேன். ஏற்கெனவே போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளில், பழுது நிலையிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளைப் பழுது பார்க்க, தனி நிதி ஒதுக்கீடு செய்து, மிகுந்த பொருட்செலவினைக் குறைத்து, பொது மக்கள் பயன்பெற வசதி செய்ய இயலுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதுபட்ட ஆழ்துளைக் கிணறுகள் அந்தந்த ஊராட்சியினுடைய நிதிநிலைக்கேற்ப பழுதுபார்க்கப்படுகின்றன. அப்படி அவர்கள் நிதிநிலை சரியில்லை என்றால், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகப் பழுதுநீக்கம் செய்யப்பட்டு, அந்த ஊராட்சி ஒன்றியத்திற்குப் பணம் வருகின்றபோது, அவை சரிசெய்யப்படுகின்றது. ஆகவே எந்த ஒரு ஆழ்துளைக் கிணறும் சீரமைக்கப்படாமல் இருந்தால், அதை உடனுக்குடன் சீர்செய்வதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய நிலைப்பாடு என்பதைக் கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலவி வருகிறது. பக்கத்தில் இருக்கக்கூடிய தருமபுரி மாவட்டமும் அதே அளவில் வறட்சியிலே இன்று சிக்குண்டு தவிக்கின்ற இந்த வேளையில், மாவட்டம் முழுமையிலும் இன்று தண்ணீர் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1 கோடி ரூபாய் அளித்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அவையிலே தெரிவித்தார்கள்.

20 ஒன்றியங்கள், 14 நகராட்சிகள் இருக்கக்கூடிய எங்களுடைய மாவட்டத்திற்கு நிச்சயமாக அந்த 1 கோடி ரூபாய் என்பது 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போட்ட கதைதான். தயவுசெய்து நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், Ground Water Study என்ற ஒன்றை முழுமையான அளவிலே நீங்கள் எங்கள் மாவட்டத்திலே நடத்தி, குறைந்தபட்சம் 50 கோடி ரூபாயாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படியாவது ஒதுக்கீடு செய்து, எங்களுடைய மாவட்டத்திற்கு நீங்கள் நிதி உதவி அளித்து, ஆழ்துளைக் கிணறோ அல்லது நீராதாரம் எங்கு இருக்கிறதோ, அங்கிருந்து லாரிகளிலாவது தண்ணீரைக் கொண்டு போய் நீங்கள் supply செய்தால்தான், இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அவர்கள் தாகத்தைத் தீர்க்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த 1 கோடி ரூபாய் என்பது எங்களுடைய துரைப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகளுக்கே போதாது. 32 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுக்கிறோம். குடிப்பதற்கு வேலூரரையொட்டி இருக்கக்கூடிய பகுதியிலே (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்றைக் கேட்டுவிடுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** கேள்வியை முடித்துவிட்டேன். அல்லாபுரம் பேரூராட்சியிலே நேற்றுகூட 50 பேர் சாலை மறியலுக்கு வந்துவிட்டார்கள். கேட்டால், அவர்கள்—32 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிற காரணத்தால் அமைச்சர் அவர்கள் ஒரு 50......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி பகுதிகளுக்கு 19 கோடியே 22 இலட்சம் ரூபாயில் கூட்டுக் குடிநீர்த் திட்டமானது இந்த மாத இறுதிக்குள் பயன்பாட்டிற்கு வருகின்ற நிலையில் இருக்கிறது. அதனடிப்படையிலே அங்கே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் அது அமையும். மேலும் 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிதியானது, முதல் கட்ட நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபோக, ஒன்றியங்கள் வாரியாக வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தலைமையிலே குழுக்கள்





அமைக்கப்பட்டிருக்கின்றன. வாரத்திற்கு ஒரு முறை, சனிக்கிழமைதோறும் வேலூர் மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை என்ன இருக்கிறதென்பதுபற்றி ஆராயப்பட்டு, உடனுக்குடன் அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதில் முதல் கட்டமாகத்தான் 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, முழுமையான குடிநீர்ப் பிரச்சினைக்காக அந்த 1 கோடி ரூபாய் மட்டுமல்ல என்பதைக் கூறி, தேவைப்படுகிறபோது நிதியை ஒதுக்கீடு செய்து, குடிநீர்ப் பிரச்சினை கண்டிப்பாகத் தீர்த்துக் கொடுக்கப்படும் என்று கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முழுவதும் ஊரிலே இருந்துவிட்டு, இப்போதுதான் நேராக வருகிறேன். மக்களைச் சந்திக்க முடியவில்லை. என்னுடைய வாழ்நாளில் இவ்வளவு பெரிய வறட்சியை குடிநீருக்காக நான் எங்கள் மாவட்டத்திலே பார்த்ததில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தெரிவித்ததைப்போல், 1 கோடி ரூபாய் என்பது போதாது. நேற்றுகூட நான் அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்டேன். Water Board-ல் ஒரு handpump-க்கு 15 ஆயிரம் ரூபாய் என்றால் நடக்காது. Check Dam கட்டுவதற்குப் பணம் ஒதுக்குகிறார்கள். இப்போது Check Dam என்பது தேவையில்லை. எப்படியாவது அவர்களுக்கு உயிர்த் தண்ணீர் கொடுக்கவேண்டும். நீங்கள் பணத்தைக் கொஞ்சம் குறைவாகச் செலவு பண்ணுவீர்கள் என்றால், இப்போது அரசுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன். இப்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே எம்.எல்.ஏ.க்களுக்கு 1 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த ஒரு முறை எங்கள் மாவட்டத்திலே இருப்பவர்களுக்கு relaxation கொடுத்து, வேறு எதற்கும் கிடையாது, முழுக்க குடிதண்ணீருக்கே நாங்கள் அதை ஒதுக்குவதற்கு—நீங்கள் Vote on Account-ஐக்கூட அப்புறம் கொடுக்கலாம், அல்லது retrospective effect கொடுக்கலாம். இப்போதே நாங்கள் எழுதிக் கொடுத்தோம் என்றால்—அந்த ஊருக்கு Bore போடுவதற்கு, 700 அடி போட்டால்கூட தண்ணீர் வரவில்லை. ஊருக்குப் போய் உட்கார்ந்தால், படுக்க முடியவில்லை. நானும் 1971-லிருந்து சட்டமன்றத்தில் இருந்து வருகிறேன். இவ்வளவு மக்கள் கஷ்டத்தை நான் பார்த்ததில்லை. அருள்கூர்ந்து இதைக் கவனித்து,

[2005 மார்ச் 7

எங்களை உடனடியாகக் கவனிப்பதற்கு, இதற்காவது ஒரு relaxation கொடுங்கள். ஏனென்று கேட்டால், 1 கோடி ரூபாய் என்பது போதாது. இருந்தாலும், முடிந்த அளவுக்குக் கொடுங்கள். செலவு செய்வதற்கு உதவியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். திரு. ஞானசேகரன் சொன்னதைப்போல, நகராட்சிகள், பஞ்சாயத்துகளுக்கு லாரி மூலம் தண்ணீர் வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில பேர் Mineral Water Plant எல்லாம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கொடுத்தால் உதவியாக இருக்கும். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறியதைப் போல, அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயை எந்தப் பணிக்கு வேண்டுமானாலும் ஒதுக்கலாம் என்றிருக்கிறது. குடிநீருக்கென்று ஒரு 10 இலட்சம் ரூபாய் இருக்கிறது. ஆகவே, 60 இலட்சம் ரூபாயை அவர் பயன்படுத்தி, குடிநீர்ப் பிரச்சினைக்கு முன்னுரிமையாகச் செய்தார் என்றால், மேலும் இருக்கின்ற நிதிக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நிவர்த்தி செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம் மிகக் கடுமையான வறட்சிக்கு உட்பட்டிருக்கிறது. நகராட்சியில் இருக்கின்ற பகுதிகளிலே லாரிகள் மூலம் மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களிலே உள்ள ஏழை மக்களுக்கு அவ்வாறு வசதி கிட்டுவதில்லை. எனவே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கிராமப்புற மக்களுக்கும் லாரிகள் மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்படின், அந்தப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பின், நகராட்சிப் பகுதியில் கொடுப்பதைப் போல, கிராமப்புறங்களிலும் லாரிகள் மூலம் தண்ணீரைக் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**88—**

### சுத்திகரிப்பு நிலையம்

**•53425—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் குளத்தில் கோவை மாநகராட்சியின் கழிவு நீர் கலந்து, சுற்றுப்புறச்சூழல் மற்றும் படகு இல்லம் பாதிப்படைவதைத் தடுத்து சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் குளத்தில் கலந்து வரும் கழிவுநீரினைச் சுத்திகரிக்க, சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குப் பதிலாக, கழிவு நீர் குளத்தில் கலக்காதவண்ணம் தடுத்து, வெளிப்புறம் உள்ள கால்வாயில் அது செல்லுமாறு வழிவகை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியினுடைய மொத்த சாக்கடைக் கழிவு நீரும், மருத்துவமனைக் கழிவுகளும், இரசாயனக் கழிவுகளுமாக, மொத்தமாகச் சேர்ந்து சிங்காநல்லூர் குளத்தில் மட்டுமல்ல, சங்கனூர் ஓடை மற்றும் ராஜ வாய்க்காலின் மூலம் நொய்யல் ஆற்றுப் படுகையில் சங்கமிக்கிறது. இதன் காரணமாக, குளம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, நொய்யல் ஆறு பாதிக்கிறது, ஒட்டுமொத்த சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கிறது. பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய

சுகாதார அடிப்படை நல உரிமை தடுக்கப்படுகிறது. மலேரியா போன்ற தொற்று வியாதி அடிக்கடி வருகிறது. அந்த ஆற்றைக் கடந்து போன காரணத்தால் பல நூற்றுக்கணக்கானோர் கணுக்கால் வரைக்கும் யானைக்கால் வியாதி வந்தவர்களைப் போல, கால் கறுத்துப் போய் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. நீண்ட பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகையினாலே அந்த இடத்தில் சுத்திகரிப்பு நிலையம் ஏற்பாடு செய்தோம் என்று சொன்னால், அவை பாதுகாக்கப்படும் என்பது மட்டுமல்ல, விவசாயத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட அந்தத் தண்ணீர் பயன்படும். இதனால் இரண்டு, மூன்று purposes solve ஆக வாய்ப்பு இருக்கிறது. கோவை மாநகரத்திலே உள்ள பொதுப் பணித் துறை இந்த சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தைத் தருவதற்குத் தயாராக இருக்கிறது. நிதியை மாநகராட்சியோ அல்லது அரசாங்கமோ ஒதுக்கீடு செய்தால், ஒரு பெரிய தொகை ஒன்றும் செலவாகிவிடாது. இது பல்லாயிரக்கணக்கான மக்களின் ஜீவாதார, சுகாதாரப் பிரச்சினையோடு, நிலம், விவசாயம் சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதால், மாநில அரசு தயவுசெய்து நிதியை ஒதுக்கீடு செய்து, நடப்பாண்டில் ஒரு முழுமையான சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் குளம் மற்றும் நொய்யல் ஆற்றுக்குச் செல்லும் கழிவு நீரைச் சுத்திகரிக்க சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதால் மட்டுமே மாசுத் தடுப்பினை மேற்கொள்ள இயலும். கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூபாய் 4 முதல் 5 கோடி வரை செலவாகும். மேலும், இதற்காக குளத்திற்கு அருகில் சுமார் 2 முதல் 3 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் தேவைப்படுகிறது. தற்சமயம் மாநகராட்சிக்கு இப்பகுதியில் போதிய நிலம் இல்லாததால், அருகிலுள்ள தனியார் நிலங்கள் நில ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். மேற்படி இந்தப் பணிக்கு மாநகராட்சியில் நடப்பு நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்ட ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனினும் இந்தப் பணியின் அவசியம் கருதி, வரும் நிதியாண்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த பரிசீலிக்கப்படும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதே நேரத்தில், அந்த மாநகராட்சி அறிவித்திருக்கக்கூடிய நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை பெரிய விஷயமல்ல. பொதுப் பணித் துறை, குளத்தையொட்டி





தென்புறப் பகுதியில் நொய்யல் ஆற்றின் வடபுறப் பகுதியிலுள்ள காலி இடம் இரண்டு ஏக்கர் இடத்தைத் தருவதற்குத் தயாராக இருப்பதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொன்னது. மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்டாட்சியர், தாசில்தார், பொதுப் பணித் துறை மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய மொத்த அதிகாரிகள், நான் உட்பட சென்று, அந்தப் பகுதியைப் பார்வையிட்டதோடு, இந்தத் தேவையை கடந்த இரண்டு ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். இடம் நிச்சயமாகக் கிடைக்கும். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மாநில அரசின் மூலமாக கோவை மாநகராட்சிக்கு உத்தரவிட்டால் உடனடியாக இந்தப் பணி தொடங்கப்பட்டு, நிறைவேறுவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. உங்கள் உத்தரவு மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இடம் இருப்பதுடன், நிதியும் 4 முதல் 5 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது என்ற காரணத்தால், அதற்குண்டான வழிவகைகளை ஏற்பாடு செய்து, அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்று கூறுகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**89—**

## இலவச பட்டா வழங்குதல்

***18637—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், மாவட்டத்தில் உள்ள இதர பகுதிகளிலும் புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2005 மார்ச் 7

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்கு தகுதியின் அடிப்படையில் இலவச பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், 50 கோடி ரூபாய் செலவில் ஊரகப் பகுதிகளில் வாழும் இரண்டு இலட்சம் ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆற்காடு தொகுதி மக்களின் சார்பிலே கோடானு கோடி நன்றியினை அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்பிக்கின்றேன். இந்தக் கேள்வி இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொடுக்கப்பட்ட கேள்வி. ஆற்காடு தொகுதியைப் பொறுத்தமட்டில், ஆதி திராவிட மக்கள், வேட்டை இனத்தினர், இருளர்கள் மற்றும் அருந்ததியின மக்கள் அதிகம் வாழ்கின்றார்கள். அரசு புறம்போக்கு நிலங்களிலே பல ஆண்டுகளாக வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனை கிடைப்பதற்கு, பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையினை இவ்வருடத்தில் முன்னிலைப்படுத்தி, கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், நம்முடைய பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு புறம்போக்கு நிலத்தில் சில பேர் வீடு கட்டி 10 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள் வாழ்ந்து வருவார்களேயானால்,



2005 மார்ச் 7]

அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று ஓர் ஆணையைப் பிறப்பித்தது. ஆனால் Revenue அதிகாரிகள் அந்த இடத்தை வந்து சோதனையிட்டு, பிறகு பக்கத்தில் இருக்கக்கூடிய இடத்தினுடைய மதிப்பைப் போட்டு, அதற்கும் மதிப்புக் கேட்ட காரணத்தினாலேதான் பல இடங்களிலே இன்று பட்டா கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள்—ஏற்கெனவே அவர்கள் 20 ஆண்டுகளாக வாழ்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்—அவர்களுக்குக் கட்டணம் ஏதும் விதிக்காமல், இல்லையென்று சொன்னால், குறைந்த அளவு கட்டணத்தை நீங்கள் விதித்து, பட்டா கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி இருப்பின்—யாருக்கு எல்லாம் பட்டா வழங்கப்படுகிறதோ, அவர்களுக்கு எல்லாம் தகுதி இருப்பின் இலவச வீட்டுமனை வழங்கப்படும். பத்து வருடம், இருபது வருடம், அவர்கள் அந்த அரசு புறம்போக்கில்—நத்தமாக இருந்தால் குடியிருப்பவர்களுக்கு, அவர்கள் தகுதி—இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்குத் தகுதி இல்லாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்த இடத்தினுடைய guideline value-வின்படி வசூலித்துக்கொண்டு—பணம் வசூலித்துக்கொண்டு, பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு, மதுரை, காமராஜபுரம், அரசரடி, பாண்டியன் நகர், பைக்கரா, முத்துராமலிங்கபுரம், புதூர், சம்பக்குளம் ஆகிய பகுதிகளுக்குப் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்; பொருந்த வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய இடம் தடையாணைக்கு உட்படாமல், ஆட்சேபகரமான பகுதியாக இல்லாமல் இருந்தால், விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில், ஏழு மாவட்டங்களில், 16 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளுக்கு பட்டா தருவதில்லை என்ற ஒரு தடையாணை 1984-லே பிறப்பிக்கப்பட்டு, இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பழைய அரசாணையை மாற்றுவதற்கு செயற்குறிப்பில் திட்டம் இருக்கிறதா என்ற கேள்வியோடு, கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னால் இருந்த அரசாணை—10 ஆண்டுகள் குடியிருந்தால், நத்தம் புறம்போக்கு, இதர பயன்படுத்தப்படாத புறம்போக்குகள், வீடுகளுக்குப் பட்டா தருவது என்ற அந்த அரசாணையைப் புதுப்பிக்க இயலுமா என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரை, 32 கிலோ மீட்டர் என்ற அளவிலும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில், திண்டுக்கல், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் விருதுநகர் நகரங்களைப் பொறுத்த அளவில் 16 கிலோ மீட்டர் என்ற அளவிலும் அந்த நகரப் பகுதிகளுடைய வளர்ச்சி இருக்கின்ற வகையில், அங்கு தடையாணை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், அங்கே அரசினுடைய நிலம் மிகவும் குறைவாக இருக்கிறது. அரசினுடைய வளர்ச்சிப் பணிகளுக்கு அந்த இடம் தேவைப்படும் என்கிற நோக்கில், அந்தத் தடையாணை அங்கே விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதுபோல், கடந்த 27-3-2000-ன்படி ஒரு முறைத் திட்டம்—one-time scheme ஆணையிடப்பட்டு, நீர்நிலைப் புறம்போக்கு, மேய்ச்சல், மந்தைவெளி, மயானம் மற்றும் பாட்டை போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமணம் செய்து 10 ஆண்டுகளுக்கும் மேல் குடியிருந்து வரும் நபர்களுக்கு மேற்படி நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையென்றால், விதிகளுக்குட்பட்டு ஒப்படை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி அரசாணை 31-3-2001 வரை மட்டுமே செல்லத்தக்கதாக ஆணையிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.



2005 மார்ச் 7]

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை 168-ஐத் திரும்பவும் நடைமுறைப்படுத்தி, அதன்மூலமாக, பட்டா கொடுக்கப்படாமல் உள்ளவர்களுக்குக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறினார்கள். திரும்பவும் அந்த அரசாணை 168-ஐக் கொண்டு வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, தகுதி அடிப்படையிலே அந்த நிலங்கள் அந்தப் பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படும் என்று சொன்னார்கள். அந்தத் தகுதி என்பது என்ன என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் வீட்டுமனைப் பட்டா வாங்குவதற்குத் தகுதியானவர் என்ற அடிப்படையில், கிராமப்புறங்களில் ரூபாய் 16 ஆயிரத்திற்குள் வருமானம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நகர்ப்புறங்களில் ரூபாய் 24 ஆயிரத்திற்கு மிகாமல் அவர்களுடைய வருமானம் இருக்க வேண்டும். தகுதியிருப்பின், கிராமப்புறங்களில் மூன்று சென்ட் வீதமும், நகரங்களில் ஒன்றரை சென்ட் வீதமும், மாநகரப் பகுதியில் ஒரு சென்ட் வீதமும் வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதில், பொதுவாக கண்மாய்ப் புறம்போக்கில் கண்டிப்பாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அப்படிப்பட்ட இடங்களிலே குடியிருக்கின்றவர்கள் அந்தக் கண்மாய்க்கு உட்பட்ட பாசனப் பகுதியிலுள்ள நிலங்கள் எல்லாம் வீடுகளாக ஆக்கப்பட்டு, கண்மாய் பயனில்லாமல் போகின்ற நிலையில், அப்படிப்பட்ட இடங்களிலே அந்த விதியைத் தளர்த்தி, வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[2005 மார்ச் 7

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையாணைக்குட்பட்ட ஆட்சேபகரமான நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படமாட்டாது. ஆட்சேபனை இல்லாத புறம்போக்கு நிலங்களான, தீர்வை ஏற்படாத தரிசு, தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களை மாவட்ட ஆட்சியர் கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்க ஆணையிடுகின்றார். நத்தம் நிலங்களில் காலியாக உள்ள இடங்களில் வீட்டுமனைப் பட்டா வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடம் தடையாணைக்குட்பட்ட நிலமாக இருந்தால், அது தடையாணைக்குட்பட்டிருக்கின்ற நிலையில் தற்போது வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964 ஆம் ஆண்டு புயல் ஏற்பட்டபோது தனுஷ்கோடி நகரம் முழுமையாக அழிந்தது. அங்கு இருந்த மக்கள் எல்லாம் குடிபெயர்ந்து இராமேஸ்வரத்திற்கு வந்து புறம்போக்கு நிலங்களில் தாங்களே வீடுகளைக் கட்டி அமர்ந்து கொண்டார்கள். சேது சமுத்திரத் திட்டம் அங்கு நிறைவேற்றப்படும் என்பதால் பட்டா வழங்குவதற்கு நீண்ட காலமாகத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் கடந்த முறை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினரே Revenue Minister ஆக இருந்த காரணத்தால், அந்தத் தடையைத் தற்காலிகமாக நீக்கி ஒத்திவைத்துவிட்டு, ஒரே தெருவில் 10 பேர் வீடு கட்டியிருந்தால் தி.மு.க.-வைச் சேர்ந்த 2 பேருக்கு மட்டும் பட்டா வழங்குவது என்ற அடிப்படையில் பட்டாக்களை வழங்கிவிட்டு முடித்துவிட்டார்கள். அங்கு இருக்கின்ற மீதி மக்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. எனவே 1964 ஆம் ஆண்டு புயலில் பாதிக்கப்பட்டு இராமேஸ்வரத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கின்ற, மீதி இருக்கின்ற மக்களுக்கும் முழுமையாக பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா, தனிக் கேள்வி போடுங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) இல்லை, குற்றச்சாட்டு கூடாது. கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. தனிக் கேள்வி போடுங்கள்.



2005 மார்ச் 7]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் எல்லாப் பகுதிகளிலும் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலே குடிசை வீடுகளைக் கட்டி வாழ்ந்து வரக்கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அதனால் இது நத்தம் புறம்போக்கு இல்லை. ஆகவே, இதற்கு பட்டா வழங்கப்படமாட்டாது என்ற நிலை உருவாகும் என்று சொன்னால்......(மணியடிக்கப் பெற்றது)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** காலம் காலமாக வாழ்ந்து வரக்கூடியவர்கள் இந்த நாட்டிலே ஒரு வீட்டுமனைப் பட்டாகூட இல்லாமல் வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடிய அவல நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய வாழ்க்கைத் தரம், ஏழ்மை நிலையைக் கருதி, அது நத்தம் புறம்போக்காக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும்கூட, அதை நத்தம் புறம்போக்காக மாற்றி, அவர்களுக்கு உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதுதான் பொருத்தமாக இருக்கும். கடந்த காலத்திலே வழங்கப்பட்ட அரசாணை, 2001 மார்ச்சோடு முடிவடைவதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அரசாணையை நீட்டித்தோ அல்லது சிறப்பு ஆணை வழங்கியோ, எல்லோருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2005 மார்ச் 7

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### சுனாமி நிவாரணத்திற்கு மத்திய அரசு தொகை விடுவித்துள்ளது பற்றி மாண்புமிகு நிதி அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் படித்துக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) படிக்க ஆரம்பித்திருக்கிறார். படித்து முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று சுனாமி ஆட்கொல்லிப் பேரலைகள், எவ்வித முன்னெச்சரிக்கையும் இன்றி, தமிழ்நாட்டு கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கின. இது முன்னெப்போதும் கண்டிராத வகையிலான பேரிடராகும். 8,018 நபர்களின் உயிர்களைப் பறித்து, இலட்சக்கணக்கான மக்களை உறைவிடமிழக்கச் செய்து, கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களின் வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்திச் சிதைத்த இப்பேரலைகள் கடற்கரையோரம் நெடுகிலும் அளப்பரிய பேரழிவை ஏற்படுத்தின.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய ஆணைப்படி தமிழக அரசின் அனைத்துத் துறைகளும் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள முடுக்கி விடப்பட்டன. சுனாமி பேரலைகளினால் ஏற்பட்ட பேரழிவு மற்றும் சேதங்களை விவரித்து, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக, மத்திய அரசிடமிருந்து 4,800 கோடி ரூபாய் நிதியுதவி கோரி, இந்த அரசு விரிவான கோரிக்கை மனு ஒன்றை அளித்தது. அத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 5,000 கோடி ரூபாய் செலவில், கடலோர பசுமைத் தடுப்புகள், மாங்கிரோவ் காடுகள், கருங்கற்களாலான கடற்தடுப்புச் சுவர்கள் மற்றும் கான்கிரீட் கடற்தடுப்புச் சுவர்கள் ஆகியவற்றை அமைப்பது உள்ளடக்கிய கடலோரப் பாதுகாப்புத் திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.



2005 மார்ச் 7] [திரு. சி. பொன்னையன்]

2-3-2005 அன்று நான் சட்டப் பேரவையில் 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்து ஆற்றிய உரையில், இதுவரையில் மத்திய அரசு 31-1-2005 ஆம் நாளிட்ட அனுமதி ஆணை ஒன்றின் மூலமாகவும், 24-2-2005 ஆம் நாளிட்ட மற்றொரு ஆணையின் மூலமாகவும், மாநில அரசுக்கு 1,726.72 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது என்றும், முன் பணமாக 250 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதைத் தவிர, இதுவரையிலும் மாநில அரசுக்கு வேறு நிதி ஏதும் விடுவிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக, 4-3-2005 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போது இது குறித்த பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மைய அரசு அனுமதித்த தொகையை இதுவரை மத்திய நிதி அமைச்சகம் இன்னும் விடுவிக்கவில்லை என்று எடுத்துரைத்தார். அப்போது சுனாமி பேரலைத் தாக்குதல் ஏற்பட்டு 2 மாதங்களுக்கு மேல் ஆன நிலையிலும், மத்திய அரசிடமிருந்து முன் பணம் தவிர, 31-1-2005 மற்றும் 24-2-2005 அன்று வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி பணம் ஏதும் மத்திய அரசு விடுவிக்கவில்லை என்பது தெளிவாக்கப்பட்டது. குறிப்பாக, மத்திய நிதி அமைச்சகம் ஏன் இப்படி தாமதப்படுத்தி வருகிறது என்று சட்டமன்றத்தில் 4-3-2005 அன்று விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக விளக்கமாகவும், தெளிவாகவும், மத்திய நிதி அமைச்சகம் ஏன் இந்த நிலையை எடுக்கின்றது என்றும், மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை ஏன் வழங்கவில்லை என்றும் ஆணித்தரமாக வினா எழுப்பினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தின் வாயிலாக உறுதியுடனும், திடமாகவும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியதன் விளைவாக, தற்போது அவசர அவசரமாக மத்திய அரசு 367.20 கோடி ரூபாய் நிதியை மாநில அரசுக்கு விடுவித்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். மத்திய அரசு 367.20 கோடி ரூபாய் நிதியை மாநில அரசுக்கு விடுவித்துள்ளது என்றும், இது மாநில அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் 5-3-2005 அன்று பாரத ரிசர்வ் வங்கியிடமிருந்து தகவல் பெறப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது விடுவிக்கப்பட்டுள்ள இந்த 367.20 கோடி ரூபாயையும், முன் பணமாக ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட 250 கோடி ரூபாயையும் சேர்த்து மொத்தம் 617.20 கோடி ரூபாய் மத்திய

அரசால் உடனடி நிவாரணம் (Relief and Response) என்ற தலைப்பின்கீழ் மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-0.5

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தருவதிலும், நிவாரணப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதுமே முனைப்பாகச் செயல்படுகிறார்கள் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### பேரவை விதி 224-ன்படி ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன புகழேந்தி, சொல்லுங்கள்,

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. அனுமதி ஏற்கெனவே மறுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. ஏற்கெனவே அனுமதி மறுக்கப்பட்டு, உங்களிடத்திலே கையெழுத்து வாங்கப்பட்டிருக்கிறது. அதை எழுப்புவதற்கு இப்போது இடமில்லை. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அனுமதி மறுப்பதற்கு பேரவைத் தலைவருக்கு முழு உரிமையும் உண்டு. பேரவை விதி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





224-ன்கீழ் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அனுமதி மறுத்த ஒன்றைப் பேரவையில் எழுப்புவதற்கு நிச்சயமாக நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் காலத்திலும் பின்பற்றக்கூடிய (குறுக்கீடுகள்) துரைமுருகன் (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே அனுமதி மறுத்திருக்கிறேன். ஏற்கெனவே அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலே எதுவும் ஏறாது. ஏற்கெனவே பின்பற்றப்படக்கூடிய விதிமுறைகளின் அடிப்படையில், 224-வது விதியின்கீழ் தாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பேரவையில் எழுப்புவதற்கு அனுமதி கிடையாது. ஆகவே, விதியைத் தாங்கள் மீறாதீர்கள். அனுமதி கிடையாது. திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) உங்களுக்கும், எனக்கும் பேரவை விதி என்பது பொது. விதிகளை ம்றி யாரும் செயல்பட முடியாது. (குறுக்கீடு) பேரவை விதி என்பது, துரைமுருகனுக்கும் பொது, எனக்கும் பொது. அந்த விதியின் அடிப்படையில்,, 224-வது விதியின் அடிப்படையில் நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்த ஒன்றை எப்படிப் பேரவையிலே எழுப்புவது? (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. கோவை தங்கம்.

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இதுகுறித்து உங்களுக்கு ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால், எந்த அடிப்படையிலே நான்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அனுமதி மறுத்தேன் என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், அறையிலே வந்து கேளுங்கள். முழு விளக்கத்தையும் நான் சொல்கிறேன். திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) துரைமுருகன், தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பெரிய Speaker ஒன்றும் இல்லை, சட்டமன்றத்திற்குத்தான் Speaker. 224-வது விதியினுடைய அடிப்படையிலே தாங்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையிலே அந்த அனுமதி மறுக்கப்பட்டது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், தாராளமாக என் அறைக்கு வாருங்கள், முழு விளக்கத்தையும், முழு விவரங்களையும் நான் சொல்கிறேன். அவையினுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

## 4. கவன ஈர்ப்பு

### கோயம்புத்தூர் மாவட்டம், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியையும் முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளியையும் தரம் உயர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றைத் தரம் உயர்த்துவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

**அறிக்கை**

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பங்குத் தொகை ரூ.1.00 இலட்சமும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பங்குத் தொகை ரூ.2.00 இலட்சமும் செலுத்தப்பட வேண்டும். கோவை மாவட்டம், அரசு உயர்நிலைப் பள்ளி, முடீஸ் சார்பாக ரூ.2.00 இலட்சம் பங்குத் தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, பொள்ளாச்சி மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் கருத்துரு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கோவை மாவட்டம், சேத்துமடையில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியே செயல்பட்டு வருகிறது. இப்பள்ளி சார்பாக ரூ.1.00 இலட்சம் பங்குத் தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, பொள்ளாச்சி மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் கருத்துரு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவே தரம் உயர்த்தலாம். நேரடியாக நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது. இந்நிலையில், வரும் கல்வி ஆண்டில் கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியினை அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும், கோவை முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் உரிய கருத்துருக்கள் பெற்று, அப்பள்ளிகள் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில் அவ்விரண்டு பள்ளிகளும் மலைப் பகுதிகளில் அமைந்திருப்பதால், அப்பள்ளிகளைத் தரம் உயர்த்த பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 640 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். இவர்களில் 90 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள். 10 சதவிகிதம் பேர் விவசாயக் கூலித் தொழிலாளர் குழந்தைகள்தான் படிக்கிறார்கள்.

[திரு. கோவை தங்கம்] [2005 மார்ச் 7

இந்தப் பகுதியைச் சுற்றி அண்ணா நகர், பொன்னாலம்மன் துறை, பழைய சர்க்கார்பதி, புதிய சர்க்கார்பதி, தம்மபதி, டாப் ஸ்லிப், கோழியமுத்தி போன்ற பகுதிகளிலிருந்து படித்து வருகிறார்கள். இங்கிருந்து சேத்துமடை நடுநிலைப் பள்ளிக்குச் செல்வதற்கு 10 கிலோ மீட்டர் தூரம் ஆகும். இங்கிருந்து வேட்டைக்காரன்புதூர் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்வதற்கு மேலும் 10 கி.மீ. தூரம் ஆகும். ஆகவே சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கவும், முடீஸ் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கவும் நான் கேட்டுக்கொள்கின்றேன். முடீஸ் உயர்நிலைப் பள்ளியில் 700 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். இங்கே 90 சதவிகிதம் பேர், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் ஆவார்கள். வால்பாறையில் இருப்பது ஒரே அரசு உயர்நிலைப் பள்ளிதான். இந்த அரசு மேல்நிலைப் பள்ளியில் 2,200 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். வால்பாறையிலே (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்வி மட்டும்தான் கேட்கலாம். சிறப்புச் சொற்பொழிவே ஆற்றிக்கொண்டிருந்தால் எப்படி? கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** வால்பாறையில் ஒரே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. அங்கே 2,200 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். குறிப்பாக, 90 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் ஆவார்கள். இவர்கள் இங்கிருந்து முடீஸ் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்வதற்கு எந்தவிதமான வசதி வாய்ப்பும் இல்லை. ஆகவே வால்பாறை முடீஸ் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சேத்துமடை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பங்குத் தொகை ரூ.1 இலட்சமும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பங்குத் தொகை ரூ.2 இலட்சமும் செலுத்தப்படவேண்டும். அதன்படி,



2005 மார்ச் 7] [திரு. சி.வி. சண்முகம்]

கோவை மாவட்டம் முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளி சார்பாக ரூ. 2 இலட்சம் பங்குத் தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, பொள்ளாச்சி மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் கருத்துரு பெறப்பட்டுள்ளது. கோவை மாவட்டம், சேத்துமடையில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியே செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியின் சார்பாக 1 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தலாம். ஆனால் நேரடியாக நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது. இந்நிலையில், வரும் கல்வியாண்டில் கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும், சேத்துமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியினை அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கும், கோவை முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் உரிய கருத்துருக்கள் பெறப்பட்டு, அப்பள்ளிகள் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவ்விரண்டு பள்ளிகளும் மலைப் பகுதிகளில் அமைந்திருப்பதால், அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, இப்பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. மகேந்திரன். (குறுக்கீடு) என்ன, ஏற்கெனவே கேட்டீர்களே?

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் 90 சதவிகிதம் பேர் படிக்கின்ற அந்த வால்பாறையில், முடீஸ் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், சேத்துமடை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், அதற்குத்தான் உள்ள விதிமுறைகளைப் பூராவும் சொன்னார்களே!

## 5. வரவு–செலவுத் திட்டம், 2005–2006, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்வதற்காக அனுமதி வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 மணித்துளிகள்.

**திரு. கே. மகேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையில், டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி இந்த உலகம் முழுவதும் கடுமையான துயரத்திற்கு ஆட்பட்ட சுனாமி பேரலைப் பேரழிவின் காரணமாக 8 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இறந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயிருக்கக்கூடிய சூழ்நிலையில், இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், இரண்டு கட்ட நிவாரணப் பணிகள் முடிவடைந்து, மூன்றாவது கட்ட நிவாரணப் பணிகள் துவக்கப்பட இருக்கின்றன என்ற விவரத்தை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் 4800 கோடி ரூபாய் நிதியுதவி கோரப்பட்டு, இன்றைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது போன்று, 617 கோடி ரூபாய் நிதி பெறப்பட்டிருக்கிறது. ஆயிரம் கோடி ரூபாய் நிதி, நம்முடைய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒதுக்கியிருக்கக்கூடிய ரூ.1726 கோடி நிதியோடு சேர்த்துப் பார்த்தால்கூட ரூ. 2726.72 கோடியில்தான் நிதி என்பது வருகிறது. நம்முடைய கோரிக்கை என்பதே 4800 கோடியாக இருக்கும்போது, மீதம் 2100 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால், உண்மையிலேயே பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும், சுனாமியால் ஏற்பட்ட பேரழிவினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் முழுமையாகக் கிடைப்பதற்கு இந்த அரசு



என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

அதேபோன்று, இன்றைக்கு மீன்பிடித் தொழிலோடு சேர்ந்திருக்கக்கூடிய பல உப தொழில்களில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லை என்ற விவரமும் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. 5 தினங்களுக்கு முன்புகூட தமிழகத்தினுடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சீனிவாசபுரம் சென்றிருந்தபோது, அங்கே பாதிக்கப்பட்ட மீனவர்கள் எல்லாம் தங்களுக்கு முழுமையாக நிவாரணம் கிடைக்கவில்லை என்ற கோரிக்கையை முன் வைத்தார்கள் என்ற விவரம் பத்திரிகையில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையில் வந்த தவறான செய்தியைப் படித்துவிட்டு இங்கே பேசுகின்றார்கள். அங்கே இரு சாராருக்கும் ஒரு அடிதடிப் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாகப் போய், சமாதானம் செய்து அனுப்பி வைத்துவிட்டு வந்தேன். நிவாரணம் தருவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையான நிவாரணம் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மீன் வியாபாரத்திலே ஈடுபடக்கூடியவர்களுக்கு இன்றைக்கு வரையிலும் நிவாரணம் கிடைக்கவில்லை என்ற கோரிக்கை சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. விசைப் படகுகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு இன்றைக்கு வரையிலும் நிவாரணம் கிடைக்கவில்லை என்ற கோரிக்கை வந்துகொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடமும் இந்தக் கோரிக்கை ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று சுனாமி பேரலையால் காணாமல் போனவர்கள் பற்றி இதுவரை முழுமையான விவரம் அறிவிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிக் காணாமல் போனவர்களுக்கு உடனடி நிவாரணம் கொடுப்பதற்கான அரசாணை வெளியிட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால், இறந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காணாமல் போனவர்களுக்கான நிவாரணம் இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது.

7 ஆண்டுகளுக்குப் பின்புதான் அது வழங்கப்படும் என்றால், உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தக் குடும்பங்களுக்கு முழுமையான நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் முன்வைக்க விரும்புகிறோம்.

**•மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 ஆண்டுகள் கழித்துத்தான் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவது தவறான கருத்து. அந்தக் குறிப்பிட்ட மீனவர் அங்கே இல்லை என்று அந்த ஊர்ப் பஞ்சாயத்து முடிவு செய்து, அங்குள்ள Local அதிகாரிகளும், அரசு அமைத்திருக்கிற அந்தக் குழுவும் முடிவு செய்துவிட்டால், உடனே நிவாரணத்தைத் தரலாம் எனக் கூறி நிவாரணம் தரப்பட்டு வருகிறது. தரப்பட்டு முடிந்துவிட்ட நிலையில் இருக்கிறது.

**திரு. கே. மகேந்திரன்:** வழங்கப்பட்டிருந்தால் நன்றி. அதேபோன்று, சுனாமி ஏற்பட்டதால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்கு 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு சுட்டிக்காட்டினார்கள். ஏற்கெனவே கடந்த ஆண்டு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு 12 கோடி ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கான அரசாணை வழங்கப்பட்டிருந்தாலும்கூட, பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு முழுமையான நிவாரணம் இன்றுவரை கிடைக்கவில்லை என்கிற விவரம் விவசாயிகளால் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், இப்போது ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாய நிலங்களுக்கான இந்த நிதி உடனடியாக விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, சுனாமி பேரலையினால் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பேரழிவைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். சென்னை மாநகரம் உட்பட தமிழகம்...



முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், சுனாமியாலே பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு, நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று, 16 கோடியே 96 இலட்சத்து 16,000 ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டத்திற்காக ரூ.1195.89 இலட்சமும், கன்னியாகுமரி மாவட்டத்திற்காக ரூ.1.50 இலட்சமும், கடலூர் மாவட்டத்திற்காக ரூ.210.15 இலட்சமும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக ரூ.93.75 இலட்சமும், விழுப்புரம் மாவட்டத்திற்காக ரூ.194.87 இலட்சமும், ஆக, 16 கோடியே 96 இலட்சத்து 16,000 ரூபாய், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்கிற நல்ல தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோன்று, பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், சம்பந்தப்பட்ட உரிய ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களாலேயே தொகை வழங்கப்பட்டிருக்கின்றது என்கின்ற தகவலையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கப்படவில்லை என்று நான் சொல்லவில்லை. ஒதுக்கப்பட்ட நிதி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக போர்க்கால அடிப்படையிலே கிடைக்க வேண்டுமென்றுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக...

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய தொகை மாண்புமிகு அம்மா அவர்களாலே வழங்கப்பட்டுள்ளது என்பதை மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒதுக்கியிருப்பதை நாங்கள் மறுக்கவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று, அனைத்துக் கட்சிக் குழுவைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். ஏன் என்றால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட

நாடாளுமன்ற உறுப்பினர் சுனாமி பேரலையினுடைய அந்தக் கூட்டங்கள் நடைபெறுவதற்குக்கூட அழைக்கப்படாத நிலைமை இருப்பதாகத் தகவல் சொல்லப்படுகிறது. அதையும் களைவதற்கான முயற்சிகளை...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான குற்றச்சாட்டை இங்கே கூறிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லோருமே அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கூட்டத்திற்கு வந்து பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது, முதலிலே நடந்த ஒரு கூட்டத்திற்கு, பொதுவாக நடத்தப்பட்ட கூட்டத்திலே நாடாளுமன்ற உறுப்பினர் வந்து கலந்துகொண்டார்களே தவிர, மற்ற எந்தக் கூட்டங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அழைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினரோடு இது சம்பந்தமாக ஆலோசிக்கப்படவோ அல்லது அவரோடு இது சம்பந்தமாக interact பண்ணி, யார் யார் பாதிக்கப்பட்டவர்கள், எப்படி அது கொடுக்கப்படுகிறது என்பது சம்பந்தமாக எந்தவித ஆலோசனையும் நாடாளுமன்ற உறுப்பினரோடு செய்யப்படவில்லை என்பது அவராலேயே பத்திரிகையிலே பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். பல்வேறு கூட்டங்களிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்து நடந்த கூட்டத்திலே மீண்டும் அவர்கள் வந்திருக்கிறார்கள். நீங்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்று நீங்களே என்னிடம் கூறினீர்கள். ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர் வரவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கூட்டத்திற்குத்தான் நாடாளுமன்ற உறுப்பினர் அழைக்கப்பட்டாரே தவிர, மற்றபடி அழைக்கப்படவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி. திரு. மகேந்திரன், பேசி முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே சார். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேலையில்லாத இளைஞர்கள், 53 இலட்சம் இளைஞர்கள் வேலையில்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி பேரலையால் சேதமடைந்த பயிர்களுக்காக உழவர்களுக்கு இதுகாறும் நிவாரணம் வழங்குவதற்காக 1 கோடியே 80 இலட்சத்து 13 ஆயிரத்து 930 ரூபாய் வழங்க ஆணையிடப்பட்டு, அது வழங்கப்பட்ட நிலையில் இருக்கிறது.

**திரு. கே. மகேந்திரன்:** வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் 53 இலட்சம் இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு வேலையில்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அந்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டம் அரசாங்கத்தால் உருவாக்கப்பட வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரை, காவல் துறையில் மட்டும்தான் புதிதாக வேலைக்கு ஆள் எடுக்கக்கூடிய பணிகள் நடைபெறுகின்றனவே தவிர, ஏனைய துறைகளிலே இப்படிப்பட்ட பணிக்கு ஆட்களை எடுக்கக்கூடிய நிலைமை இல்லை. வேலை நியமனத் தடை உத்தரவு என்பது தமிழகத்திலே அமலாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்டு, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது, மாண்புமிகு முதல்வர் அவர்களால். 2054.69 கோடி ரூபாய் செலவிலே இந்த ஆண்டும் அந்தத் திட்டம் தொடரும் என்று நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் என்று வரும்போது, இன்றைக்கு சென்னை மாநகர மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கக்கூடிய

போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவது, 2002 ஆம் ஆண்டு துவக்கத்தில் சென்னை மாநகரத்திலே பெரு மழை பெய்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்.கே. நகர் சட்டப் பேரவைத் தொகுதிக்கும், என்னுடைய தொகுதிக்கும் வருகை தந்தபோது, வியாசர்பாடி பகுதியில் இரயில்வே மேம்பாலம் 25 கோடி ரூபாயிலே அமைக்கப்படும் என்று 3 ஆண்டுகளுக்கு முன்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அங்கே ஒரு கான்கிரீட் சாலையும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். கான்கிரீட் சாலைப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வியாசர்பாடி மேம்பாலப் பணிகள் துவக்கப்படாமல் இருக்கின்றன. மத்திய அரசுகூட இரயில்வே பட்ஜெட்டிலே 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருப்பதாகத் தகவல் சொல்லப்படுகிறது. உடனடியாக வியாசர்பாடி மேம்பாலத் திட்டம் துவக்கப்பட வேண்டும்.

*முற்பகல் 11-25*

அதேபோன்று, 1998 ஆம் ஆண்டு பெரம்பூர் இரயில்வே மேம்பாலப் பணிகள் துவக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டு அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பணிகள் நிறுத்தப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு பெரம்பூர் பகுதியிலே கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இரவு நேரங்களில் 7 மணிக்கு மேலாக, 2 மணி நேரம், 3 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய காரணத்தினால், நிறுத்தப்பட்டிருக்கக்கூடிய பெரம்பூர் மேம்பாலப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டும்.

அதேபோன்று, கொருக்குப்பேட்டை, மூலக்கடை, டி.வி.எஸ். லூகாஸ் போன்ற பகுதிகளிலே இன்றைக்குக் கடுமையான போக்குவரத்து நெரிசல், மேம்பாலங்கள் இல்லாத காரணத்தினால் இருந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதிகளிலும் மேம்பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை இந்த பட்ஜெட் கூட்டத்திலே நாம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் வடசென்னைப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஒரு concrete proposal, பெரம்பூரிலே ஒரு மேம்பாலம்;



அதேபோன்று வியாசர்பாடியிலே ஒரு மேம்பாலம்; இராயபுரம் தொகுதிக்குட்பட்ட ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரிக்கு அருகிலே ஒரு சுரங்கப் பாதை; அதேபோல, ஆர்.கே. நகர் தொகுதியிலும், கொருக்குப்பேட்டை பகுதியிலும், அதேபோன்று போஜராஜ நகரிலும் பாலங்கள் அமைப்பதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே மாநில அரசு முழுமையான அளவிற்கு ஒப்புதல் அளித்து, சென்னை மாநகராட்சியிலே அதற்கான ஒப்புதலும் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தப் பாலத்திற்குட்பட்ட பகுதியிலே பாலம் கட்டப்பட வேண்டும் என்றால், மத்திய அரசுதான் அதற்கு அனுமதி அளித்து, நிதியும் ஒதுக்கப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மத்தியிலே இருக்கின்றார்கள். உடனடியாக அவர்கள் மத்திய அரசு சார்ந்த அந்த நிதியை விடுவித்துக் கொடுத்தால், மாநில அரசு உடனடியாக அந்தப் பணிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன; மாநில அரசாங்கம் உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு பேசி, அந்த நிதியைப் பெற்று நம்முடைய மேம்பாலங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அனைவருக்கும் கல்வி என்ற தலைப்பிலே ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் 100 சதவிகித மாணவர்கள் பள்ளிக்கு வருவதை உத்தரவாதப்படுத்தியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை, அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. ஆனால் இன்றைக்குக் கல்வியினுடைய தரத்தைப் பொறுத்தவரை, தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசுப் பள்ளி, அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், அதேபோன்று நகராட்சியினுடைய பள்ளிகளில் எல்லாம், போதுமான ஆசிரியர்கள் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக, 1:40 என்ற அடிப்படையில் மாணவர்-ஆசிரியர் விகிதாச்சாரம் வந்ததற்குப் பின்புகூட, காலியாக இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஆசிரியர் பணியிடங்களை—

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களை— குறிப்பாக, இந்த ஆண்டு 2004-2005-ல் இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்கள், மொத்தப் பணியிடங்கள், 22,817 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்ற பணியிடங்கள் கணக்கிடப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டுமென்று ஆணையிட்டதால் அந்தப் பணியிடங்கள் இந்த ஆண்டு நிரப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்த 2001 முதல் 2005 வரைக்கும் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, 46,494 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப அனுமதிக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** நிரப்பப்படாமல் இருக்கக்கூடிய ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். நான் அதை வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேந்திரன், முடித்து விடுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** தனியார் கல்விக்கான முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. சட்டக் கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்றால், self -financing-இல் துவக்கிக் கொள்ளலாம் என்று அறிவிக்கிறார்கள். அதேபோன்று, அரசுக் கல்லூரிகளிலே புதிய பாடப் பிரிவுகள் துவங்கப்பட வேண்டும் என்றால், சுயநிதி அடிப்படையிலே துவக்கலாம் என்ற அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. புதிய கல்லூரிகள் துவக்கப்படுவதற்குப் பல்கலைக்கழகங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்ற அறிவிப்புகள் வருகின்றன என்றால், தனியார் கல்வி என்பதுதான் தமிழகத்திலே கூடுதலாக வந்து கொண்டிருக்கின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரை சாதாரண மக்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வியிலே முன்னேற வேண்டும் என்றால், அரசு கல்வித் துறையிலே கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருப்பது, நாட்டினுடைய மருத்துவ வசதிகளில் சென்னை மாநகரம் மருத்துவத்தினுடைய தலைமை நகரமாக மாறுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரத்தில் நீண்ட காலமாக, 100 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்படக்கூடிய ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை, பழுதடைந்த கட்டடங்கள் கூடுதலாக இருக்கக்கூடிய ஒரு மருத்துவமனையாக ஸ்டேன்லி மருத்துவமனை இருந்து கொண்டிருக்கின்றது. அரசு பொது மருத்துவமனைக்கு 106 கோடி ரூபாயிலே இரண்டு கோபுரக் கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, ஸ்டேன்லி மருத்துவமனை...



*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் கிட்டத்தட்ட 8 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டி முடிக்கும் தருவாயில் இருக்கிறது.

**திரு. கே. மகேந்திரன்:** ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் போதுமான கட்டடங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, நகர்ப்புற சுகாதார மையங்கள் அமைக்கப்படுமென்று 2002-2003 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அன்றையதினம் அறிவித்தார்கள். ஆனால் நகர்ப்புற சுகாதார மையங்கள் அமைக்கக்கூடிய கருத்துரு எதுவும் இல்லை என்று இப்பொழுது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்; முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராசேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இரண்டு நிமிடம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும் அப்படிக் கூறியதே கிடையாது. நாங்கள் எப்போது கூறினோம் என்பதை நீங்கள் விளக்கமாகக் கூற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேந்திரன், முடித்து விடுங்கள். வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** அதேபோன்று, இரண்டு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. இன்னும் ஏழு பேர் பேச வேண்டும். திரு. இராசேந்திரன். (குறுக்கீடு)

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அமைக்கப்படக்கூடிய கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் குறைந்த செலவிலே மருத்துவ வசதி செய்து கொடுக்கும் என்று அறிக்கையிலேயே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சாதாரண மக்களுக்கு இலவசமாக மருத்துவம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தடை செய்யப்பட்ட புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு, அதற்கான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 1966 ஆம் ஆண்டு பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு 40 ஆண்டு காலமாக, அரசால் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த பட்டாக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பொதுவாக மத்திய அரசு சார்ந்த, மத்திய அரசு வழங்குகின்ற பல்வேறு நிதிகளின் அடிப்படையிலே நாட்டிலே பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கான அமைப்பு எனற அடிபபடையல இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, ஊராட்சி வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான நிதி என்பது தமிழக அரசினால் ஒதுக்கப்படாத சூழ்நிலையில், மத்திய அரசினால் ஒதுக்கப்படுகின்ற பல்வேறு திட்டங்களின் அடிப்படையிலே இன்று ஊராட்சி அமைப்புகளிலே பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகின்ற சூழ்நிலையில், தமிழக அரசினால் போதிய நிதி ஆதாரம் ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல, மத்திய அரசு நிதியை மட்டுமே தமிழகத்தில் இன்றையதினம் பயன்படுத்துவதில்லை. மத்திய அரசு கொடுக்கின்ற நிதியில் 75 சதவீதமும், 25 சதவீதம் மாநில அரசு நிதியையும் செலுத்தித்தான் ஒவ்வொரு செயல்பாட்டிலும் செய்யப்படுகிறது. எந்த ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றாலும், அதற்கு மாநில அரசு 25 சதவீதத்தைப் பயன்படுத்திக்கொள்கிறது. அப்படிப் பயன்படுத்துகின்ற வகையிலேதான் இன்று இந்தியாவிலே தமிழகம் அதிக நிதியைப் பயன்படுத்துகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் நம்முடைய மாநில அரசினுடைய நிதியை அதிகமாகக் கொடுத்து மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** விளக்கத்திற்கு நன்றி. குறிப்பாக, S.G.R.Y. போன்ற திட்டங்கள் மத்திய அரசினால் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் மாநில அரசினால் 25 சதவீதம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, பிரத்தியேகமாக இன்று உள்ளாட்சி நிருவாகங்களில் இருக்கின்ற மின்சாரக் கட்டணங்களைக்கூட செலுத்துவதற்கு நிதி இல்லாத சூழ்நிலை பல்வேறு ஊராட்சி மன்றங்களிலே இருக்கின்றது. அதுபோன்ற நிலையை மாற்றுவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையிலே வேலைவாய்ப்புக்குப் பதிவு செய்தவர்கள் என்ற அடிப்படையில் 2003 ஆம் ஆண்டு இறுதியில் 48.76 இலட்சம் பட்டதாரிகள் பயனடைந்தார்கள் என்ற அடிப்படையிலே, 2004 ஆம் ஆண்டு இறுதியில் 41.51 இலட்சமாக அது குறைந்துள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றார்கள். கிட்டத்தட்ட 7.25 இலட்சம் பேர் வேலைவாய்ப்புக்களைப் பெற்றார்களா? இந்த அரசு அந்தப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தார்களா? மூடிய தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற இதுபோன்ற நிகழ்வுகள் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படவில்லை என்பதை நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இதுபோன்ற நடவடிக்கைகளை அரசு எதிர்காலத்திலே மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகின்றேன். அதேபோல அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்...

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த பதிவுதாரர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு ஆதாரமாகக் குடும்ப அட்டை—மாவட்டத்திற்குள்ளே முகவரி மாற்றுவதற்குக் குடும்ப அட்டை; பதிவை வேறு மாவட்டத்திற்கு மாற்றுவதற்கு, மாற்றிச் செல்லும் மாவட்ட உரிமை முகவரி குடும்ப அட்டையும், வட்டாட்சியர் அலுவலகக் குடும்பக் குடிபெயர்ச்சிச் சான்றிதழ் பெற்று வேலைவாய்ப்பு அலுவலகத்திலே அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதன் காரணமாக பதிவு செய்துகொள்வது மேலும் முறைப்படுத்தப்பட்டதாலும், பதிவு எண்ணிக்கை குறைந்துள்ளது. எனினும், 2003 ஆம் ஆண்டு பணி வாய்ப்பு அதிகம் கிடைக்கப்பெற்றுள்ளதால் இந்தப் பதிவுதாரர்கள் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** அவ்வாறு பதிவு செய்வதிலே, இழந்த சூழ்நிலையில், அவர்களுக்கு மீண்டும் பதிவு செய்வதற்கான ஆய்வு எதுவும் செய்து அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலும், ஏற்கெனவே பெற்று வந்த சலுகைகளை, பறித்த அந்தச் சலுகைகளை மீண்டும் அரசு வழங்கியிருக்கிறதே தவிர, அவர்களுக்கான பல்வேறு சலுகைகள்—ஈட்டிய விடுப்புச் சலுகைகள் போன்றவை வழங்கப்படவில்லை. அதைப்போல, bonus போன்ற சலுகைகளை அரசு இன்னும் அறிவிக்கவில்லை. அந்த அறிவிப்பையும் வெளியிட வேண்டுமென்று இந்தத் தருணத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதைப்போல, வாரிசுதாரர்களுக்கு, அதாவது பணியிலே இருக்கிறபோது இறந்தவர்களுடைய வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம் என்பது, அந்தத் தடைச் சட்டம் என்பது அமலிலே இருக்கிறது. ESMA, TESMA போன்ற தடைச் சட்டங்கள் அமலில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்குவதற்கு அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை என்ற அடிப்படையில், அதை நீக்குவதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



அதைப்போல, அரசு அலுவலகங்களில் பல்வேறு துறைகளிலே நிரப்பப்பட வேண்டிய பல்வேறு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்புவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்தத் தருணத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, 2004-2005 ஆம் ஆண்டு, கிட்டத்தட்ட 40 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன என்று அரசு அறிவித்திருந்தாலும்கூட, 2005-2006-ல் 4 பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இந்த ஆண்டிற்குள் முடிக்கப்படும் என்றும், அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக, கிட்டத்தட்ட 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் ரூ.389.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 19.7 இலட்சம் மக்கள் பயன் அடையக்கூடிய அளவிலே, அந்தக் குடிநீர்த் திட்டங்கள் இந்த ஆண்டிலே முடிக்க வேண்டுமென்பது அரசின் திட்டம் என்றாலும்கூட, அதிலும் குறிப்பாக, பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், அத்திக்கடவு-அவினாசி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். அதைப்போல, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசு அறிவித்து, அதை முழுமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது, பெரும் பகுதித் திட்டங்கள், தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 530 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இதிலே பெரும்பாலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஆற்றுப் படுகைகளிலே எடுக்கப்படுகின்ற காரணத்தினால், அந்த ஆற்றுப் படுகையிலே எடுக்கப்படுகின்ற அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்—பல்வேறு இடங்களில் அரசு பொதுப் பணித் துறை மூலமாக அந்த ஆற்றுப் படுகைகளில் மணல் அள்ளுவதற்கு அனுமதி கொடுத்ததன் காரணமாக, அதிலும் குறிப்பாக, தாமிரபரணி...

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு தனியாரிடம் மணல் அள்ளுகின்ற உரிமை விடப்பட்டபொழுது ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்காக உயர்மன்ற, உயர்மட்டத்தினுடைய அறிவுரைப்படி, அரசே தற்போது ஆற்றிலே இருக்கின்ற மணலை அள்ளிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, குடிநீர் ஆதாரங்கள்

இருக்கின்ற நீர்நிலைகளுக்கு மேலும், கீழும் 500 மீட்டர்களுக்கு மணல் அள்ளப்படுவதில்லை. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பகுதியில் குடிநீர் பாதிக்கப்படுகிறது என்ற கருத்தினைச் சொன்னால், உடனடியாக நாம் அந்தப் பகுதியில்—எந்தப் பகுதியிலும் குடிநீர் ஆதாரம் பாதிக்கின்ற வகையில் மணல் அள்ளுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்தினை அளித்திருக்கின்றார்கள். அதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே சில கருத்துகளை இங்கு நான் பதிய வைக்க விரும்புகிறேன். தாமிரபரணி ஆற்றுப் படுகையிலே தாமிரபரணியிலேயிருந்து, மருதூர் வரை, கிட்டத்தட்ட 60 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, 4 மாவட்டங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அங்கே செயல்பட்டு வருகின்றன. ஆனால் நான் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக அந்தப் பகுதியிலே நேரடியாக ஆய்வு செய்ததன் அடிப்படையில், அரசு விதிகளுக்குப் புறம்பாக 10 அடி முதல் 15 அடி வரை ஆழமாக அந்தப் பகுதியிலே மணல் எடுக்கப்பட்டிருந்தது. அதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை...

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மணல் எடுப்பதை ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 1 மீட்டர் ஆழத்திற்கு மேல் எந்தப் பகுதியிலும் மணல் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக எந்தப் பகுதியில் ஆழம் அதிகமாக மணல் எடுக்கப்பட்டிருக்கிறது என்ற கோரிக்கையைத் தருவார் என்றால், உரிய சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 2 நிமிடத்திலே பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** பேச்சை முடித்து விடுகிறேன்.(குறுக்கீடு)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** Point of order.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், 2 நிமிடத்திலே பேச்சை முடித்து விடுங்கள். பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) முடிக்கட்டும்.

**திரு, டி.பி.எம். மைதீன்கான்:** ஒரு நிமிடம் கொடுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், 2 நிமிடத்திலே பேச்சை முடித்து விடுங்கள். முடியுங்கள், (குறுக்கீடு) முடிக்கட்டும். அவர் முடித்தவுடனே பேசலாம்.

**திரு. சோ. இராசேந்திரன்:** தாமிரபரணி ஆற்றுப் படுகையிலே, அதிலும் குறிப்பாக சீவலப்பேரி, சந்தைப்பேட்டை கிராமப் பகுதியிலே அரசு அனுமதி பெற்று அங்கு மணல் எடுக்கப்படுகிற சூழ்நிலை, அரசு விதிகளுக்குப் புறம்பாக மணல் எடுக்கப்பட்டிருக்கிறது. நான் நேரிலேகூட சென்று ஆய்வு செய்தேன். கிட்டத்தட்ட 15 அடி ஆழத்திற்கு அங்கே மணல் எடுக்கப்பட்டிருக்கின்றது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், அதிலும் குறிப்பாக, 4 மாவட்டங்களுக்குச் செல்கின்ற கோவில்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பிரதான திட்டமாக அங்கே அமைந்திருக்கிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம், விருதுநகர் போன்ற மாவட்டங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அந்தப் பகுதியில் செயல்பட்டிருக்கின்ற சூழ்நிலையினால் இதை அரசு கவனித்து ஆய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இங்கு அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு, அதிலும் கட்டடத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமென்று அரசு அறிவித்திருந்தாலும்கூட ஒரு நிர்ணயமாக, எந்தத் தேதியிலிருந்து அது அமலுக்கு வரவேண்டுமென்று அரசு திட்டமிட்டு அறிவிக்கப்படாத சூழ்நிலையில் அதை அரசு கவனத்தில் கொண்டு, அந்த அறிவிப்பு வெளியிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு...

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு சாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு

சமூகப் பாதுகாப்பு அளிக்கவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, அவற்றைச் செயல்படுத்த ஒரு வாரியம் அமைக்க இச்சட்டம்மூலம் வழிவகை செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கித் தந்துள்ளார்கள். கட்டுமானத் தொழிலாளர்களுக்கான 4 வகைத் தொழில் இனங்களில், 38 வகையான தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பதிவு செய்து கொண்டு, பல உதவிகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அணைகள், பாலங்கள், சாலைகள் ஆகியவற்றைக் கட்டுதல் மற்றும் பராமரிப்பு, இதர கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் தொழில்கள், கல் உடைத்தல், கல் வெட்டுதல் தொழிற்சாலைக்கு உட்பட்ட செங்கல் தொழிற்சாலை, பந்தல் கட்டுதல் ஆகியவை, இத்தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள். தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் நலத் துறையைச் சார்ந்த 16 மண்டல அலுவலகங்களில் கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பதிவு செய்யும் பணி, 214 தொழிலாளர் உதவி ஆய்வர் மூலமாகச் செய்யப்படுகிறது. 1994 முதல் 12-5-2001 வரை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 4567 தொழிலாளர்களுக்கு மட்டும்தான் நல உதவியாக 1 கோடியே 2 இலட்சத்து 93 ஆயிரத்து 876 ரூபாய் வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 47,107 தொழிலாளர்களுக்கு நல உதவியாக 15 கோடியே 92 இலட்சத்து 41 ஆயிரத்து 989 ரூபாய் வழங்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தை அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் நான் கேட்க விரும்புவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்

**திரு. சோ. இராசேந்திரன்:** பேச்சை முடித்து விடுகிறேன். அதாவது, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அரசு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எந்தத் தேதியிட்டு அமலுக்கு வரும் என்பதை நான் அறிய விரும்புகிறேனே ஒழிய, வேறல்ல. அதேபோல விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நல வாரியம் அமைப்பதற்காக அந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களிடம்



கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் அளவுக்கு வசூல் செய்யப்பட்டு அரசினுடைய நிதியிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு நல வாரியம் தொடங்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அமைப்பு சாராத் தொழிலாளர் விடுக்கின்ற பல்வேறு சலுகைகளைப் பெறுகின்ற விண்ணப்பங்கள், நல வாரியத்தால் பெருமளவிலே முடக்கப்பட்டு, அதை வழங்குவதற்கு மிகவும் அதிகமான காலதாமதம் ஏற்படுகின்றது. இதைக் கருத்திலே கொண்டு, அந்த நல வாரியத்திலே கோரிக்கை விடுக்கின்றனர். பல்வேறு சலுகைகளை உடனடியாக அவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கபெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

*முற்பகல் 11-45*

அதேபோல், தொடக்கக் கூட்டுறவு வங்கிகளிலே அரசினுடைய சாதனையாக, சென்ற ஆண்டு பயிர்க் கடன் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்துமட்டிலும் அங்கே இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு முறையாக விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படாத சூழ்நிலை நிலவுகின்றது. அதில் தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டும். முறையாக விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குவதற்கு எதிர்காலத்திலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, புதிய கடன் வழங்குவது என்பது, 1037.68 கோடி ரூபாய் என்று அரசு அறிவித்தது. அதில் தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே அந்த மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடனுக்கு வரவு வைக்க வேண்டிய சூழ்நிலைதான் ஏற்பட்டது.

அதேபோல--கூட்டுறவு வங்கிகளிலே deposit செய்த சில பேர்-- தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும், அங்கே இருக்கின்ற தொடக்கக் கூட்டுறவு வங்கிகளிலே deposit செய்த, Fixed Deposit செய்த அந்த விவசாயிகளுடைய பணம் திருப்பித் தரமுடியாத சூழ்நிலை உள்ளது. அந்தக் கால அளவு முதிர்வு ஏற்பட்டும்கூட...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, அந்த மாவட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகை 100 சதமானம் அளவிற்கு விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்திற்கு என்று 14 கோடி ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. 14 கோடி ரூபாய் ஒதுக்கீடு, நிர்ணயம். ஆனால் அந்த மத்திய வங்கி, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கடனை முறையாக வழங்காது, அந்தத் தவணை நீட்டிப்பு என்பது முறையாகக் கொடுக்காது...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தவணை நீட்டிப்பு என்பது வேறு. பயிர்க் கடன் வாங்கி, நீண்ட காலமாக, 2001 ஆம் ஆண்டு, 2002 ஆம் ஆண்டு, 2003 ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டு, கடந்த காலத்திலே, வறட்சியின் காரணமாக வழங்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க் கடனைத் திரும்பச் செலுத்த இயலாத விவசாயிகள், அவர்கள் விருப்பப்படுகிறபோது, இரண்டு ஆண்டுகள் வசூல் செய்வது இல்லை என்றும், அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் சம தவணையாகத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ற வகையிலும், வட்டியை 9 சதவீதமாகவும் குறைத்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் போட்டிருக்கிற சிறப்புத் திட்டம்தான் பயிர்க் கடனை நீட்டித்துக் கொடுக்கிற திட்டம். குறுகிய காலப் பயிர்க் கடனை நீண்ட காலப் பயிர்க் கடனாக மாற்றிக் கொடுக்கிற திட்டமாகும். ஆனால், கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களைப் பொறுத்தவரையிலே, ஒதுக்கப்பட்ட 14 கோடி ரூபாயிலே, இதுவரையிலே 13 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கான தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் புதியதாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பயிர்க் கடன்தானே தவிர, கணக்களவிலும், ஏட்டளவிலும் வரவு வைக்கப்பட்டவை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** ஒரு நிமிடத்திலே உரையை முடித்துவிடுகிறேன். அதேபோல் தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள், பொது மக்கள் deposit செய்த அந்தத் தொகை என்பது, கால முதிர்வு பெற்ற



பின்பும்கூட வழங்கப்பட முடியாத சூழ்நிலை இருக்கின்றது. நஷ்டத்தில் இருக்கின்ற கூட்டுறவு வங்கிகளைப் புனரமைப்பதற்கும் இந்த நிதியைத் திரும்ப அளிப்பதற்கு அரசினுடைய செயற்குறிப்பிலே ஏதாவது திட்டம் இருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த deposit தொகை எல்லாம் பெறப்பட்ட ஆண்டு என்பது, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை உள்ள ஆண்டுக் காலத்திலேதான். இவற்றினை—அந்தக் காலகட்டங்களிலே கூட்டுறவு வங்கிகளை நிர்வகித்தவர்கள், அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அந்த வங்கிகளினுடைய தலைவர்களாகச் செயல்பட்ட காலங்களிலே, கூட்டுறவு வங்கிகளுடைய பணியாளர்களுக்குக் கூடுதலாகச் சம்பள உயர்வு கொடுத்து, இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று, உதாரணமாக 6,000 ரூபாய் சம்பளம் ஒரு கூட்டுறவு வங்கியினுடைய செயலாளர் பெற்றுக்கொண்டிருந்தார் என்று சொன்னாரென்றால், அவருக்கு 18,000 ரூபாய், 20,000 ரூபாய், இன்னும் சில கூட்டுறவு வங்கிகளுடைய செயலாளர்களுக்கு 25,000 ரூபாய் என்கின்ற அளவிற்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்ததோடு அல்லாமல், 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் பின்தேதியிட்டு அந்தச் சம்பளத் தொகையை எடுத்துக்கொண்டு,ஏராளமான பொது மக்களுடைய deposit-ஐப் பெற்றுக்கொண்டு, அதைச் சம்பளமாக எடுத்துக்கொண்டு, அப்போது இருந்த நிர்வாகஸ்தர்களும், வங்கிகளுடைய நிர்வாகிகளும், வங்கிகளுடைய செயலாளர்களும் அதைப் பகிர்ந்துகொண்ட காரணத்தினால், பெருவாரியான தொகைகள் வங்கிகளிலே deposit-ஆக ஏழை, எளிய பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட பணம், திரும்ப அளிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பது என்பது உண்மைதான். அவற்றையெல்லாம் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களால் சிறப்பான திட்டம் வகுக்கப்பட்டு, விரைவில் அவற்றைச் சீரான முறையிலே வழங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியினைச் சொல்லிக்கொள்கிறேன்.

அந்த நேரத்திலே உரிய முறையிலே மக்களிடத்திலே deposit-களை, பல்வேறு ஆசை வார்த்தைகளைச் சொல்லி, கூடுதலான வட்டி விகிதத்தைச் சொல்லி, 16 சதவீதம், 15 சதவீதம் என்றுகூட வட்டி விகிதத்தைப் பொது மக்களிடத்திலே அறிவித்து, கூடுதலாக deposit பெறப்பட்டு, ஏறத்தாழ 2,800 கோடி ரூபாய் அளவிற்கு அந்த நேரத்திலே

5 ஆண்டு காலத்தில் deposit-ஆகப் பெறப்பட்டு, பல்வேறு வகையில், முறையற்ற நிறுவனங்களில் அவையெல்லாம் மூலதனமாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியையும் சொல்லி அமர்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியைத் திரும்ப வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்கள் என்ற ஓர் அறிவிப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கின்றார்கள். அதற்காக இந்த அரசுக்கு நன்றி சொல்வதோடு, விரைந்து அதை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்றே ஒன்று, கோவில்பட்டி தொகுதிப் பிரச்சினையைச் சொல்லி என் உரையை நிறைவு செய்யலாம் என்றிருக்கின்றேன். கோவில்பட்டியிலே இரண்டு இரயில்வே மேம்பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த மேம்பாலப் பணிகள் மிகவும் மந்தமான சூழ்நிலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் கோவில்பட்டி நகருக்குள் பல்வேறு போக்குவரத்து இடைஞ்சல்கள் ஏற்படுகின்ற அந்தச் சூழ்நிலையில், அந்த மேம்பாலப் பணிகளை விரைந்து முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வதில்தான் சில தாமதங்கள் ஏற்பட்டன. பணி ஆரம்பிக்கப்பட்டவுடன், மிகவும் துரிதமாக, வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே என்னிடம் சில மாதங்களுக்கு முன்பாகத் தெரிவித்திருந்தார்கள். அந்தப் பணியை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியை விரைவாக முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே கூறியிருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். திரு. ப. அரசன் பேச வேண்டும்.

**திரு. சோ. இராசேந்திரன்:** முடித்துவிடுகிறேன், உரையை நிறைவு செய்துவிடுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் (குறுக்கீடு)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? என்ன, கேளுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராசேந்திரன் அவர்கள் சொல்லும்போது, தாமிரபரணி ஆற்றில் மணல் அள்ளப்படுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் முடிந்து போய்விட்டது. அந்த வண்டி விழுப்புரம் தாண்டிவிட்டது. திரு. ப. அரசன். (குறுக்கீடு)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே...

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே உரையாற்றுகின்ற (குறுக்கீடு) உட்காருங்கள் அண்ணே! அதுதான் வண்டி விழுப்புரத்தைத் தாண்டிவிட்டதாமே! உட்காருங்கள் அண்ணே! (சிரிப்பு) (குறுக்கீடு) அதுதான் விழுப்புரத்தைத் தாண்டிவிட்டதாமே! (குறுக்கீடு)

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள், கேளுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு மீட்டர் ஆழத்திற்குக்கீழே தோண்டப்படவில்லை என்று சொன்னார்கள். அங்கே கிட்டத்தட்ட 20 அடி, 25 அடி ஆழத்திற்குத் தோண்டி, கிட்டத்தட்ட 10, 15 கிராமங்களே அழிந்து போகக்கூடிய அபாயகரமான சூழ்நிலை. அரசால், பொதுப் பணித் துறையால் அனுமதிக்கப்பட்டு, ஒரு மாத காலத்தில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் லாரிகள் மூலமாக அங்கிருந்து மணல் அள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் 5 ஆயிரம் லாரிகள் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டு, இப்போது இரவோடு இரவாக ** நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை அவைக்கு அளித்துக் கொண்டிருக்கின்றார். எந்தப் பகுதிகளிலும், நீர் போகின்ற மட்டத்திலிருந்து ஒரு மீட்டர் அளவிற்கு நாம் மணல் எடுக்கவில்லை. சில பகுதிகளில் அதிகப்படியாக, மேட்டுப் பகுதியான 20 அடி, 30 அடி என்ற அளவிற்கு வெள்ளம் வருகின்ற காலத்தில், அந்தப் பகுதிகளில் அள்ளியிருக்கலாம். ஆனால், எந்தப் பகுதியிலும் கிராமங்கள் பாதிக்கின்ற அளவிற்கு மணல் அள்ளுவதை மாண்புமிகு அம்மாவின் அரசு தடை செய்திருக்கிறது. குறிப்பாக, மணல் அள்ளுகின்ற இந்தப் பிரச்சினையில், இதற்கு முன்னால் தனியார் அள்ளுகின்றபோதுதான், மணல் கொள்ளை நடைபெற்றது. அந்த வகையில் ஒரு வருடத்தில் மணல் மூலமாக நமக்கு மொத்த வருமானமே 29 கோடி ரூபாய்தான் வந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில், ஆளும்கட்சியில் இருந்தவர்கள் அதிகப்படியான மணல் கொள்ளையை நடத்தியதன் காரணமாகத்தான், அந்த அளவிற்கு அரசினுடைய வருவாய் பாதிக்கப்பட்டிருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மணலை அரசு எடுப்பதற்கு உத்தரவிட்டதற்குப் பின்னால், 3-10-2003-லிருந்து இன்று வரை 232 கோடி ரூபாய் மணல் மூலமாக அரசுக்கு வருவாய் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னது மட்டும் நீக்கப்படுகிறது. அமைச்சர் மட்டும் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அனுமதித்ததைத்தான் அவர் சொல்கின்றார். தனியார் எடுக்கிறபோது அனுமதித்தார்கள் என்றுதான் சொல்கிறார். அதிலே ஒன்றும் இல்லை.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே சொல்லிவிட்டார், மணலை ஏற்றுகிற வண்டி விழுப்புரத்தைத் தாண்டிவிட்டது என்று. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே உரையாற்ற... (குறுக்கீடு)

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அவை உரிமை மீறிய சில பிரச்சினைகளைக் குறிப்பில் ஏற்றவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) நீக்கியாச்சு. 29 கோடி ரூபாய் —அரசு மணல் எடுக்கும் பணியை அரசு மேற்கொள்வதற்கு முன்னால் அரசுக்கு வந்த வருமானம் ரூ. 29 கோடி. வருடத்திற்கு வந்த வருமானம் ரூ.29 கோடி. அப்போது தனியாரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது; அது உங்களுடைய கடந்த காலக் கொள்கை. அதிலே அரசுக்கு ரூ. 29 கோடிதான் வருமானம். அம்மா புரட்சித் தலைவியினுடைய தற்போதைய கொள்கையின் அடிப்படையில் அரசுக்கு ரூ. 232 கோடி வருமானம் (மேசையைத் தட்டும் ஒலி). இதில் கொள்ளை தடுக்கப்பட்டு இருக்கிறது. இதுதான் நடைமுறை உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல என்னுடைய இடது கைப் பக்கத்திலே அமர்ந்திருக்கிற அன்புச் சகோதரர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைய

என்னுடைய குறிப்புகளை எல்லாம் அவர்கள் பறித்துக்கொள்ள மறந்துவிட்டார்கள். அந்தக் குறிப்புகளெல்லாம் என்னுடைய கையிலே இருக்கின்றன. அதற்காகவும் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாண்டு காலம் கடுமையான வறட்சி. இந்த ஆண்டு பரவலாக வெள்ளம். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையினை, ஒரு பயன்மிக்க நிதிநிலை அறிக்கையினை, ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கையினைத் தமிழகத்திற்கு தந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் அவர்களைப் பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலேயிருந்து சில பேர் டெல்லி போய் இருக்கிறார்கள். அவர்கள், இங்கேயிருந்து முதலீட்டைக் கொண்டு வருகிறேன், அங்கேயிருந்து முதலீட்டைக் கொண்டு வருகிறேன், அந்நிய முதலீட்டைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி, நம்முடைய தாய்த் திருநாட்டை, இந்தியத் திருநாட்டை, 1947-க்குமுன் எந்த நிலைமையில் இருந்ததோ, அடிமைத் தளையிலேயிருந்ததைப் போல இந்தியத் திருநாட்டை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மிக அற்புதமான ஒரு நிதிநிலை அறிக்கையினை (கூச்சல்-குழப்பம்) ஒரு அற்புதமான நிதிநிலை அறிக்கையினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஒன்றுமே சொல்லவில்லையே!

**திரு. ப. அரசன்:** ஏழையெளிய மக்களுக்குப் பயன் அளிக்கிற ஒரு நிதிநிலை அறிக்கையினை, பாட்டாளி வர்க்கத்தினர் பயன் பெறுகிற ஒரு நிதிநிலை அறிக்கையினைத் தந்திருக்கிறார். இந்த அரசுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** கல்விக்குக்கூட—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்குக்கூட சேவை வரி விதிக்கிறார்கள். இந்த நாட்டில் ஏழையெளிய மக்கள் படிக்க முடியவில்லை. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறாகச் சொல்லவில்லை. உட்காருங்கள்.

**திரு. ப. அரசன்:** இவர் எதற்காகச் சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், ஞானசேகரன், ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** இன்னும் நான்கு ஆண்டுகளுக்குப் பின்னாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான்கு..(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Point of Order. Please permit me to talk. I am on a Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஞானசேகரன்? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மத்தியிலே போடப்பட்டிருக்கிற பட்ஜெட்டை, இன்று புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே அந்நிய முதலீடு வருவதை, இவர் சார்ந்திருக்கிற கட்சிக்காரர்கள் முன்னாலே போட்ட பட்ஜெட்டிலேயும் அதே கொள்கையைத்தான் பின்பற்றினார்கள். அதுகூடத் தெரியாமல், அதனுடைய அடிப்படை அரிச்சுவடிகூடத் தெரியாமல் பேசுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒன்றும் Point of Order கிடையாது. அரசன், பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..(குறுக்கீடு) அண்ணே, நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன் வரிசைத் தலைவர்கள் இல்லையா! சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட அவர்களுக்கு ஆதரவு தந்துகொண்டிருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநாட்டிலேகூட தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மத்திய பட்ஜெட்டிலே கிராமப்புற மக்கள், விவசாயிகள் கவனிக்கப்படவில்லை; அதுபோல அந்நிய முதலீடு அதிகமாகச் செயல்படுத்தப்பட்டிருப்பதன் மூலமாக இந்த நாட்டினுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை, அவர்களுக்குத் தோழமையாக இருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநாட்டிலே தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையைப் பற்றித் தனியாக விவாதம் வைத்துக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னால் என்ன நிலைமை வரும்? இப்போது பரவாயில்லை. ஐந்தாண்டுகளுக்குப் பின்னாலே தமிழகம் அமெரிக்காவிற்குச் சொந்தம், கேரளா ஆப்பிரிக்காவிற்குச் சொந்தம், கர்நாடகம் கனடாவிற்குச் சொந்தம், ஆந்திரம் ஆஸ்திரேலியாவிற்குச் சொந்தம் என்கிற மிக மோசமான நிலைமையை ஒரு பட்ஜெட் மூலம் உருவாக்கியிருக்கிறார்கள். அப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறபோதும்கூட நம்முடைய தமிழக அரசு, நம்முடைய தமிழக நிதி அமைச்சர் அவர்கள் ஓர் அற்புதமான, பயன்பெறத்தக்க நிதிநிலை அறிக்கையைத் தந்திருப்பதற்காக அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

காந்தி கண்ட ராம ராஜ்யத்தை இன்றைக்கு அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காந்திய பொருளாதார அடிப்படையில் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையை அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் அவர்களைப் பாராட்டுகிறேன். சுதேசிப் பொருளாதாரம்தான், தமிழகத்திலே இருக்கிற வளங்களைப் பயன்படுத்தித்தான், ஒரு நிதிநிலை அறிக்கை தரவேண்டுமென்கின்ற அடிப்படை உண்மையை அவர்கள் தெரிந்துகொண்டு, சுதேசிப் பொருளாதாரத்தைத் தன்னுடைய தலையாய அடிப்படைக்



கொள்கையாகக் கொண்டு அவர் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட நம்முடைய தமிழகத்தினுடைய தலைநகரத்தில் சில பேர் பட்ஜெட்டினுடைய விவரங்களைச் சொல்வதற்காக வந்திருக்கிறார்கள். பட்ஜெட் நன்றாக இருந்தால் ஏன் விவரங்களைச் சொல்ல வர வேண்டும்? பட்ஜெட் சிறப்பாக இருந்தால் ஏன் இங்கே சொல்ல வர வேண்டும்? டெல்லியிலே நிதிநிலை அறிக்கையைத் தந்துவிட்டு, தமிழகத்தில் வந்து பட்ஜெட் நன்றாக இருக்கின்றது என்று சொல்ல வேண்டிய ஓர் இக்கட்டான நிதிநிலை அறிக்கையைத் தந்தவர்களை இந்த நேரத்திலே நான் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்ஜெட்—நிதிநிலை அறிக்கை என்பது வாழ்க்கையின் நடைமுறையோடு ஒத்துவருகிற ஒன்றாக இருக்க வேண்டும். வெறும் ஏட்டளவில் இருப்பதாக இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டை, நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்தவர்கள், இன்றைக்கு சென்னை மாநகரத்திலே வந்து கூட்டம் போட்டுப் பேசுகிறார்கள் என்று சொன்னால், நம்முடைய மக்களை ஏமாற்றுவதற்காக வருகிறார்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு இதில் என்ன பாதிப்பு, உங்களுக்கு என்ன பாதிப்பு? (குறுக்கீடுகள்) நீங்கள் பேச வரும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேச வரும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அரசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், அரசு ஊழியர்களுக்கு வாரி வழங்கியிருக்கிறார்கள். வள்ளலுடைய, புரட்சித் தலைவருடைய வழி வந்த நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு எல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் சார்பாக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே ஒரு பணிவான கோரிக்கை. சாலைப் பணியாளர்களுடைய கோரிக்கை. மீண்டும் அவர்களுக்கு வேலை தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு துறைகளிலும் தமிழக அரசு மிகச் சிறப்பான பணிகளை ஆற்றி வந்திருக்கிறது; ஆற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே ஒன்றிரண்டு கோரிக்கைகளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். மரம் வளர்க்கிற ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். அந்தத் திட்டத்திலே ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றனவா என்று எனக்குத் தெரியாது. என்னுடைய மாவட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே அந்த மரம் வளர்க்கும் திட்டத்தில் நீங்கள் உங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூலிகைச் செடியை வளர்ப்பதற்கும் நீங்கள் ஆக்கமும், ஊக்கமும் தர வேண்டும். நான் சில வாரங்களுக்கு முன்னாலே ஒரு கட்டுரை படித்தேன். மூலிகை அருந்துவதினாலே மீசை எல்லாம்கூட கறு, கறு என்று வளரும் என்று சொல்கிறார்கள். (சிரிப்பு) ஆகவே, தாங்கள் மூலிகைச் செடி வளர்ப்பதற்கான ஒரு முன்மாதிரியான திட்டத்தை உங்களுடைய துறையிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்னாலே விவசாயிகளுக்கு, விவசாயத் துறையிலே வேளாண் இடுபொருட்களுக்கெல்லாம் மானியங்கள் அளித்திருக்கிறார்கள். நீங்கள் அன்றைக்குப் பதில் சொல்கிறபோது ஒன்றிரண்டைத்தான் சொன்னீர்கள். வேளாண் இடுபொருட்களுக்கும் மானியம் அளிப்பதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். அதைப்போல, விதை நெல்லுக்கு, சில நெல் விதைகளுக்குத்தான் மானியம் தருகிறீர்கள். எல்லா விதை நெல்களுக்கும் மானியம் தரவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தினுடைய அருமையைக் கருதி--ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சில சோறுகளைப் பதம் பார்த்து நாம் சோறு வடிக்கின்ற நிலையைப் போன்று--மாண்புமிகு அம்மா அவர்கள், நான்காண்டு கால ஆட்சியிலே செய்திருக்கின்ற சிறப்பான சாதனைகளில் ஒரு சிலவற்றை மட்டும்தான், காலத்தினுடைய அருமையைக் கருதி நான் சொல்ல முடிந்தது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நெல் விதைகளைப் பொறுத்தமட்டிலே, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அறிவிக்கப்பட்ட அந்த நெல் ரகங்களுக்கு மானியம் வழங்கக்கூடாது



என்று மத்திய அரசு தடை விதித்துள்ளது. அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ப. அரசன்:** வேளாண் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகள் கடுமையான வறட்சியின் காரணமாக, கடுமையான வெள்ளத்தின் காரணமாக மிகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த அரசு, 310 கோடி ரூபாய்க்கு அபராத வட்டி, வட்டியினைத் தள்ளி சலுகை அளித்திருக்கிறீர்கள். இன்னும் கொஞ்சம் முயற்சி செய்து, அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா, கூட்டுறவுக் கடன்களிலே அபராத வட்டியைத் தள்ளிக் கொடுக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்காகவும் நான் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். ஒரு நாட்டில் கல்வித் துறை என்பது மிக முக்கியமான துறையாகும். அந்தத் துறை சிறப்பாகப் பணியாற்றுவதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஆசிரியர் நியமனம் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அநேகமாக மானியக் கோரிக்கையிலே சொல்வீர்கள் என்று நான் கருதுகிறேன். ஆசிரியர்கள் பல இடங்களிலே இல்லை என்கிற நிலைமை இருக்கிறது. அதிலும் குறிப்பாக, கவுன்சிலிங் கொண்டுவந்ததற்குப் பின்னாலே...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். 2001-2002-லிருந்து 2004-2005 வரை, இந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இருக்கின்ற பள்ளிகளிலே, கிட்டத்தட்ட 46,494 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்ப அனுமதிக்கப்பட்டிருந்தன. அவற்றில் இன்றைய தேதி வரை, 37,161 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதியுள்ள 9,333 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1996-லிருந்து 2001 வரை நிரப்பப்பட்ட—கடந்த அந்த ஐந்தாண்டு காலத்தில் நிரப்பப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் 52,506. ஆனால், அந்த 4 ஆண்டுகளில் அவர்கள் நிரப்பிய பணியிடங்கள்

43,937 ஆகும். ஆனால்; தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த 4 ஆண்டு காலத்திலே நிரப்ப அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 46,494. அதாவது, 2,557 ஆசிரியர் பணியிடங்களைக் கூடுதலாகவே நிரப்ப அனுமதித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன் அவர்கள், இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** நிறையப் பேச வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இரண்டு மணித் துளிகளுக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிரப்பவில்லை என்று சொல்லவில்லை. இன்னும் பல்வேறு இடங்களிலே, பல்வேறு மேல்நிலைப் பள்ளிகளிலே, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இளங்கலைப் பட்டதாரி ஆசிரியர்கள்...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டேன். 37,161 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள 9,333 பணியிடங்கள் இன்னும் ஒரு மாத காலத்தில் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஓராசிரியர் பள்ளிகள் இருக்கின்றன. அதை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களிலே பள்ளிக்கூடங்கள் தொடங்கி, உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் தொடங்கி, எழுத்தர் பதவி, கடைநிலை ஊழியர் பதவிகளெல்லாம் நிரப்பப்படாமல் இருக்கின்றன. மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆசிரியர்களே சம்பள bill-ஐ எழுத வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. அவற்றையும் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-10

அடுத்து, மிகத் தேவையான துறை மக்கள் நல்வாழ்வுத் துறை. மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரைக்கும், இந்தியாவிலேயே நம்முடைய தமிழக அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் அதிகக் கவனம் செலுத்துகிறது என்பதற்காக, மக்கள் நல்வாழ்வுத் துறையை நான் பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலேயும்கூட ஒரு சின்னக் குறை. என்னவென்று சொன்னால், அதிலே கவுன்சிலிங் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்னுடைய ஆவுடையார்கோயில் வட்டத் தலைமையிடத்திலே இரண்டு மருத்துவர்கள் பணியாற்றினார்கள். ஒரு வாரத்திற்கு முன்னாலே கவுன்சிலிங் வந்தது. ஒருவர் புதுக்கோட்டைக்குப் போய்விட்டார். ஒருவர் கோவில்பட்டிக்குப் போய்விட்டார். அங்கே மருத்துவர்களே இல்லை. அதிலேயும் கவுன்சிலிங் செய்கிறபோது, ஏற்கெனவே மரியாதைக்குரிய மாண்புமிகு அண்ணன் செம்மலை அவர்கள் இருந்தபோது, 75 சதவிகிதம் வைத்துவிட்டு பிறகு மீதம் உள்ளவர்களைத்தான் மாற்றுவோம் என்று சொன்னார்கள்...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மருத்துவமனையைக் குறிப்பிட்டு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுநர் உரைக்குப் பதில் அளிக்கும்போது, தெளிவாக, விளக்கமாக, மருத்துவர்களுடைய காலியிடங்களை—கிட்டத்தட்ட 2,322 காலியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு கன்னியாகுமரி, தேனி, வேலூர் ஆகிய மாவட்டங்களிலே புதியதாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள், கவுன்சிலிங் முறையிலே தேனி, வேலூர், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு மருத்துவர்களாகச் செல்வதற்காகத்தான் இந்த கவுன்சிலிங் நடைபெறுகிறது. இன்னும் குறைந்தது 10 நாட்களுக்குள்ளாக, 2,322 மருத்துவர்களையும் தற்காலிகமாக நியமிப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகிற ஒரு அற்புதமான திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி என்பது மிகக் குறைவு. ஏனென்று சொன்னால், தமிழகத்தில் 50 கோடியிலேகூட—என்னுடைய அறந்தாங்கி தொகுதிக்கு மட்டுமே 5 கோடி தேவைப்படும். அந்த அளவிற்கு புறம்போக்கு நிலங்கள். தடை செய்யப்படாத இடங்களில்கூட, மக்கள் வசிக்கிறார்கள். ஆகவே, அதற்கான நிதியைக் கூடுதலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு மிகத் தேவை நீர்ப்பாசனம். இந்த நீர்ப்பாசனத்திற்கு மிகக் குறைவாக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை நபார்டு வங்கியிலே பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம்கூட இருக்கலாம். எப்படியாவது நீர்ப்பாசனத்திற்குக் கூடுதல் நிதி பெறுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே உரையாற்றுகிறபோது, நானும், நம்முடைய அன்புச் சிறுவன் சோழவந்தான் ராஜாங்கம் அவர்களும் (குறுக்கீடு) புதிய பஸ் எல்லாம் எங்களுடைய ஊர்களுக்கு விட வேண்டுமென்று சொன்னோம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் போபாலுக்கு பஸ் விட வேண்டாம், என்னுடைய தலைவருடைய ஊர். என்னுடைய பகுதியிலே இருக்கின்ற பல்வேறு நகரங்களுக்குப் புதிய பேருந்துகள் விடுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஒரேயொரு கோரிக்கை. அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இரகசியமாக என்னிடம் வந்து ஒரு கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். சம்பளம் போதவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அதனை அவர்களாலே பேசுவதற்கு முடியவில்லை. அதிலேயும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்தவுடனே கொஞ்சம் அச்சப்பட்டு அவர்கள் சொல்லாமல் இருந்தார்கள். அதனாலே, இருப்பதிலே 150 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேலே வந்து பேசுகின்றபோது, இதைச் சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளம் 12 ஆயிரம் என்பது மிகவும் குறைவு.



அதேபோல பென்ஷனையும் உயர்த்தித் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொண்டு, அற்புதமான, சிறப்பான, பயன்பெறத்தக்க, ஏழைகளை வாழ வைக்கிற, பாட்டாளிகளை வாழ வைக்கிற, தாழ்த்தப்பட்ட மக்களை வாழ வைக்கிற, பிற்படுத்தப்பட்ட மக்களை வாழ வைக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலை அறிக்கையினைத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், மிகத் தெளிவாகிவிட்டீர்கள். திரு. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளை எடுத்து வைக்க அனுமதியளித்திருக்கிற எங்களுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், நான் பேசி முடிக்கிற வரையில் மேசை மணியிலே கை வைக்காமல் எனக்கு அனுமதி தரவிருக்கிற தங்களுக்கும் நான் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபோது, பல்லாண்டு காலமாக நிதிநிலை அறிக்கைகளைப் படித்துப் பார்த்த எனக்கு, இது ஒரு தேர்தல் அறிக்கையைப் படிப்பது போலவே இருந்தது. தேர்தல் நேரத்திலே அரசியல் கட்சிகள் வெளியிடுகிற அறிக்கையைப் போலவே இந்த நிதிநிலை அறிக்கை என்னுடைய மனதைக் கவர்ந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. இங்கேகூட பேசுகின்றபோது சொன்னார்கள். அரசு அலுவலர்களுக்கு வாரி, வாரி கொடை வள்ளல் தன்மையோடு வழங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்குத் தந்திருக்கின்ற அகவிலைப்படிகூட 9 மாதத்திற்கு முன்னால் தரவேண்டியது என்று சொன்னாலும், அதிலே ஒரு 50 சதவிகிதத்தை அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தோடு சேர்க்கவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதுகூட இதிலே செய்யப்படவில்லை. அவர்களுடைய ஈட்டிய விடுப்பு, சம்பளம் பெறுவதற்கு 7 நாட்கள் என்றிருப்பதை 15 நாட்களாகவாவது ஆக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இப்படிப் பல்வேறு சலுகைகள் எதுவுமே இதிலே அறிவிக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. 6-வது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைப்படி, அங்கன்வாடியிலே

பணியாற்றுகிற சமையல்காரர்களுக்கு, உதவியாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தந்திருக்கிறோம். ஆனால் அதிலே அங்கன்வாடியினுடைய அமைப்பாளர்கள் என்ன பாவம் செய்தார்கள்? ஒருவேளை 6-வது ஊதியக் குழு, அமைப்பாளர்களுக்குத் தரக்கூடாது என்று குறிப்பாக ஏதாவது சுட்டிக்காட்டியிருக்கிறதா என்பதனை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இல்லையென்றால், நிதி அமைச்சர் (குறுக்கீடு) தயவு செய்து அப்புறம் பேசுங்களேன், குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். இல்லை, இல்லை. Not to disturb you. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி பணியாளர்கள், அமைப்பாளர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் time scale-லே வருகிறார்கள். எனவே, எல்லாப் பணியாளர்களுக்கும் உரித்தான அந்தத் தொகுப்பில் வருகின்ற காரணத்தால், இதில் அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** ஓய்வு பெறுகிறபோது அங்கன் வாடியினுடைய அமைப்பாளர்களுக்கு ஓய்வூதியம் 50 ஆயிரம் ரூபாய் என்றும், உதவியாளர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் என்றும் அறிவித்திருப்பது மகிழ்ச்சி தரக்கூடியதுதான். ஆனால், அதிலேகூட அது 1-4-2005-லேயிருந்துதான் கிடைக்கப் போகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், சிறப்பு நிதியாக சேம நல நிதி 10 ஆயிரம் ரூபாய் என அறிவித்தார்கள். அதை அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடனே 5 ஆயிரம் ரூபாயாகக் குறைத்து நீங்கள் அறிவித்தீர்கள். இப்பொழுது மீண்டும் அதை 10 ஆயிரமாக உயர்த்தியிருப்பது பாராட்டத்தக்கதுதான். ஆனால், அதுவும் 1-4-2005-லே என்று சொன்னால், இதுவரையிலே பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள், ஓய்வு பெற்றிருக்கிறவர்கள், அதனால் பெரும்பாலும் சோற்றுக்கு இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த நேரத்திலே அந்த 10 ஆயிரம் ரூபாயை 5 ஆயிரம் ரூபாயாகக் குறைத்து ஆணையிட்டார்களோ, அந்தத் தேதியிலேயிருந்து இதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



சமூக நலத் துறையைப் பொறுத்தமட்டிலே பல்வேறு சிறு, சிறு காரியங்கள்கூட இப்பொழுது நம்முடைய ஆட்சியிலே நிறுத்தப்பட்டு விட்டன என்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். எனவே, இந்தத் திட்டத்திலே மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. இந்த மகளிர் மன்றங்களுக்கெல்லாம் Convenor என்று இருக்கிறவர்களுக்கு மாதம் 30 ரூபாய் தருவார்கள். அதுவும் 1-4-2002-லிருந்து நிறுத்தப்பட்டு விட்டது. மகளிர் கல்விச் சுற்றுலா என்று, ஆண்டுக்கு 440 ரூபாய் தருவார்கள். அதுகூட நிறுத்தப்பட்டு விட்டது. இது 1960-லே போடப்பட்டது. அதுகூட நிறுத்தப்பட்டு விட்டது. அதைப்போலவே செய்முறைப் பயிற்சி என்று மகளிர்க்கு 1200 ரூபாய் தருவார்கள் ஆண்டுக்கு. அது நிறுத்தப்பட்டு விட்டது. குழந்தைகள் கண்காட்சிக்கு 300 ரூபாய். அது நிறுத்தப்பட்டு விட்டது. சமூகக் கல்விப் புத்தகம் வாங்க என்று 360 ரூபாய். இவை அத்தனையும் 2002 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அவற்றை நீங்கள் முக்கியத்துவம் தந்து ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைப் பொறுத்தமட்டில், 1995-96-ல் அ.தி.மு.க. ஆட்சி போகிறபோது 688.85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 2001 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அது 1763 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது நீங்கள் 2005-லே 1652 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறீர்கள். 4 ஆண்டுகளிலே நீங்கள் உயர்த்தியிருப்பது 309.24 கோடி ரூபாய்தான். எனவே, இது ஒரு பெரிய உயர்வு என்று சொல்லிவிட முடியாது. நான்கரை ஆண்டுக் காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 575 கோடி ரூபாய் உயர்த்தியது இந்த மானியத்திலே. ஏனென்றால், அது முக்கியமான மானியம். 104 தொடக்க சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்றும், 90 தொடக்க சுகாதார மையங்கள் 24 மணி நேர மகப்பேறு சிகிச்சைப் பிரிவைத் தொடங்கியுள்ளன என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டுகிறபோது, அவை ஆண்டுதோறும் சொல்வது நிறைவேற்றப்படுகிறதா என்பதைத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிந்துகொள்ளாமல் இருப்பார்கள் என்று நான் எண்ணிடவில்லை. ஆனால் என்னுடைய கேள்வியெல்லாம், நீங்கள் அறிவிக்கிற அறிவிப்புகள் இன்னும் ஏட்டளவிலே

இருக்கின்றன. தாம்பரம் தொகுதியில் இருக்கிற மேடவாக்கத்தில் 2000-2001 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்டது, நிலை உயர்த்தி சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாக, 24 மணி நேர சுகாதார நிலையமாக அறிவித்தார்கள். இன்றைய வரையில் அதற்கு 30 படுக்கைகள் அளித்துவிட்டீர்களா? அங்கே அறுவை அரங்கம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, நிதிநிலை அறிக்கையின்படி மருத்துவத் துறைக்கு ஒதுக்கிய நிதியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடனே இதுவரையில் இல்லாத அளவிற்கு, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு முதன்முதலாக மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்தது, குறிப்பாக, தேனி மட்டும் இல்லாமல் —வெறும் G.O.-விலே எழுத்திலே போட்டுவிட்டுச் சென்றீர்கள்—கன்னியாகுமரி, வேலூர் போன்ற இடங்களில். அத்தனைக்கும் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே, இதுவரையிலே இல்லாத அளவுக்கு, எந்த ஆட்சியும் செய்யாத அளவிற்கு, கிட்டத்தட்ட 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், நீங்கள் கூறியதுபோல இந்த அரசைப் பொறுத்தவரையில், சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், எந்த அரசும் செய்யாத, முந்தைய அரசு செய்யாத சாதனை பூராவையும் இந்த அரசு செய்து வருகிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனியிலே தொடங்கப்பட்டிருக்கிற மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் கிடைத்து, அங்கே மாணவர்கள் இருக்கிறார்களா? அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறதே, அது எப்படி?



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி அரசு மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மருத்துவமனையைத் திறந்தவுடனே, சில தலைவர்கள் ஒரு அறிக்கை விட்டார்கள். அங்கே கல்லூரி இல்லாமலே மருத்துவமனை வந்துவிட்டதே என்று கேட்டார்கள். அதற்கு நான் தகுந்த பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அரசு பொறுப்பேற்றவுடனே மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் Medical Council of India-வுக்கு மனுச் செய்து, அதற்கான உத்தரவு, அதாவது L.O.P. இப்போது கிடைத்திருக்கிறது. மார்ச் மாதம் மீண்டும் ஓர் ஆய்வு செய்து—தேனிக்கு மட்டுமல்ல, வேலூருக்கும் இப்போது கிடைத்திருக்கிறது. மார்ச் மாதம் இரண்டாவது முறையாக ஓர் ஆய்வு செய்து, கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு தேனி மருத்துவக் கல்லூரிக்கும், வேலூர் மருத்துவக் கல்லூரிக்கும், மருத்துவக் கல்லூரிக்கான இடம், ஆண்டுக்கு 100 மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேரடியாகக் கேட்டேன், 2001 ஆம் ஆண்டிலிருந்து 30 படுக்கைகள் இன்னும் போடப்படவில்லையே, போடப்பட்டு இருக்கின்றனவா என்று கேட்டேன். அமைச்சர், நான் போட்டுவிட்டேன் என்று சொல்வார், இல்லை போடுகிறேன் என்று சொல்வார் என்று எதிர்பார்த்தால், அவர்கள் பெரிய அளவிலே 200...(குறுக்கீடு) என்னுடைய நேரத்தை எடுக்க வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை. அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 104 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. 30 படுக்கைகள் (குறுக்கீடுகள்) மேடவாக்கம்...(குறுக்கீடுகள்) No, No. உறுப்பினருடைய கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியும். உறுப்பினர் கேள்விக்கு (குறுக்கீடுகள்) உறுப்பினர் கேட்கும்போது- (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்றத்திலே இதுபோன்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைதியலிங்கம் கேட்டதற்கு அவர் பதில் சொல்கிறார். *(குறுக்கீடுகள்)* நீங்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். வைதியலிங்கம் கேள்வி கேட்கிறார், அமைச்சர் பதில் சொல்கிறார். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியைப் பொறுத்தவரையிலே, இந்தக் கேள்விக்கு ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே—நான் இப்போது தெளிவாகவே படித்துக் காண்பிக்கிறேன்—காஞ்சிபுரத்தைப் பொறுத்தவரையில், அச்சிறுப்பாக்கம், திருக்கோயில், வாலாஜாபாத், நவநீதபுரம்; திருவள்ளூரைப் பொறுத்தவரையில் ஆர்.கே.பேட்; வேலூரைப் பொறுத்தவரையில், அணைக்கட்டு, பானாவரம்; அதுபோல திருவண்ணாமலையைப் பொறுத்தவரையில், கடலாடி; அதுபோல கடலூரைப் பொறுத்தவரையில் பெரியமல்லூர், உறையூர்; விழுப்புரத்தைப் பொறுத்தவரையில், மயிலம், வேளச்சேரி, கச்சிரப்பாக்கம்; தஞ்சாவூர் *(குறுக்கீடு)* எந்தெந்த மாவட்டத்தில் ஆரம்ப... *(குறுக்கீடுகள்)* No, No. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** வரிசையாக எந்தெந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு பேசுங்கள்; நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மேடவாக்கம் ... *(குறுக்கீடு)* எந்தெந்த மாவட்டம் என்பதை நான் படித்துக் காண்பிக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளை மாவட்ட ரீதியாக நான் படித்துக் காண்பிக்கிறேன். *(குறுக்கீடுகள்)* அது எப்படி? மேடவாக்கத்தைப் பொறுத்தவரையில்... *(குறுக்கீடுகள்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் முடித்து விடட்டும். *(குறுக்கீடுகள்)* அவர் முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மேடவாக்கத்தைப் பொறுத்தவரையில் அது தரம் உயர்த்தப்படவில்லை. ஆகவே, தவறான— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், மேடவாக்கத்தைப் பொறுத்தவரையில் 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்படவில்லை. அதற்கான கோரிக்கையையும் அவர் வைக்கவில்லை. இப்போதுதான் அதைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். வைதியலிங்கம், பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** இதைத்தான் நான் சொல்வது, அவர் மேடவாக்கத்திலே படுக்கை உண்டா, இல்லையா என்று கேட்டால், அதைச் சொல்லிவிடலாம். ஆனால் அதற்காக மறுபடியும்—மாண்புமிகு அமைச்சரிடத்திலே materials இருக்கலாம்—எல்லாவற்றையும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை, பிரச்சினையே இல்லை. *(குறுக்கீடு)* இல்லை, இல்லை, மேடவாக்கத்திலே உண்டா, இல்லையா என்பதைச் சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், ஏற்கெனவே பேசியதற்குத்தான் பதில் சொன்னார். மேடவாக்கத்தைப் பற்றிப் புதிதாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேடவாக்கம் தரம் உயர்த்தப்பட்டு, அங்கே 24 மணி நேரமும் இன்றைக்கு சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே மகப்பேறு பார்க்கப்படுகிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாக, தெளிவாகக் கூறுகிறேன். தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளை, நான் இங்கே காஞ்சிபுரம் மாவட்டத்திலே எது, எது தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது— மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே— அச்சிறுப்பாக்கம், வாலாஜாபாத் என்று நான்கு இடங்கள்தான் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேடவாக்கத்தைப் பொறுத்தவரையிலே, 2001-லே தரம் உயர்த்தப்படவில்லை.

பிற்பகல் 12-25

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே 2001 ஆம் ஆண்டிலே புறநகர் மருத்துவமனை ஒன்று தொடங்கப்பட்டது. அதைக்கூட இல்லை என்று சொல்லிவிடமாட்டார் நம்முடைய அமைச்சர் என்று நினைக்கிறேன் நான். புறநகர் மருத்துவமனை. மாமல்லபுரத்திலிருந்து சென்னை வரையிலே வேறு அரசு மருத்துவமனையே கிடையாது. நாள் ஒன்றுக்கு இன்றைக்கும் 200 பேர்களுக்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அந்த மருத்துவமனைக்கு, சென்ற முறை அமைச்சராக இருந்த என்னுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு செம்மலை அவர்கள் பேசுகிறபோது சுட்டிக்காட்டினார்கள்; ஒரு கேள்விக்கும், அந்த மானியத்திலே பேசுகிறபோதும் சொன்னார்கள். மாடு வாங்காமலேயே கலயம் வாங்கி விட்டீர்கள். நீங்கள் 25 இலட்சம் ரூபாய் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடத்திலே பெற்றுக்கொடுங்கள். நாங்கள் அதைக் கட்டி முடித்து விடுகிறோம் என்று சொன்னார்கள். நான் 25 இலட்சம் ரூபாயும் பெற்றுக்கொடுத்து, அந்தக் கட்டடமும் கட்டி முடித்தாகிவிட்டது. அந்த இடத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், நான் பார்த்துக்கொள்கிறேன் என்றார். இன்னும் நுழைவு அனுமதிகூடப் பெறவில்லை. அங்கே உரிய மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. Deputation போட்டு இராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து ஒரேயொரு மருத்துவர் வருகிறார். பல்வேறு தரப்பட்ட நோயாளிகள் கிட்டத்தட்ட 200 பேர் வருகிற ஒரு புறநகர் மருத்துவமனைக்கு ஒரேயொரு மருத்துவர் வருகிறார். செவிலியர்கள் நான்கு பேர்கள் இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல. அங்கே இருந்த ஆம்புலன்ஸைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள் இந்த அரசிலே. ஒரு புறநகர் மருத்துவமனையிலே இருந்த ஆம்புலன்ஸைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அந்த மருத்துவமனைக்கு ஏதாவது மருத்துவர்களை நியமிக்கிற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா, இல்லையா? அதைத் தரம் உயர்த்தப் போகிறீர்களா, இல்லையா என்பதனை நான் இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதன் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நெஞ்சக நோய் மருத்துவமனை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மருத்துவமனையாக நம்முடைய சானடோரியத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லோரும் அதை அறிவார்கள். அந்த நெஞ்சக நோய் மருத்துவமனையில், இன்றைக்கு தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஆட்கொல்லி நோயான எய்ட்ஸ் நோய்க்கு மருந்து



இங்கேதான் தரப்படுகிறது. அதனால் இறப்பு சதவிகிதம்கூட குறைக்கப்பட்டிருக்கிறது. மிகச் சிறந்த முறையிலே அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு பயிற்சி முகாம்கூட நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவின் பல இடங்களிலிருந்து பல்வேறு தரப்பட்ட மருத்துவர்கள் அங்கே வந்து பயிற்சி பெறுகிறார்கள். ஆனால், இந்த ஆட்கொல்லி நோயான எய்ட்ஸ் என்பது மனிதனுடைய பல்வேறு தரப்பட்ட உறுப்புகளைப் பாதிக்கிறது. அங்கே இருக்கிற மருத்துவர்கள் T.B.-யைப் பார்க்கக்கூடியவர்களும், இருதயத்தைப் பார்க்கக்கூடியவர்களும் இரண்டு பேர்கள்தான் இருக்கிறார்கள். வேறு Specialists கிடையாது. அது தோலிலே பாதித்திருந்தால், உடலிலே பாதித்திருந்தால், எலும்பிலே பாதித்திருந்தால், கண்ணிலே பாதித்திருந்தால் அதைப் பார்ப்பதற்குரிய Specialist-கள் அங்கே இல்லை. இது அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. இதிலே அரசு கவனம் செலுத்தி, அங்கே Specialist-களை நியமிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, ஊரக ஏழை, எளியோருக்கான வீடு கட்டுதல். இங்கேகூட சுட்டிக்காட்டினார்கள். பல்வேறு தரப்பட்டவர்களுக்கு, 2 இலட்சம் பேர்களுக்குப் பட்டா தரப்போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சியான விஷயம்தான். 2005-2006-ல் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கம் 35.13 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், 37,676 புதிய வீடுகள் கட்டப்படுவதையும், 19,265 கச்சா வீடுகள் நிலை உயர்த்தப்படுவதையும் உறுதி செய்யும் என்று கூறப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது. இதன்படி வீடு ஒன்றுக்கு முழுமையாகக் கட்டடம் கட்ட மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து 34 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறோம். இதிலே எதுவும் கடன் கிடையாது. அவர்களுடைய சொந்தப் பணம் கிடையாது. அதைப்போலவே, கச்சா வீடுகளை நிலை உயர்த்த 12,500 ரூபாய் கொடுக்கிறோம். அதை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது ஒரு நல்ல திட்டம். அது உண்மைதான். ஆனால் அப்படிப்பட்ட கிராமங்களிலே நம் மாநில அரசு புதியதாக ஒன்றை அறிவித்திருக்கிறதே? வீடு ஒன்றை நிலை உயர்த்த ரூ. 10,000 என்றும், அதிலே அரசு வழங்குவது ரூ. 2,500 என்றும், வர்த்தக வங்கிக் கடன் ரூ. 7,000 என்றும், மக்கள் பங்களிப்பு ரூ. 500 என்றும் கூறப்பட்டுள்ளதே, இது எப்படி? அதே கிராமத்திலே இலவசமாக 34 ஆயிரம் ரூபாய்க்கு வீடு கட்டிக் கொடுத்து, கச்சா வீடுகளை நிலை உயர்த்துவதற்கு

*12,500 ரூபாய் இலவசமாகக் கொடுத்துவிட்டு, அதே கிராமத்திலே 10,000 ரூபாயிலே 2,500 ரூபாய் அரசுப் பணம், 500 ரூபாய் பயனாளி, 7,000 ரூபாய் வங்கிக் கடன் என்று சொன்னால், அது எப்படி சாத்தியமாகும் என்பதனையும் அருள்கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான் விஷயத்திற்கே வரவில்லை. நான் நேரமே எடுத்துக்கொள்ளவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் தனியாக வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** நீங்கள் அமைச்சர்களுக்கு நேரத்தைக் கொடுத்துவிட்டு, என்னுடைய நேரத்தை எடுத்துக்கொண்டால் எப்படி? தயவுசெய்து ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் 15 மணித் துளிகளுக்குமேல் பேசிவிட்டீர்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** ஐந்து நிமிடங்களிலே பேச்சை முடித்துவிடுகிறேன். 15 நிமிடங்கள் நான் பேசவில்லை. அமைச்சர்கள்தான் பேசியிருக்கிறார்கள். நான் பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு பேசிக் கொண்டிருக்கிறோம். அதிலே குறிப்பாக சுனாமியைப் பற்றி இங்கே பல்வேறு தரப்பட்டவர்கள் மிகச் சிறந்த கருத்துகளைச் சொன்னார்கள். சுனாமியைப் பொறுத்தமட்டிலே மாநில அரசு, மத்திய அரசு, அதைப்போலவே பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் மிகச் சிறந்த முறையிலே பணியாற்றினார்கள். இன்னும் முழு அளவிலே அவர்கள் நிவாரணம் பெற்றுவிடவில்லை என்று சொன்னாலும்கூட, மனித நேயத்தோடு அனைத்துத் தரப்பினரும் அதிலே பங்கேற்றுக்கொண்டார்கள் என்பதிலே இருவேறுபட்ட கருத்துகளுக்கே இடம் இல்லை.

அதைப்போல்தான் இதிலே இராணுவத்தைக்கூட கொண்டுவந்து நம்முடைய அரசு ஈடுபடுத்தியது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு (குறுக்கீடுகள்).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது (குறுக்கீடுகள்). இராணுவத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது (குறுக்கீடுகள்).

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றமிகு இந்தப் பேரவையில் எனது கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 மணித்துளிகள் முடிந்துவிட்டன. அதனால்தான் மணியடித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றமிகு இந்தப் பேரவையில் எனது கருத்துகளைச் சொல்லும் வாய்ப்பை உருவாக்கித் தந்த இதய தெய்வம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றமிகு இந்தப் பேரவையில் என்னுடைய கருத்துகளைச் சொல்லும் வாய்ப்பினை உருவாக்கித் தந்த இதய தெய்வம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நேரத்தைப் பகிர்ந்தளிப்பதிலே, ஓர் உறுப்பினரின் பேச்சை முடிப்பதிலே நான் குறுக்கிடவில்லை. ஆனால், அவர் பேசுகின்றபோது,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, வாக்கியம் அரைகுறையாக இருந்தால் அது சரிப்பட்டு வராது. ஆகவேதான், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சேகர்பாபு, பேசுங்கள் *(கூச்சல்-குழப்பம்)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றமிகு இந்தப் பேரவையில் என்னுடைய கருத்துகளைச் சொல்லும் வாய்ப்பினை உருவாக்கித் தந்த... (கூச்சல்--குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் என்ன பிரச்சினையை எழுப்ப விரும்புகிறார்களோ, அதற்கு பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். ஆகவே அதை எழுப்ப தாங்கள் அனுமதிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனுமதிக்கலாம் என்பதைப் பெருந்தன்மையோடு சொல்கிறார்கள். எனக்குள்ள சிக்கல் என்னவென்றால், நேரத்தை நான் பகிர்ந்து கொடுக்கவேண்டும். இன்னும் 3 பேர் பேச வேண்டி இருக்கிறது. 15 மணித்துளிகள் நம்முடைய வைதியலிங்கம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. அவ்வளவுதான் பிரச்சினை. வேறொரு காரணம் எதுவுமில்லை. அவர் வாக்கியத்தை நிறைவு செய்வதாக இருந்தால் நிறைவு செய்யட்டும்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கஷ்டம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவரைப் பேசச் சொல்லுங்கள், வாக்கியத்தை நிறைவு செய்யச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைச் சொல்கிறேன். அதாவது வேறொன்றுமில்லை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதுபற்றி ஏற்கெனவே உரிமை மீறல் பிரச்சினை வந்து, நீக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அதை வேறு வழிகளிலே கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாதீர்கள். இதுமாதிரி குறுக்கு வழிகளைத் தயவுசெய்து நாடாதீர்கள். தயவுசெய்து இதுமாதிரி குறுக்கு வழிகளை நாடாதீர்கள், அது சரிப்பட்டு வராது. மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன எழுப்ப விரும்புகிறார்கள் என்பது நன்றாகப் புரிகிறது. சுனாமி நிவாரணப் பணிகளின்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளைச் செய்கின்றபோது, இராணுவத்தினரின் பங்கைப் பற்றி இங்கே ஒரு கருத்தை நான் தெரிவித்தேன். அது ஏதோ நான் தவறாகச் சொல்லிவிட்டதைப் போன்று ஒரு தவறான தோற்றத்தை ஏற்படுத்த அவர்கள் பார்க்கிறார்கள். திடீரென்று இன்று தி.மு.க.வினர் இராணுவத்தினருக்காக முதலைக் கண்ணீர் விடுவதைப் பார்த்தால், வேடிக்கையாக இருக்கிறது; வியப்பாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைக்குச் சென்று திரும்பிய I.P.K.F.—இந்திய இராணுவத்தினர் வந்தபோது, அவர்களை வரவேற்கக்கூட செல்ல மறுத்தவர் அன்றைய முதலமைச்சர், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இராணுவத்தினரையே கேவலப்படுத்திய, அவமானப்படுத்திய அந்தத் தலைவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்று இராணுவத்தினருக்காக இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள், வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றையதினம் இந்தச் சட்டமன்றத்தில் நான் என்ன சொன்னேன் என்பது அனைவருக்கும் தெரியும். தொலைக்காட்சியிலும் காண்பிக்கப்பட்டது. பத்திரிகைகளிலும் அந்தச் செய்தி வெளியிடப்பட்டது. அதில் எந்தத் தவறும் இல்லை. அது உண்மையான செய்திதான். அதை ஏன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே அனுமதிக்கக்கூடாது என்று கருதுகிறார் என்றால், இந்த உண்மை மீண்டும், மீண்டும் வலியுறுத்தப்பட்டால், மக்கள் மத்தியில் இராணுவத்தினருக்கு இருக்கின்ற மதிப்பும், மரியாதையும் குறைந்துவிடும், இராணுவத்தினர்மீது இருக்கின்ற நல்லெண்ணம் குறைந்துவிடும் என்ற நல்லெண்ணத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்த விவாதத்தை இங்கே அனுமதிக்க வேண்டாமென்று கருதுகிறார். அவ்வளவுதானே தவிர, நான் ஏதோ நடக்காததை சொல்லிவிட்டதைப் போலவும், ஏதோ தவறான ஒரு கருத்தை இங்கே சொல்லிவிட்டதைப் போலவும், ஒரு உண்மைக்குப்

புறம்பான ஒரு தோற்றத்தை எதிர்க்கட்சியினர் ஏற்படுத்தப் பார்த்தால், அது சரியல்ல, அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மீண்டும் சொல்கிறேன்; நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பிணங்கள் அழுகிப் போய் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த நேரத்தில், அந்தப் பிணங்களைத் தொடவே இராணுவத்தினர் மறுத்துவிட்டனர். இது உண்மைதான். 'இது மாநில அரசின் பொறுப்பு. நீங்களேதான் பார்த்துக்கொள்ளவேண்டும், வேறு எந்தப் பணிக்காக வேண்டுமானாலும் நீங்கள் எங்களைக் கூப்பிடுங்கள், ஆனால் இதைச் செய்யமாட்டோம்' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். ஆகவேதான், தமிழகம் முழுவதிலுமிருந்து துப்புரவுப் பணியாளர்கள் இந்தப் பணிக்காக வரவழைக்கப்பட்டார்கள். நான் சொன்னது உண்மை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-35*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதுபற்றிய விளக்கத்தை நானே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அவையிலே எழுப்ப வேண்டாம் என்று நானே உங்களிடத்திலே தனிப்பட்ட முறையில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) முதலமைச்சர் அவர்களுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எப்போதுமே, எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் இன்று வரை இந்திய இராணுவத்தினர்மீது நான் மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இராஜ்ய சபை உறுப்பினராக இருந்தபோது, இராணுவத்திற்காக நான் வக்காலத்து வாங்கி, அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி, இரண்டு நாட்கள் பேசியிருக்கிறேன். ஒரு நாள் பேசத் தொடங்கி எனது உரை முடியவில்லை என்பதால், அவையின் நேரம் முடிந்துவிட்டதால், அன்றையதினம் அவையிலிருந்த அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவைத் தலைவரைக்



கேட்டுக்கொண்டதன் பேரில், அடுத்த நாளும் என்னைப் பேச அனுமதித்தார்கள். அதன்பிறகுதான், என்னுடைய உரை முடிந்தபிறகு, இராணுவத்தினருக்கு சம்பளங்கள், படிகள் எல்லாமே உயர்த்தப்பட்டன என்பதனை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த நேரத்தில் நான் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. இந்த விவாதம் இந்த அவையில் நடைபெற்றபோது, கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள், காவல் துறையினரைப் பற்றி, தமிழ்நாட்டுக் காவல் துறையினரைப் பற்றிக் குறை சொன்னார்கள். ஒரு பிணத்தைக்கூட காவல் துறையினர் எடுத்துப் போடவில்லை என்று சொன்னார். ஆனால், உண்மை நிலை அப்படி இல்லை. காவல் துறையினர் தங்கள் கடமையைச் செவ்வனே செய்தார்கள். அப்படிச் செய்ய மறுத்தது இராணுவத்தினர். அந்த உண்மையைத்தான் நான் இங்கே சொன்னேன். ஆனால் அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஏனென்றால், தேவையில்லாமல் இராணுவத்தினரைப் பற்றி ஒரு சர்ச்சைக்கு நாம் இடம் கொடுத்துவிட்டோமே என்று பின்னர் சிந்தித்தேன். அதைத்தான் இப்போது எதிர்க்கட்சியினர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இராணுவத்தினர்மீது உண்மையிலேயே தி.மு.க.வினருக்கு அவ்வளவு மதிப்பும், மரியாதையும் இருக்குமேயானால், அன்றையதினம் போரில் கலந்துகொண்டு விட்டு, இந்தியா திரும்பிய, சென்னை திரும்பிய இராணுவத்தினரை வரவேற்க உங்கள் தலைவர் ஏன் செல்லவில்லை? அன்றையதினம் என்னென்ன வார்த்தைகள் பேசினீர்கள்? ஆகவே, இத்தகைய நாடகங்களை எல்லாம் மக்கள் நம்ப மாட்டார்கள் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை இதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இராணுவத்தினர் பிணங்களைத் தொட மறுத்தார்கள் என்று சொன்னார், அவருக்கு வந்த செய்தியை வைத்து. ஆனால், நான் என்ன சொல்கிறேன் என்றால், வெலிங்டனில் ஒரு இராணுவ அதிகாரி அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், இராணுவத்தினர் பிணத்தை அப்புறப்படுத்தினார்கள் என்று தெரிவித்திருக்கிறாரே, இந்தச் செய்திக்கும், இராணுவத்தினருடைய உயர் அதிகாரி சொன்ன செய்திக்கும் வித்தியாசம் இருக்கிறதே என்பதைத்தான் நாங்கள் கேட்க வந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எனக்கு வந்த தகவலை நான் தெரிவித்தேன்

என்று சொன்னால், பிரச்சினை இல்லை. ஆனால் அடுத்து... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவல் என்று சொன்னால், யாரோ கொடுத்த தகவலை நான் இந்த அவையில் தெரிவிப்பது இல்லை. இந்த மாநிலத்தின் தலைமைச் செயலாளர், Development Commissioner, சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இவர்கள் தெரிவித்த தகவலைத்தான் இந்த அவையில் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அந்தத் தகவல்கள் அனைத்தும் இப்போது பெறப்பட்டிருக்கின்றன. அந்தத் தகவல்கள் அனைத்தையும் தாங்கள் பார்க்க விரும்பினால்கூட பார்க்கலாம். அதைப்பற்றி ஒன்றும் இல்லை.

**திரு. துரைமுருகன்:** ஆகையாலே, மற்ற அதிகாரிகள் தந்த தகவலை அவர்கள் தெரிவித்தார்கள். நான் திருப்பிக் கேட்டால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி ஏற்பட்ட பிறகு, அனைத்து நிவாரணப் பணிகளையும் மேற்பார்வையிட்ட Special Commissioner and Commissioner of Revenue Administration, Thiru R. Santhanam, I.A.S. அவர்கள், தலைமைச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'Major General Paramjit Singh made the point that it was not the role of the army to remove dead bodies' என்று எழுதியிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த நிவாரணப் பணிகளில் சம்பந்தப்பட்ட அனைத்து அரசு அதிகாரிகளும், உயர் அதிகாரிகளும் தெரிவித்த உண்மைத் தகவல்தான் இது.

**திரு. துரைமுருகன்:** நான் அதை மறுக்கவில்லை. உயர் அதிகாரிகள் உங்களிடத்தில் தந்த தகவலை நீங்கள் அவைக்குத் தெரிவித்தீர்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் இந்த அவையிலே தெரிவித்த ஒரு கருத்தை, இராணுவத்தினுடைய ஒரு பெரிய அதிகாரி அவர்கள் மறுத்ததாகச் செய்தி வந்திருக்கிறதே, அது இல்லை என்றுகூட சொல்லலாம் அல்லது அவர் சொன்ன செய்திகூட தவறு என்று சொல்லவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. குறுக்கு வழியிலே இப்படிப் பேசாதீர்கள். துரைமுருகன், முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். தாங்கள் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை எல்லாம் பார்க்க விரும்பினால் பார்க்கலாம். மறுபடியும் அந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்கிறேன், பதிலை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அவர்கள் இப்படித் தெரிவித்திருக்கிறார்கள் என்றால், அந்த அதிகாரி சொன்னது சரியல்ல, நான் சொன்னதுதான் correct என்று சொல்லலாம்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் கெட்ட எண்ணம் நன்றாகப் புரிகிறது. We do not want to enter into a running battle with Army Officers. அது எங்கள் நோக்கம் அல்ல. எங்கள் விருப்பமும் அல்ல. உண்மைத் தகவலை இந்த அவையில் தெரிவித்துவிட்டேன். அதோடு பிரச்சினை முடிந்தது. பணிகளும் முடிந்துவிட்டன. அதற்கு ஒரு இராணுவ அதிகாரி மறுப்புத் தெரிவித்தார் என்றால், அதற்கு ஏன் திரும்பத் திரும்ப இங்கிருந்து பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? ஏன் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கிக் கொண்டே போக வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? உண்மையிலேயே இராணுவத்தினர்மீது உங்களுக்கு நன்மதிப்பும், அக்கறையும் இருந்தால், இதோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டு, பேச முயன்றனர்.)

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் இந்தப் பிரச்சினையில் விவாதத்திற்கு இடம் இல்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையில் இனிமேல் விவாதத்திற்கு இடமில்லை. சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இனிமேல் இதுபற்றிய விவாதத்தை நான் அனுமதிக்க முடியாது (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. திரு. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு...

(திமுக. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

**திரு. துரைமுருகன்:** இது பிரச்சினையே கிடையாது. இதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை முடிந்தது. இனிமேல் இதுபற்றிப் பேசுவதற்கு அனுமதி கிடையாது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு நான் பதில் சொல்கிறேன். அந்தக் குறிப்பிட்ட Army அதிகாரியைப் பொறுத்த வரைக்கும் அப்படி அவர்கள் அந்தப் பிணத்தை எடுத்ததாகக் கூறியிருக்கிறார். கடலூர் மாவட்டம் என்று கூறியிருக்கிறார். (குறுக்கீடு) கடலூர் என்று கூறியிருக்கிறார்—அதுகுறித்து கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பேடி, ஐ.ஏ.எஸ்., அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. எல்லா நிவாரணப் பணிகளும் முடிந்த பிறகு, மீட்புப் பணிகள் எல்லாம் முடிந்த பிறகு, இறுதியிலே எங்கேனும், ஏதேனும் பிணங்கள் புதரில் இருக்கின்றனவா என்பதனைத் தேடுகிற பணிக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. இராணுவம் அப்படித் தேடியபோது ஒரு புதரிலே ஒரு பிணம் இருந்தது. அந்தப் பிணத்தை அவர்கள் அடையாளம் கண்டுபிடித்தார்கள். ஆனால் அகற்றுகின்ற பணி துப்புரவுத் தொழிலாளிகளிடம்தான் ஒப்படைக்கப்பட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெளிவுபடுத்தி இருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இராணுவம் பிணத்தை எடுக்கவில்லை. துப்புரவுப் பணியாளர்கள்தான், கண்டுபிடித்த ஒரு பிணத்தை எடுத்தார்கள் என்று அரசுக்கு விளக்கம் தந்திருக்கிறார். அதைத்தான் பேரவைத் தலைவர்



சொன்னார். அவர் அறையிலே சென்று நீங்கள் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றதை அறையிலே வந்து பேசுங்கள். திரு. சேகர்பாபு. (குறுக்கீடு) இனிமேல் இந்தப் பிரச்சினையில் விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையில் இனிமேல் விவாதத்திற்கு இடமில்லை. திரு. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றமிகு இந்த அவையிலே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** எனது கருத்துகளைச் சொல்கின்ற வாய்ப்பினை நல்கி இருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2005 (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் இனிமேல் விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. உரிய விளக்கங்கள் அனைத்தும் தரப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) இனிமேல் இதைப் பற்றிப் பேசுவது முறையற்றது, சரியில்லை. திரு. சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இனிமேல் பிரச்சினைக்கு இடமில்லை இதிலே. (குறுக்கீடுகள்) இனி பிரச்சினைக்கு இடமில்லை இதிலே.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. இந்தப் பிரச்சினையில் இனிமேல் விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எழுப்பப்பட்டு, பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரச்சினையானது, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) இனிமேல் விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** சுனாமியிலே, (குறுக்கீடுகள்) சுனாமியிலே.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிமேல் இதில் பேசுவதற்கு இடமில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையில் இனிமேல் பேசுவதற்கு இடமில்லை. (கூச்சல்—குழப்பம்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு. இராணுவத்தைப் பற்றி இதே அவையில் உங்களுடைய தலைவர் கருணாநிதி அவர்கள், 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ஆம் தேதியன்று என்ன பேசினார் என்பது இந்தச் சட்டமன்ற அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தலைவர் இராணுவத்தைப் பற்றி அன்றையதினம் என்ன கூறினார் என்பது இந்தப் புத்தகத்திலே, அவை நிகழ்ச்சியிலே இடம்பெற்றிருக்கிறது. அதைப் படித்துக் காட்டி முடித்த பிறகு, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்.(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். நான் ஏற்கெனவே (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அவை விதிகளை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) அவை விதிகளை முதலிலே மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



தங்களுக்குத்தான் சொல்கிறேன். உரிமை மீறல் பிரச்சினை இது தொடர்பாகக் கொடுத்தீர்கள். கொடுத்தபோதே நான் சொன்னேன். இதுசம்பந்தமாக மேற்கொண்டு ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால், என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள் என்று நான் சொன்னேன். அதேபோல, பொறுப்புணர்ச்சியோடு (குறுக்கீடுகள்) உங்களை நான் அழைத்து, இதுசம்பந்தமாக என்ன விவரங்கள் என்பதையும் உங்களுக்குச் சொன்னேன். சொன்னதற்குப் பிறகுதான் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விவாதத்திற்குப் பதிலைச் சொல்ல முடியும் என்கிற அந்த உணர்வோடு, அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். சொல்லியதோடு பிரச்சினை முடிந்து விட்டது. (குறுக்கீடுகள்) நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். இனிமேல் இதிலே பிரச்சினைக்கு என்ன இடம் இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.கே சேகர்பாபு.

பிற்பகல் 12-45

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன கருத்துக்கு ஒரு அதிகாரி சொன்னார். அந்தக் கருத்து தவறு என்று மீண்டும் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்து அதோடு முடிகிறது. நான் அதிலே மாறுபடவில்லை. ஆனால், அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, முதலமைச்சர் அவர்கள், நாங்கள் அன்றைக்கு இராணுவத்தை வரவேற்கவில்லை என்று சொன்னார்கள். இப்போதும் சொல்லுகிறேன். இலங்கைக்குச் சென்ற இராணுவம் என் தமிழச்சியைக் கற்பழித்தது; தமிழனைக் கொன்றது. அது தவறு என்பதை அன்றும் சொன்னோம், இன்றும் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. துரைமுருகன்:** ஆனாலும் இராணுவத்திற்கு 50 கோடி ரூபாய் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் இப்போது பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இந்தக் காரணத்திற்காகத்தான் நான் உங்களை அனுமதிக்க மறுத்தேன். தாங்கள் இப்போது பேசியது, இப்பொழுது எழுந்து திருவாய் மலர்ந்தருளிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவைக் குறிப்பிலே இடம் பெறாது. சேகர்பாபு, பேசுங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இராணுவத்தினரைப் பற்றி *(கூச்சல்-குழப்பம்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நாம் அனைவரும் பெரிதும் மதிக்கின்ற இந்திய இராணுவத்தைப் பற்றி மிகவும் அவதூறான ஒரு கருத்தைத் தெரிவித்தார். நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட்டீர்கள். ஆனால், அது அவைக் குறிப்பில் இருந்தால்தான், தி.மு.க.வினர் எப்படி இராணுவத்தினரைக் கேவலப்படுத்தியிருக்கிறார்கள் என்பது இந்த நாட்டுக்குத் தெரியும், அவர்கள் முழுவதுமாகத் தோல் உரித்துக் காண்பிக்கப்படுவார்கள் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, துரைமுருகன் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பில் தாங்கள் இருக்க அனுமதிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தாங்கள் சொன்ன பதில் அவைக் குறிப்பிலே இருக்கும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தாங்கள் சொன்ன பதில் அவைக் குறிப்பிலே இருக்கும். அவ்வளவுதான். சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஏற்கெனவே இந்த அவையிலே பேசியது... *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலே இடம் பெறுகிறது. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) சரி. *(கூச்சல்-குழப்பம்)*

**திரு. துரைமுருகன்:** அது உள்ளது. ஆனால்,....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இதில் முழுநேரச் சொற்பொழிவு ஆற்ற முடியாது. தாங்கள் பேசியது அவைக் குறிப்பில் இடம் பெறுகிறது. பிரச்சினையை அத்தோடு முடியுங்கள். பிரச்சினையை அத்தோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்) அறையில் பார்ப்போம்.

*(திரு. பரிதி இளம்வழுதி இருக்கையை விட்டு எழுந்து வந்து பேச முயன்றார்.)*

முதலில் இடத்தில் போய் உட்காருங்கள், *(கூச்சல்-குழப்பம்)* இடத்தில் போய் உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** சபையை நடத்துவது யார்? நீங்களா, முதலமைச்சரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் எல்லாம் உங்களுக்குச் சொல்லவேண்டிய தேவையில்லை. இடத்தில் போய் உட்காருங்கள். உங்களைப் போன்றவர்கள் சட்டப் பேரவைத் துணைத் தலைவராக இருந்தீர்கள் என்பதை நினைத்து வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன். உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(கூச்சல்-குழப்பம்)* உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

*(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச முயன்றனர்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினைக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைக்காமல் தொடர்ந்து அவையை அவமதிக்கின்ற முறையிலும், தொடர்ந்து அவைத் தலைவரை அவமதிக்கின்ற முறையிலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் தொடர்ந்து அவையை அவமதித்தால், அவைத் தலைவரை அவமதித்தால், அவையை விட்டு அவர்களை நீக்குமாறு நான் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அவரவர் இடங்களில் உட்காருங்கள். அவரவர்கள் போய் உங்கள் இடங்களில் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சேகர்பாபு, பேசுங்கள் (குறுக்கீடு) சேகர்பாபு, பேசுங்கள் (குறுக்கீடு). இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்தது. இனிமேல் இதை எழுப்புவதற்கு அனுமதியில்லை. சேகர்பாபு, பேசுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** *சபையை நடத்துவது யார்? சபாநாயகரா, முதலமைச்சரா? (குறுக்கீடுகள்)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *அம்மா! நாங்கள் கண் அசைத்தால் உங்கள் முகம். நாவசைத்தால் உங்கள் குரல். (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முறைகேடாகப் பேசினால் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) முறைகேடாகத் தாங்கள் பேசினால் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும். தயவு செய்து இடத்திலே உட்காருங்கள். சேகர்பாபு, பேசுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்த இதயம், இயக்கம், உயிர், உலகம் எல்லாமே நீங்கள் அம்மா! எண்ணும் ஒவ்வொரு நினைவிலும் வண்ணம் சிந்தும் வெளிச்சப் பிரவாகமே! நாங்கள் உண்ணும் ஒவ்வொரு சோறும் எங்களுக்கு நீங்கள் இட்ட அன்னதானமே! இளகிய மனம் கொண்ட இலக்கியமே!*

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சேகர்பாபு, உட்காருங்கள். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேரவைத் தலைவரை அவமானப்படுத்தக்கூடிய வகையிலும், இந்தப் பேரவையை நடத்துவது யார் என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு அவமானப்படுத்திய காரணத்தாலும் அவரைப் பேரவையிலேயிருந்து அகற்ற வேண்டுமென்று அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, பேசுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *இளகிய மனம் கொண்ட இலக்கியமே! அரசியல் இலக்கணமே! உங்கள் விழி வெளிச்சம், எங்களுக்கு நல்விடியல்! உங்கள் விரல் அசைவே எங்களுக்கு இலட்சிய விழிகள்! பெற்ற தாயினும் பரிந்து எம்மைக் காக்கும் இதய தெய்வமே! சிந்தனைப் பேரொளியே! சிந்தனைப் பேரொளியே! உண்மை, உழைப்பு, உறுதி, ஊக்கம், முழுமை முயற்சி, இனிமை, இரக்கம், எளிமை, எழுச்சி, புதுமை, புரட்சி...*

*(திமுக உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக்கூடியவர்களை அவையிலேயிருந்து அகற்றுங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, பேசுங்கள்.*



**திரு. பி.கே. சேகர்பாபு:** *புதுமை, புரட்சி, கருணை, கடமை என்ற சொற்களுக்கெல்லாம் பொருளாகவும், சிந்தனைக்கு முதலாவதாக வந்த எங்கள் வாழ்வே! தங்கத் தாரகையே! வாழ்நாள் சாதனையாளர் எங்கள் அம்மா அவர்களின் தங்க மலர்ப் பாதம் பணிந்து என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*துணிவு, நம்பிக்கை, தெளிவு, மூன்றும் உள்ளவர்கள் நினைத்ததைச் சாதிக்கலாம். அந்த மூன்றையும் ஒரு சேரப் பெற்றிருக்கின்ற ஒரே தலைவி எங்கள் அம்மா என்பதில் நாங்கள் பெருமைகொள்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரிக் குதிரையாய் முரண்டு பிடிக்கும் நிதிநிலை அறிக்கை அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் மக்களுக்காக வாசமிகு மலர்க் கொத்தாக மாறியிருக்கிறது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களது ஆணையை ஈடேற்ற பேரவைக் காவலர்கள் ஈடுபடுகின்றபோது மற்ற உறுப்பினர்கள் அவர்களைத் தடுக்கிறார்கள். அது தடுக்கப்பட வேண்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவை நடவடிக்கைகளைக் குந்தகப்படுத்தக்கூடிய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அவையிலேயிருந்து அகற்றப்பட வேண்டும் என்று நான் ஆணையிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

*(தி.மு.க. உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, பேசுங்கள்.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *நிதிநிலை அறிக்கை அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் மக்களுக்காக வாசமிகு மலர்க் கொத்தாக மாறியிருக்கிறது. வாடுகின்ற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர தாய்மை உள்ளத்துடன் அம்மா அவர்களின் அரசு தயாரித்த பட்ஜெட் இது. அரிசி விலை உயரக்கூடும், பருப்பு விலை பறக்கக்கூடும், சமையல் எண்ணெய் விலை கொதிக்கக்கூடும்... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முறைகேடாகக் கோஷம் போடக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், அவை நடவடிக்கைகளைக் குந்தகப்படுத்தக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்*

அனைவரையும் அவையிலேயிருந்து அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) துரைமுருகன், தாங்கள் பேசுவதற்கு அனுமதி கேட்பதே முறையற்றது. உங்களுடைய உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய தகுதி உங்களுக்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சேகர்பாபு, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், அப்புறப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) குந்தகப்படுத்தக்கூடியவர்களை அப்புறப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) சேகர்பாபு, பேசுங்கள்.

(திரு. துரைமுருகன் தவிர ஏனைய தி.மு.க. உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

**திரு. பி.கே. சேகர்பாபு:** வரிக் குதிரையாய் முரண்டு பிடித்துக்கொண்டிருக்கும் நிதிநிலை அறிக்கை அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் மக்களுக்காக வாசமிகு மலர்க் கொத்தாக மாறியிருக்கிறது. வாடுகின்ற ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தாய்மை உள்ளத்துடன் அம்மா அவர்களின் அரசு தயாரித்த தாய்மை பட்ஜெட் இது. அரிசி விலை உயரக்கூடும், பருப்பு விலை பறக்க நேரும், சமையல் எண்ணெய் விலை கொதிக்கக்கூடும், சர்க்கரை விலை கசக்கலாகும், பேருந்துக் கட்டணம் உயர்ந்து போகும், பால் விலை மேலும் பெருகிப் போகும் எனத் தப்புக் கணக்கிட்ட எதிர்க்கட்சியினரின் எண்ணங்களைத் தோப்புக்கரணமிட வைத்தது அம்மா அவர்களின் தமிழக பட்ஜெட். (மேசையைத் தட்டும் ஒலி) கடல் நீரைக் குடிநீராக்குவதற்கு, ஒதுக்காத ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியதாகக் கூறி ஓரங்க நாடகத்தை ஓயாமல் அரங்கேற்றும் மத்திய அரசின் சிதம்பர ரகசிய பட்ஜெட் அல்ல இது. உடைந்த தேங்காய் போல் உழைக்கும் மக்களுக்கு நன்மை செய்யும் உண்மையான தமிழக அரசின் பட்ஜெட் இது. ஏழைக்கென்று ஏற்றமிகு திட்டங்களைத் தாங்கி வந்துள்ள தாய்மை பட்ஜெட் இது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே Scotland நாட்டின் காவல் படை தலைசிறந்த காவல் படை...

(பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட தி.மு.க. உறுப்பினர்கள் லாபியில் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)



பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற வளாகத்திலே இருந்து கோஷம் போடக்கூடியவர்களைத் தயவுசெய்து அகற்றுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** லாபியில் இருந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசுகிறார்கள். அது முறையற்றது. அது தடுக்கப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமன்ற வளாகத்திற்குள்ளே இருந்து கோஷம் போடக்கூடியவர்கள், அவையில் இருந்தும் அகற்றப்படவேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

(திரு. துரைமுருகன் அவர்கள் பேரவையை விட்டு வெளியேறினார்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான வீரம், நாங்கள் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற துணிவிருந்தால், எதிர்க்கட்சித் துணைத் தலைவராவது நான் பேசி முடிக்கின்ற வரையில் இந்த அவையிலே இருக்கவேண்டும் என்று பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன். பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமான்கள், இந்த ஆட்சியின்மீதும், அம்மாவின்மீதும் எந்தவிதமான குறையும், குற்றமும் சொல்லமுடியாது என்ற காரணத்தினால்தான், நாங்கள் பேசுவதற்குப் பதில் சொல்லத் திராணி இல்லாமல் வெளிநடப்பு என்று ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்து, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். நீங்கள் இப்படி எல்லோரையும் வெளியேற்றி இருக்கிறீர்கள். இது கொஞ்சம் கடுமையாக இருக்கிறது. எனவே மறுபரிசீலனை செய்து, பிரதான எதிர்க்கட்சி தொடர்ந்து அவை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற வளாகத்தில் கோஷம் போடக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரையும் அவைக் காவலர்கள் அகற்றவேண்டும் என்று கட்டளையிடுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பிரதான எதிர்க்கட்சி அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு நீங்கள் வழி வகுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையினுடைய அமைதிச் சூழ்நிலையைக் கருதி, தொடர்ந்து பேரவை நல்ல முறையிலே நடைபெறவேண்டுமென்று சொன்னால், தாங்கள் பெரிதும் மனது வைத்து மீண்டும் மறுபரிசீலனை செய்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையில் தொடர்ந்து அமர்வதற்கு நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, எஸ்.ஆர்.பி. அவர்கள், நடைபெற்றவைகள் அனைத்தையும் நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்தார்கள். அந்த உரிமை மீறல் பிரச்சினைக்கு அவை அனுமதி மறுக்கப்பட்டது. ஏன் மறுக்கப்பட்டது என்பதையும் துரைமுருகனை அழைத்து நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும், மறுக்கப்பட்ட பிரச்சினையை வேறு ஒரு வடிவத்திலே அவர்கள் கொண்டு வந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையாக, கண்ணியமாக அதை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய விளக்கத்தை, பதிலை, அனைத்தையும் சொல்லியிருக்கிறார்கள். சொன்னதற்குப் பிறகும், நம்முடைய நாட்டு இராணுவத்தைச் சிறுமைப்படுத்துவதைப் போல மீண்டும், மீண்டும் அதைப் பேசுவது என்பது முறையற்றது. அதை நான் அனுமதிப்பதும் சரியில்லை. ஆகவேதான் நான் சொன்னேன். இந்தப் பிரச்சினைக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வையுங்கள். பிரச்சினையை முடியுங்கள் என்று சொன்னேன். அவர்கள்தான் ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்தைச் சிறுமைப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொன்னீர்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இராணுவத்தைச் சிறுமைப்படுத்திச் சில வாசகங்கள் இங்கே சொல்லப்பட்டதை மீண்டும் அவைக் குறிப்பிலே ஏற்றி இருக்கிறீர்கள். அதை ஏற்றி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போதுகூட காலம் கடந்து விடவில்லை. அதை அவைக் குறிப்பிலே இருந்து அகற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதிலே அகற்றச் சொல்வதற்கு உரியவரே இல்லை. அவர் பேசியது, அவைக் குறிப்பில் ஏறவேண்டும் என்றுதான் பேசினார். அவருடைய தலைவர் ஏன் போய் இராணுவத்தை வரவேற்கவில்லை என்பதற்கு விளக்கம் சொல்லி, அவர்தான் விளக்கத்தைப் பேசினார். அது இராணுவத்தைச் சிறுமைப்படுத்துவதாக இருக்கிறது என்று கருதியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், நான் சொன்னதற்கு அவர்கள் சொன்ன பதிலும் இடம் பெறட்டும் என்று, அவர்களும் பெருந்தன்மையாகச் சொன்னார்கள். அது அவைக் குறிப்பில் ஏறி இருக்கிறது. அவரும் மகிழ்ச்சியாக அதை ஏற்றுக்கொண்டார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மீண்டும் இந்த அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வழி செய்யவேண்டும் என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும் உங்களிடம் வேண்டுகோள் வைத்தார்கள். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை யாருமே கட்டுப்படுத்த முடியவில்லை. யாருக்கும் அவர்கள் கட்டுப்பட மாட்டேன் என்கிறார்கள். அவர்களுடைய தலைவர் திரு. கருணாநிதி, இந்த அவைக்கு வருவதே இல்லை. அவருக்கு அடுத்தபடியாக அந்தக் கட்சியை நடத்தப்போகின்ற குட்டித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் இந்த அவைக்கு வந்தும், பேசாமல் உட்கார்ந்து இருக்கிறார். தன்னுடைய உறுப்பினர்கள் இங்கே கட்டுப்படாமல் அராஜகம் செய்துகொண்டிருக்கிறபோது அவர்களைக் கட்டுப்படுத்த எவ்வித முயற்சியும் அவர் மேற்கொள்வதில்லை. அவர்களுடைய சட்டமன்றத் தலைவர், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பெரும்பாலும் இந்த அவைக்கு வருவதில்லை. துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள் தவறாமல் வருகிறார். ஆனால் அவரால் அவருடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவரால்கூட அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால்தான் வேறு வழியின்றி அவர்களை வெளியேற்றியிருக்கிறீர்கள். ஆகவே எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, மீண்டும் அவர்களை இங்கே அனுமதிக்க வேண்டுமென்று கேட்கின்ற மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும், ஜி.கே. மணி அவர்களும், தி.மு.க.வினர் இப்படி நடந்துகொண்டால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற

உத்தரவாதத்தைத் தர முடியுமா? அப்படித் தந்தால் நீங்கள் அனுமதிக்கலாம்.

*பிற்பகல் 1-00*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே இதேபோன்று பல நிகழ்ச்சிகள் ஏற்படுகின்ற நேரத்தில் உறுப்பினர்களை அந்த சபாநாயகர் அவர்கள் காவல் துறையை வைத்து வெளியேற்றுவதை நாம் பார்க்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறையை வைத்து வெளியேற்றவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை இந்த நாடே அறியும். அங்கே எதிர்க்கட்சியினர் வம்பு செய்தால், அவையை ஒத்திவைத்து விடுகிறார்கள். எந்த அலுவலும் நடைபெறுவதில்லை. ஆனால் இங்கேயோ உண்மையாக மக்களைப் பற்றிக் கவலைப்படுகிறோம். மக்களுக்காக நடைபெறுகின்ற இந்த அவையில், மக்களுக்கான அலுவல்கள் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான், வம்பு செய்கிறவர்களை வெளியேற்றுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முதலமைச்சர் அவர்களுடைய உணர்வோடு நானும் இணைந்து கொள்கிறேன். இந்த அவையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு, ஒரு சுமுகமான நிலை ஏற்படுவதற்கு, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்ற நேரத்தில், சபையை சற்று நிறுத்தி வைத்து, சபை நடைபெற, (குறுக்கீடு) சபையினுடைய அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மேற்கொண்டு ஏற்படாமல் இருப்பதற்கு, லோக் சபாவில்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லும் கருத்து ஏற்புடையதல்ல. மத்திய அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசுக்கு இந்த நாட்டு மக்களோடு நேரடித் தொடர்பே கிடையாது. அதனால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கூச்சலும், குழப்பமும் இட்டால் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும், எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் அவையை



ஒத்திவைத்துக்கொண்டே போகலாம், ஒத்திவைத்துக் கொண்டே இருக்கலாம். அதனால் யாருக்கும் பாதகம் இல்லை. அவர்களும் கவலைப்படுவதில்லை. ஆனால், மாநில அரசு அப்படி அல்ல. மாநில அரசுக்குத்தான் மக்களோடு நேரடித் தொடர்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசிடம்தான் மக்கள் நேரடியாகக் கேள்வி கேட்கிறார்கள். நாங்கள் இதைக் கேட்டோம்; எங்களுக்கு ஏன் இதைச் செய்யவில்லை; நீங்கள் ஏன் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். ஆகவே வம்பு செய்கின்ற எதிர்க்கட்சிகளுக்காக இந்த அவையை ஒத்திவைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே நல்ல விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே நடைபெறக்கூடிய அந்தக் கூச்சல்-குழப்பம் போல, அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தவே இல்லை. அப்படிப்பட்ட நடைமுறையும் இங்கே தொடர்வதை அனுமதிக்கக்கூடாது. அதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும்கூட, நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; இது நிதிநிலை அறிக்கை சம்பந்தமான விவாதம். இதில் எல்லா எதிர்க்கட்சிகளும் பங்குபெற வேண்டும். அவர்கள் பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள். ஆகவே ஒரு அசாதாரணச் சூழ்நிலை நிலவினாலும்கூட, நீங்கள் பெரிதும் மனது வைத்து மறுபரிசீலனை செய்து, மீண்டும் அவர்கள் அவைக்கு வருவதற்கு, தொடர்ந்து பணியாற்றுவதற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜி.கே. மணி அவர்கள் சொன்னதற்குத்தான் இப்போது விளக்கம் அளித்தேன். இப்போது காங்கிரஸ் கட்சியை எடுத்துக்கொண்டால், திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்குக் காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கட்டுப்படுகிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியை எடுத்துக்கொண்டால், திரு. ஜி.கே. மணி அவர்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கட்டுப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இருவரும் வெளிநடப்பு என்று அறிவித்தால், அவர்களுடைய உறுப்பினர்கள் தவறாமல் வெளிநடப்புச் செய்கிறார்கள். ஆனால் திமுகவிலோ, துணைத் தலைவர் இங்கே அமர்ந்திருக்கிறார், மற்றவர்கள் எல்லாம் வெளிநடப்புச்

செய்கிறார்கள். 'நீங்களும் வாருங்கள், ஏன் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள், ஏன் பேச முயற்சி செய்கிறீர்கள்' என்று அவரைக் கண்டிக்கிறார்கள். ஆகவே மீண்டும் கேட்கிறேன், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை யார் கட்டுப்படுத்துவது? யாருக்குமே அவர்கள் கட்டுப்படமாட்டேன் என்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை அவர்களுடைய தலைவருக்கு இருக்கிறது. தலைவர் வரமாட்டேன் என்கிறார்; குட்டித் தலைவரும் கட்டுப்படுத்தமாட்டேன் என்கிறார். யார் கட்டுப்படுத்துவது? *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

*பிற்பகல் 1-05*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு சபாநாயகரைச் சார்ந்திருக்கிறது. அந்த முறையிலே சபாநாயகர் அவர்கள் எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களையும் அழைத்து நம்முடைய சட்டமன்றம் நல்ல முறையிலே நடைபெறுவதற்கான ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரையும் அழைக்க வேண்டிய அவசியமே இல்லை. எல்லோருமே இங்கேதான் இருக்கிறார்கள். எல்லோரும் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே Scotland நாட்டின் காவல் படை, தலைசிறந்த காவல் படை என்று சொல்வார்கள். அந்த Scotland காவல் படையை மிஞ்சும் வகையில் இன்றைக்குத் தமிழகக் காவல் துறை விளங்குகிறது. இந்தப் புகழ், ஆக்கமும், ஊக்கமும், உற்சாகமும் அளித்து, தமிழகக் காவல் துறையைச் சரியான பாதைக்கு அழைத்துச் சென்ற எங்கள் அம்மா அவர்களையே சாரும். *(மேசையைத் தட்டும் ஒலி)*.

தமிழகக் காவல் துறை, தொழில் ரீதியான அணுகுமுறை, வீரம், திறமை, சாதனை ஆகியவற்றில் நாட்டிலேயே முதன்மை படைத்ததாக விளங்குகிறது.



இந்தியாவிலுள்ள 35 மாநிலங்களில் தமிழகத்தைப் பொறுத்தவரை, சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் அம்மாவிற்கு நிகர் அம்மாதான் என்பதைப் பல தடவை, பல சந்தர்ப்பங்களில் நிரூபித்திருக்கின்றார்.

இந்தியா முழுவதிலும் தீவிரவாதம் ஆங்காங்கே தலைதூக்கி நிற்கின்றது. 21 மாநிலங்களில் மக்கள் யுத்தக் குழு உள்ளது. நமக்கு அண்டை மாநிலமாக உள்ள ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழு என்ற பெயரில் நக்சலைட்டுகள் இயங்கி வருகிறார்கள். ஆந்திர அரசும் அவர்களை அழைத்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றது. அவர்களும் வெளிப்படையாக மாநாடு நடத்துகிறார்கள்.

எல்லை மாநிலங்களான அசாமில் உல்ஃபா தீவிரவாதிகள்; பீகார் மற்றும் ஜார்க்கண்டில் போடோ தீவிரவாதிகள்; காஷ்மீரில் லஸ்கர்-ஈ-தோயிபா; நாகாலாந்து மற்றும் மணிப்பூர் மாநிலங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள்; இவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அம்மாநில அரசுகள் அவர்களிடம் தோழமையுடனும், சமரசப் பேச்சுவார்த்தையையும் நடத்திக்கொண்டிருக்கின்றன.

81 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டு கட்டத் தேர்தலைத்தான் நடத்த முடிகிறது. பீகாரில் வாக்குப் பதிவின்போது பல பேர் உயிரிழக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த அளவிற்கு வன்முறை தலைவிரித்து ஆடுகிறது.

தீவிரவாதக் குழுக்களுக்கு எந்தக் காலகட்டத்திலேயும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வளைந்து கொடுத்ததேயில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தனி ஒரு அரசாங்கத்தை நடத்திவரும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை தமிழகத்தில் அறவே ஒழிந்து, தீவிரவாதத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* காவல் துறைக்கு, வரும் நிதியாண்டில்...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, I am on a point of order. Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், சில மாநிலங்களைக் குறிப்பிட்டு, அங்கே தேர்தல் 2 கட்டம், 3 கட்டமாக நடத்துவது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை சரியில்லை என்ற காரணத்தினாலே நடத்தப்படுகிறது என்று சொல்வது, நம்முடைய தேர்தல் கமிஷன் பாதிக்கப்படுகிற ஒரு விஷயம். It will reflect on them. அதனால், அந்த வரிகள் இந்த சபைக் குறிப்புகளில் இருப்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் கூறியது தேர்தல் கமிஷனை அல்ல. அந்த மாநிலத்திலே சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் சரிவர இல்லாததால்தான் இரண்டு கட்டத் தேர்தலை நடத்துகின்ற ஒரு சூழ்நிலை என்ற அர்த்தத்திலேதான் நான் குறிப்பிட்டேன்.

காவல் துறைக்கு, வரும் நிதியாண்டில் 1339.33 கோடி ரூபாயை ஒதுக்கி அந்தத் துறை நவீனமயம் ஆக்கப்பட வேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். தீய சக்தி நடமாட்டம் நாட்டில் ஒரு கணமும் இருக்கவே கூடாது என்பதில் தீவிரம் காட்டியிருக்கின்றார்கள்.

2001 முதல் 2004 வரையிலான 3 ஆண்டு காலத்தில் 10,737 காவலர்களையும், 961 பெண் உதவியாளர்களையும் நியமனம் செய்துள்ளது அம்மா அவர்களின் அரசு. காவல் துறையில் மேலும் தற்போது காலியாகவுள்ள 2,219 காவல் பணியிடங்களுக்கான ஆட்களைத் தேர்வு செய்யும் பணி தொடங்கியிருக்கிறது. இதுவரையில் நடைபெற்ற தேர்வுகள் அனைத்தையும் யாரும் எந்தவிதக் குற்றச்சாட்டும் கூற முடியாதபடி நேர்மையாகவும், நேர்த்தியாகவும் நடத்திக் காட்டியிருப்பவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், பணிக் காலத்தில் மரணம் அடைகிற காவலர்களுக்குத் தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளும் இரங்கல் செய்தியையும், அவர்களின் குடும்பத்திற்குச், சகோதர மனப்பான்மையுடன் ஆறுதலையும் தெரிவித்துக் கடிதம் எழுதுகிற ஒரே முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்தில்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான் என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அந்தக் குடும்பத்திற்கு 1 இலட்சம் ரூபாயை வழங்கவும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன மணி, அவர் பேசி முடித்து விடட்டும். ஏதாவது சந்தேகம் இருந்தால் பிறகு கேளுங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 1-10

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களையும் கேட்டுக்கொள்கிறேன்; முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மீண்டும் அவர்கள் உள்ளே வருவதற்கு, தொடர்ந்து அவை அமைதியாக நடைபெறுவதற்குத் தாங்கள் எல்லாம், எல்லோரும் சேர்ந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன மணி, விடிய விடிய இராமாயணம் கேட்டு, விடிந்ததற்குப் பிறகு வேறு மாதிரி சொன்ன மாதிரித் தெரிகிறது. உட்காருங்கள். எல்லாவற்றையும் முதலமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். நிலைமையை நீங்களே பார்த்தீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முதலமைச்சரையும் நான் கேட்டுக்கொள்கிறேன், உங்களையும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொஞ்சம் மனது வையுங்கள், தலைவர் அவர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நல்ல சூழல் உருவாகட்டும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்து போன அந்தக் காவல் துறையினரின் குடும்பத்தாருக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1 இலட்சம் ரூபாயையும் நிதியாக அளித்து, காவலர்களின் குடும்பத்தையும் தன் குடும்பமாகப் பாவித்து, காவலர்களின் குடும்பத்தைக் காப்பாற்றும் காவல் தெய்வமாக இன்றையதினம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி ரொம்ப இக்கட்டான நிலைமையில் தவிப்பது தெரிகிறது எனக்கு. தயவுசெய்து உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் உங்களைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். பிரதான எதிர்க்கட்சி உள்ளே இருக்க வேண்டும் என்று கேட்கிறோம். தாங்கள் அனுமதிக்காத காரணத்தினாலே, அதைக் கண்டித்து, பாட்டாளி மக்கள் கட்சி வெளிநடப்புச் செய்கிறது.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு மகிழ்ச்சியோடு வெளிநடப்புச் செய்கின்ற காட்சியை இன்றைக்குத்தான் நான் பார்க்கின்றேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளிடையே தீவிரவாதத்திற்குத் தலைமை தாங்குகின்ற தனி மனிதர்களைப் பிடிக்க முடியாத நிலைமை நீண்ட நெடுங்காலமாக நிலவி வருகிறது. 6,000 சதுர கிலோ மீட்டர் காடுகளைத் தன்னுடைய இருப்பிடமாக வைத்துக் கொண்டு, கடந்த 20 ஆண்டுகளாக 3 மாநிலங்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பனையும், அவனது கும்பலையும் அடையாளம் தெரியாமல் ஆக்கிக் காட்டுவேன் என எங்களது அம்மா அவர்கள் சூளுரைத்தார்கள்.

18-10-2004 அன்று வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட அதிரடிப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தி உலகமெங்கும் உள்ள முன்னணிப் பத்திரிகைகளில் முதல் பக்கச் செய்தியாக அன்றையதினம் வெளியிடப்பட்டிருந்தது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா அவர்கள் தலைமையில் இயங்கிய அதிரடிப் படையினர் வீரப்பனை வீழ்த்தியது குறித்து மத்திய அரசு, இதை ஒரு மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல், ஒரு நாடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவும், உலக அளவிலே சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாகவும் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அந்தப் படையில் பணியாற்றிய வீரர்களுக்கு மாநில அரசின்



அதிகாரத்திற்குட்பட்ட ஒரு படி பதவி உயர்வையும், பரிசையும் வழங்கி, பாராட்டு விழாவையும் அம்மா அவர்கள் நடத்தினார்கள். உயர் அதிகாரிகளுக்கு அம்மா அவர்கள் அறிவித்த பதவி உயர்வை வழங்க மத்திய அரசு மறுத்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் பெயர் ஒரு நாட்டின் பெயருக்குள்ளேதான் அடங்கி இருக்கும் என்ற நிலை மாறி, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய நடவடிக்கைகளால் ஒரு மாநிலத்தின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு நாட்டின் பெயரை உச்சரிக்க வைத்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சட்டத்திற்கு அடங்கிய சுதந்திரம் அடுப்பிலே உள்ள நெருப்பு. சட்டத்திற்கு அடங்காத சுதந்திரம் தரைமீது பரவிய நெருப்பு. தீவிரவாதம் என்பது தரைமீது பரவிய நெருப்பு. அதை வளரவிட்டால் நாடே நாசமாகிவிடும். அப்படித் தரைமீது பரவியிருந்த நெருப்பை அணைத்துக் காட்டி, சமுதாய வாழ்வு சரிவர நடத்திட வழிவகுத்திட்ட ஒரே தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்க ஒரு கரம். கொடுக்க நினைப்பதைத் தடுக்க நினைப்பவர்கள் கொடுக்கை அறுக்க மறு கரம் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே குறிப்பிட்டார்கள். தான் கொடுக்க நினைப்பதைத் தடுக்க நினைப்பவர்கள் கொடுக்கை அறுத்து, அள்ளித் தரும் வள்ளலாகத் திகழ்பவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, அதைப் பிச்சைக்காரத் திட்டம் என்றும், அப்பனுக்குச் சாராயம், பிள்ளைக்குச் சத்துணவா என்று கேட்டதோடு நில்லாமல், சத்துணவு சாப்பிட்ட குழந்தைகளின் தட்டைத் திருடி வந்து, இந்த அவையிலே காட்டிக் கேலி செய்தோரும் உண்டு. இப்பொழுது வெளிநடப்புச் செய்திருக்கின்றார். சத்துணவுத் திட்டத்திற்கு இந்த நிதி ஆண்டில் 742.14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி காப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு இதுவரை எந்த அரசும் செய்திடாத

வகையில், அவர்களின் ஊதிய உயர்வினையும், அவர்கள் ஓய்வுபெறும்போது அவர்களது குடும்பம் நிம்மதியாக இருந்திடவும் ரூபாய் 50,000/-ஐ பெருந்தன்மையுடன், மனிதாபிமானத்துடன் வழங்கிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இன்றைக்கு சத்துணவுத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற இரண்டு இலட்சம் பேர் அல்ல; இரண்டு இலட்சம் குடும்பங்களும் மனதார, வாயாரப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகள் பசி அறிந்து பணிவிடை செய்யும், பசி தீர்க்கும், பணியாளர்களின் குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு வாரி வழங்கியவர், தாய் உள்ளம் படைத்த தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானுயர்ந்த கட்டடங்கள், வழியெங்கும் பூங்காக்கள், வாகனங்கள் விரைந்தோட வழுவழுப்பான நெடுஞ்சாலைகள், வார்க்கூந்தலை வகிடு எடுத்ததுபோல் தார்ச் சாலைகளில் மையத் தடுப்புகள், சாலைக்குள் பூங்காக்கள், பளபளக்கும் கல் பதிக்கப்பட்ட சுத்தமான கழிப்பறைகள். படுத்து உறங்கத் தூண்டும் பளிங்கு நடைபாதைகள், சுகாதார நிலையங்கள், வெள்ளமே பெருக்கெடுத்தாலும் வழிந்து ஓடும் நீர்வழிகள்; விடியலே தெரியாத விளையாட்டுத் திடல்கள். குப்பைகளுக்கு Good bye சொல்லும் குடியிருப்புப் பகுதிகள். நட்ட நடு நிசியையும் பட்டப் பகலாக்கிடும் நவீன மின் விளக்குகள் என வர்ணிக்கும் நான் இந்த இடம், வல்லரசாகக் கொடி பிடிக்கும் அமெரிக்காவும் அல்ல, ஜில் அரசாகப் பணிபுரியும் ஆஸ்திரேலியாவும் அல்ல, அம்மா அவர்களின் தலைமையிலே நல்லரசாக நடைபோடும் நம் தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரம்தான் இது. (மேசையைத் தட்டும் ஒலி) உலக தேசங்களின் புகழ் மிக்க தலைநகரங்களுக்கு இணையாக இந்தச் சென்னை மாநகரைச் செழுமைப்படுத்தியிருப்பவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

"நான் அண்மையில் பெங்களூருக்குக் குடியேற நேர்ந்தது"—ஒரு பெண்மணி கூறுகிறார்—" நான் அண்மையில் பெங்களூருக்குக் குடியேற நேர்ந்தது. இங்குள்ள என்னுடைய நண்பர்கள் சிலர், ஆஹா! பெங்களூர் அருமையான ஊர். குளிர்ச்சியான நகரம். நீ அதிர்ஷ்டசாலி என்று சொன்னார்கள். Garden City என்று சொல்லப்பட்ட பெங்களூருக்குச் சென்ற பிறகுதான் தெரிந்தது, அங்குள்ள பூங்காக்களில் பூக்கள் இல்லை. சாலைகள் குண்டும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் இருந்தன. நகர சுகாதாரம் சுத்த மோசம். ஒரு ஆறு மாத காலம் பெங்களூரில் நகர வாழ்க்கையை அனுபவித்த பிறகுதான் சென்னையின் அருமை எனக்குத் தெரிந்தது. அது முதல் நான் தமிழக முதல்வரின் ரசிகையாகிவிட்டேன். இங்கு தமிழக முதல்வரை விமர்சிப்பவர்கள்கூட ஒரு முறை பெங்களூருக்குச் சென்று திரும்பினால் முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ரசிகராகி விடுவார்கள். இங்கு அழகான சாலைகள், புத்துணர்ச்சியூட்டும் பூங்காக்கள், சாலைகளில் பச்சைப்பசேலென்ற மரங்கள், ஒழுங்கான சாலைப் போக்குவரத்து அமைப்புகள், குப்பை இல்லாத சுத்தமுள்ள சூழ்நிலை, இப்படி பெங்களூர், சிங்கப்பூர் போல ஆக வேண்டாம் என்றாலும், சென்னை அளவுக்காவது இருக்கக்கூடாதா?" இந்தக் கருத்தைக் கூறியவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. தமிழக அரசின் சார்பிலே கூறப்பட்ட கருத்து அல்ல. Indian Express நாளிதழில் 20-2-2005 அன்று பிரபல எழுத்தாளரும், பத்திரிகையாளருமான திருமதி வாசந்தி அவர்கள் எழுதி வெளிவந்துள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புது டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு 35 மாநிலங்களில் உள்ள...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, Express எல்லாம் படிக்க ஆரம்பித்துவிட்டீர்கள், இல்லையா?

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் போன்ற நண்பர்கள் கூறுகின்றபொழுது, புரட்சித் தலைவி அம்மாவினுடைய புகழ் எந்தப் பத்திரிகையில் பதிக்கப்பட்டிருந்தாலும் அதை வாங்கி, பொக்கிஷமாக வைத்துக்கொள்வது என்னைப் போன்ற தொண்டர்களுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) புது டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு 35 மாநிலங்களில் உள்ள பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கும் அமைப்பு அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி அமைப்பு. இந்தத் தொழில்நுட்பக் கல்வி அமைப்பின் உறுப்பினர் திருமதி அனுராதா குப்தா என்ற மூத்த I.A.S. அதிகாரி, சென்னைக்கு சமீபத்தில் வந்திருந்தபோது New Indian Express நிருபர்களுக்குப் பேட்டி அளித்தபோது, அந்தப் பேட்டியில், 'சென்னை நகரம் மாறிவிட்டது' என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள். பேட்டியின்போது, 'நான் ஏற்கெனவே மூன்று முறை இந்தச் சென்னை மாநகருக்கு வந்திருக்கின்றேன். ஆனால் அப்போது இல்லாத ஒரு சிறப்பு

இப்போது; சென்னை மாநகரம் மிகவும் சிறப்பாக உள்ளது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும், சுகாதாரம், சாலை வசதி, அமைதி ஆகியவற்றில் இந்நகரம் முழுமையாக நல்லபடியாக உள்ளது' என்று கூறிவிட்டு, அடுத்ததாகக் கூறியதுதான், 'ஒரு நாட்டினுடைய தலைநகரத்தை வைத்துத்தான் அந்த நாட்டினுடைய முன்னேற்றத்தையும், மற்றவற்றையும் குறிப்பிட்டுக் கூற முடியும்.' அவர் கூறிய கூற்று — "சென்னை மெரினா கடற்கரை நடைபாதை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சண்டிகர், புது டெல்லி ஆகியவற்றை ஒப்பிடும்போது சென்னையில் திறந்தவெளிகள் நிறைய உள்ளன. ஆகவே, இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள தலைநகரங்களில் சென்னையைப் போன்ற சிறப்புப் பெற்ற தலைநகரத்தை—நான் இந்தியா முழுவதும் சுற்றியுள்ளேன் — எங்கும் காணவில்லை" என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகின்ற உதாரணங்கள். இப்படிப்பட்ட, மாறிவரும் சென்னை நிலையைக் கருத்தில் கொண்டுதான்—தி.மு.க. உறுப்பினர்கள் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். தேர்தல் வந்தாலே தனக்குப் பாதுகாப்பான தொகுதி சென்னைதான் என்று தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். ஆனால், இந்த முறை, மாறிவரும் சென்னையும், மாறிவரும் மக்களுடைய மனமாற்றத்திற்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய தலைவர்கள் எந்தத் தொகுதியில் சென்னையிலே போட்டியிட்டாலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுட்டுவிரல் காட்டுகின்ற கடைக்கோடித் தொண்டன் அந்தத் தலைவர்களைத் தோற்கடிக்கின்ற அளவிலே இன்றைக்கு சென்னை மாநகரம் மாற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சிறப்போடு இருக்கின்ற இந்தச் சென்னை மாநகரத்து மக்கள் கடந்த ஆண்டு நகரை விட்டே காலி செய்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. காரணம், கடந்த ஆட்சியாளர்களின் திறமையின்மையால், கடந்த ஆட்சியாளர்களின் தொலைநோக்குத் திட்டமின்மையால். அந்த நிலையை மாற்றி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏற்பட்ட கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு லாரிகளின் வாயிலாகத் தண்ணீரை அளித்தார்கள். இந்தச் சென்னை மாநகர மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற



இந்தக் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்பதற்காக ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம்தான் புதிய வீராணம் திட்டம். அந்தப் புதிய வீராணம் திட்டம் தொடங்கப்பட்டபோது, இங்கே அவையிலே இல்லாமல் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்தத் திட்டம் வேண்டவே வேண்டாம் என்று கூறினார்கள். காரணம், இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தினால், வீராணம் என்று வருகின்றபோதெல்லாம், தங்களுடைய பழைய ஊழல் மக்களுக்கு நினைவிற்கு வந்துவிடும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதால், அது வேண்டாம் என்று கூறினார்கள். மேலும் ஒரு தலைவர்கூட அந்தத் திட்டம் வேண்டவே வேண்டாம், அது செயல்படவே செயல்படாது என்று கூறினார். அவருடைய நோக்கம், நிச்சயமாக இந்தத் திட்டம் செயல்படும், இந்தத் திட்டத்தினால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழுக்கு, புகழ்க் கிரீடத்தில் மேலும் ஒரு வைரக் கல் பதித்ததாக இந்த வீராணம் திட்டம் அமைந்துவிடும் என்பதற்காக, அவரும் வேண்டாம் என்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகீரதன் கங்கையைக் கொண்டு வந்ததைப்போல, புதிய வீராணம் திட்டம், 720 கோடி ரூபாய் செலவில், 2-2-2003 அன்று தொடங்கப்பட்டு, 31-5-2004 அன்று திட்டம் நிறைவுற்று, 31-10-2004 அன்று சென்னை மாநகருக்குக் குடிநீரை வழங்கி மகிழ்ச்சியளித்தார்கள். இதை ஏன் கூறுகிறேன் என்றால், இந்தத் திட்டத்தில், 228 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரும்புக் குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஆசியத் துணைக் கண்டத்திலேயே இவ்வளவு நீளமான குழாய்கள் பதிக்கப்பட்டு, ஒரு நகரத்திற்கு நீரை முழு வெற்றிகரமாகச் செயல்படுத்திய ஒரு திட்டம் உண்டு என்றால், அது இந்தப் புதிய வீராணம் திட்டம் ஒன்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்த அளவில், நினைத்ததை நினைத்தபடியே நடத்திக் காட்டுகின்ற தலைவர் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும் நிரூபித்து இருக்கின்றார்.

மேலும் 300 கோடி ரூபாய் செலவில் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் முடிவெடுத்துள்ளார்கள். அரபு நாடுகளைப் போல, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினைச் செயல்படுத்தினால், சென்னைக்கு அன்றாடத் தேவையான 840 மில்லியன் லிட்டர் நீரை நிறைவு செய்ய

முடியும் என்பதற்காக, 2003 ஆம் ஆண்டு சென்னை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். 2004 ஆம் ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட்டிலும் ஆயிரம் கோடி ரூபாய் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பதாக அறிவித்தார்கள். ஆயிரம் கோடி ரூபாய் என்று அறிவித்துவிட்டு, ஐந்து கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கீடு செய்துவிட்டு, ஏமாற்று வித்தை காட்டுகிறார்கள். ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான ஒப்பந்தங்களைப் பெறச் செய்து, அதை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இந்தத் திட்டத்திற்கான நிதியை தமிழக அரசே அளிக்கும் என்று சொல்லிவிட்டார். எங்கள் அம்மாவைப் பொறுத்த அளவில், யாருமே நினைத்துப் பார்க்க முடியாததை நிகழ்த்திக் காட்டும் வல்லமை படைத்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னால் பேசிய தி.மு.க. உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள்கூட சுனாமியைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் இருந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும். டிசம்பர் 26 ஆம் தேதி. உதயமே அஸ்தமனமான அதிகாலை வேளை. அதிர்ச்சி அலைகளால் ஆர்ப்பரித்து எழுந்த ஆழிப்பேரலை சுனாமி. தமிழகக் கரைகளை தலைவிரி கோலமாகப் புரட்டிப் போட்ட கறுப்பு ஞாயிறு. அந்த ஆட்கொல்லிப் பேரலையால் 8,018 பேர் சின்னாபின்னப்படுத்தப்பட்டு உயிரிழந்தார்கள். அலைகள் அள்ளித் தின்றதுபோக, மிஞ்சிய உயிர்கள் தமிழகத்தின் 13 மாவட்டங்களில் உள்ள கடலோரக் கிராமங்களில், ‘அம்மா, அம்மா, அம்மா’ என்று கூக்குரலிடும் அவல ஓலம் எங்கு நோக்கினும். சம்பவப் பகுதியில் தன் குடும்பத்தினரைத் தேடிப் பார்க்கக்கூட மக்கள் நடுங்கிய அபாயச் சூழ்நிலை. எந்தத் தலைவரும் ஆறுதல் சொல்லக்கூட முன் வராத வேளையில், மீண்டும் சுனாமி வருமென்ற எச்சரிக்கையையும் மீறி, தன் உயிரையும் பொருட்படுத்தாமல், தாயாக நேரில் வந்து, அரண்ட மக்களை அரவணைத்து, இதோ நான் இருக்கிறேன் உங்களைக் காப்பாற்ற என ஆறுதல் கூறியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர் மட்டும்தான். உடனடியாக நிவாரணப் பணிகளையும் செய்திட உத்தரவிட்டார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட



4,800 கோடி ரூபாயை மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டார் அம்மா அவர்கள். அதன்பின் மத்திய அரசு நிபுணர் குழுவினர் தமிழகத்திற்கு வந்து 3 பிரிவுகளாக, 3 நாட்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்தனர். தமிழக சேத மதிப்பீட்டுத் தொகை 4,799 கோடியே 54 இலட்சம் ரூபாய் என்று மத்திய 'அரசுக்கு அறிக்கை அளித்தார்கள். இதை ஏன் கூறுகிறேன் என்றால், நிபுணர் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும், எங்கள் அம்மா புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோரிக்கை வைத்த தொகைக்கும் உள்ள வித்தியாசம் வெறும் 46 இலட்சம் ரூபாய் மட்டும்தான். ஒரே ஒரு நாளிலே இந்த மாநிலத்திலே ஏற்பட்ட இழப்புகளைக் கணக்கிட்டுத் தெளிவாக 4,800 கோடி ரூபாய் நிதி வேண்டுமென்று கோரினார். மத்திய அரசின் குழுவினுடைய அதிகாரிகள் 3 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் கொடுத்த அறிக்கைக்கும், அம்மா அவர்கள் சொன்ன கணக்கிற்கும் வித்தியாசம் வெறும் 46 இலட்சம் ரூபாய்தான். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கணக்கு எப்போதுமே தப்பாது என்பதற்கு இது ஒரு உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய ஆட்சித் தேரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டு எப்படிச் செலுத்தி வருகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு சிறந்த உதாரணம் தேவையில்லை.

இந்தக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க மத்திய அரசானது 172672 கோடி ரூபாய் வழங்குவதாக அறிவித்தது. அந்தத் தொகை முழுமையாக இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 895.81 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது. வரும் நிதியாண்டில் 1,000 கோடி ரூபாயை பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்ற ஒதுக்கியிருக்கின்றார். மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகவே படைக்கப்பட்ட முழு உருவமாகக் காட்சி தந்துகொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் காணும்போது பெருமைப்பட வைக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் படகு, வலை போன்றவற்றிற்குத் தனது அரசு மானியத்துடன் கூடிய நிதியுதவி அளிக்குமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார். இதைத் தாங்கிக்கொள்ள முடியாத வெத்துவேட்டுக்காரர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து நாங்களே கடன் தருவோம் என்று உறுதியளித்தனர். இதற்கான மனுக்கள் 2 நாட்களில் அளிக்கப்பட்டு உடனடியாகக் கடன் வழங்கப்படுமென்றார்கள்.

அவர்கள் கூறி, இன்றோடு 2 மாதங்கள் முடிந்து விட்டன. இன்னும் 2 பேருக்குக்கூட அவர்களால் கடன் தர முடியவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாதிக்கப்பட்டோரின் நிலையை அறிந்து, மத்திய நிதி அமைச்சரின் நீர்க்குமிழி அறிவிப்பு நிலை தெரிந்து, இதோ, நான் எனது அரசின் நிதியைத் தருகிறேன் என்று தாயுள்ளத்தோடு தந்து, அந்த மீனவ மக்களை இன்றைக்குக் காத்துக் கொண்டிருக்கிற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட நிதி தாருங்கள் என்று அம்மா அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்தார்கள். எங்கோயிருக்கும் மனிதர்களுக்கெல்லாம் இதயங்கள் துடித்தன. 137.16 கோடி ரூபாயை நல் மனம் படைத்தவர்கள் அள்ளிக் கொடுத்தார்கள். யாரிடம் நிதியைச் சேர்த்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் என்பதை உணர்ந்து, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே நிதியைக் கொடுத்தால்தான் அது அந்தப் பாதிப்புக்குள்ளான மக்களுக்குப் போய்ச் சேரும் என்பதை உணர்ந்து, தந்திருக்கின்றார்கள். அதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லன்போடு வாரி வழங்கிய நெஞ்சங்களுக்கு உள்ளன்போடு நன்றியை உரித்தாக்குகிறேன் என்று நேற்றைக்கும், நேற்றைக்கு முன்தினமும் வாரி வழங்கியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கின்றார். இந்த சுனாமியால் 8,018 பேர் இறந்து போனவர்கள். கடற்கரை ஓரங்கள் எங்கு பார்த்தாலும் பிணக்குவியலாகக் காட்சி அளித்தன. ஒரே நேரத்தில் இவ்வளவு மனித உடல்களையும் மற்றும் வாயில்லாப் பிராணிகளையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். மேலும், தொற்றுநோய் பரவாமலும் தடுத்திட வேண்டும். இதை மனதில் வைத்து இவ்வளவு பெரிய ஆழிப்பேரலை நிகழ்ச்சி நடந்தும் ஒரு இடத்தில்கூட தொற்றுநோய் பரவவில்லை என்பதே இந்த சுனாமி நிவாரணப் பணிக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கை ஒரு சான்று ஆகும். இதற்கு உதவியாக துப்புரவுத் தொழிலாளர்கள் இருந்தார்கள். திறமை, உண்மை, தியாகம் எங்கிருந்தாலும், யார் செய்தாலும் அவர்களைப் பாராட்டிப் பரிசளித்து மகிழ்பவர்தான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த வகையில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அன்பளிப்பு அளித்தவர்.



பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு பேச்சை நிறைவு செய்கிற வரை அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. டிசம்பர் 26-க்குப் பிறகு, இந்த ஆழிப்பேரலை துவக்கப்பட்டு இன்றையதினத்தோடு 72 நாட்கள் முடிவடைந்திருக்கின்றன. இந்த 72 நாட்களில் 7 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சென்று படுத்துக்கொண்ட ஒரு தலைவர், பிறகு உடல்நலம் தேறி, வீடு திரும்பிவிட்டார். அன்றையதினத்திலிருந்து இன்றையதினம் வரை, அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 24. இந்த 24-ல், 2 திரைப்படங்களின் pre-view காட்சிகள். இரண்டு திருமண நிகழ்ச்சிகள். இரண்டு புத்தக வெளியீட்டு விழாக்கள். இரண்டு அடிக்கல் நாட்டு விழாக்கள். அவர் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டங்கள் இரண்டு. ஒரு பொதுக் குழுக் கூட்டம், ஒரு உயர்நிலைச் செயல் திட்டக் குழுக்கூட்டம். ஒரு பொதுக் கூட்டம். ஒரு பிறந்த நாள் விழாக் கூட்டம். இப்படி ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், அனைத்து நல்ல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டிருக்கின்ற மகானுபாவர் அவர். இப்படிப் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கிறவர்களுக்கு, பல்லாயிரம் உயிர்களைப் பலி கொடுத்துள்ள கடலோர ஏழை மக்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூற வக்கில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசினார்கள், 'என்னுடைய தலைவன் கும்பகோணத்திற்கு 28 நாட்களுக்குப் பிறகு சென்றார்; ஸ்ரீரங்கத்திற்கு 10 நாட்களுக்குப் பிறகு சென்றார்; ஆறுதல் கூறினார், நிதியை வழங்கினார்' என்று. நான் அவர்களைப் பார்த்துக் கேட்க விரும்புவது எல்லாம், கும்பகோணத்திற்கும், ஸ்ரீரங்கத்திற்கும் செல்ல முடிந்த உங்கள் தலைவர், கூப்பிடு தூரத்திலே இருக்கின்ற, இதோ அருகிலே இருக்கின்ற இராயப்பேட்டை மருத்துவமனையிலே இருக்கின்ற எண்ணற்ற மனித உடல்களை அடுக்கி வைத்திருந்த அந்தக் கோரச் சம்பவத்தை, அந்தப் பிண வாடையைச் சகித்துக்கொள்ள முடியாமல், மருத்துவமனைக்குச் சென்ற இரக்கமற்ற கல்நெஞ்சத்திற்குச் சொந்தக்காரர்தானே உங்களுடைய தலைவர்? மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி நிவாரண நடவடிக்கைகளைப் பற்றிக் குறை சொல்பவர்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், சுனாமியாலே பாதிக்கப்பட்டவர்கள் சொத்து இழந்து, சுகம் இழந்து, உற்றார், உறவினரையும் இழந்து, பெற்ற தாயை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்து பரிதவிக்கும் பெற்றோர்கள், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், இப்படி எத்தனையோ மனித உறவுகளை இழந்து, இங்கெல்லாம் தவிக்கிறார்கள். அதற்கெல்லாம் மேலே தன்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய அந்தத் தொகுதி மக்கள், அதாவது சேப்பாக்கம் தொகுதி மக்கள், கடற்கரை ஓரம் சில்லரை வியாபாரம் செய்து வருகின்றனர்; அவர்களுடைய ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் இந்த சுனாமியால் அடித்து, இழுத்துச் செல்லப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் வாழ வழியின்றி, தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்படித் தவித்துக் கொண்டிருப்பவர்களை இதுவரையில் இந்தச் சட்டமன்ற உறுப்பினர் நேரில் சென்று ஆறுதல் கூறியிருக்கின்றாரா? அல்லது தான் இருக்கின்ற இடத்திற்காவது அவர்களை அழைத்து வரச் சொல்லி அவர்களுக்கு ஏதேனும் ஆறுதல் கூறியிருக்கின்றாரா? இல்லை. அப்படி இல்லையென்றாலும், தான் சேர்த்து வைத்திருக்கும் பெரும் செல்வத்திலிருந்து ஒரு பகுதியையாவது தன்னைத் தேர்ந்தெடுத்த சட்டமன்றத் தொகுதி மக்களுக்குக் கொடுத்து உதவி இருக்கின்றாரா? இல்லவே இல்லை. அந்த உதவியையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இப்போது செய்திருக்கின்றார்கள். ஏனென்றால், ஈரமே இல்லாத இதயத்திற்குச் சொந்தக்காரர் அல்லவா! உதவுவதுபோல பாவனை செய்வார், வசனம் எழுதுவார். ஆனால், இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு, உதடுகளில் செயற்கையாகப் புன்னகை வரவழைக்கும் ஏமாற்று வித்தைக்காரர். ஆனால், எங்கள் அன்னையோ தன் பிள்ளைகளுக்கு உதவுகின்ற தாயைப்போல், இயற்கையே சுனாமி வடிவில் இரு கையை விரித்தபோதும், (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கையே சுனாமி வடிவில் தன்னுடைய இரு கையை விரித்தபோதும், 'நான் இருக்கிறேன்' என தன் இரு கையால் தாங்கிக் காப்பாற்றி, மக்களின் இதய இருக்கையில் வீற்றிருக்கின்றார் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுனாமி என்ற ஆழிப்பேரலை, ஜப்பான் போன்ற நாடுகளில்தான் அடிக்கடி ஏற்படுவதாகக் கூறுகின்றனர். ஆகவேதான் ஜப்பான் நாட்டின் கடற்கரையோரத்தில் இருக்கின்ற மக்கள் தற்காலிகக் குடியிருப்புகளில்



வாழ்ந்து வருகின்றனர். சுனாமி வருகின்ற தகவல் கிடைத்தவுடன் தங்களது இருப்பிடங்களை மாற்றிக்கொள்கிறார்கள். ஆகவே, சுனாமியிலிருந்து அந்த மக்கள் easy-யாகக் காப்பாற்றப்படுகின்றார்கள். ஆனால், இந்தியாவிற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு, சுனாமி என்னும் ஆழிப்பேரலை புதியது. யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் தமிழகத்தைத் தாக்கியது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் அதிவேகமாக மேற்கொள்ளப்பட்டதால், அனைவராலும் ஆச்சரியப்படத்தக்க வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பியது. இதை அறிந்து, சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை அரசாங்கம், ஜப்பான் நாட்டிடம்கூட ஆலோசனை கேட்காமல், மத்திய அரசுமூலமாக தமிழக அதிகாரிகள் இருவரைத் தங்கள் நாட்டிலுள்ள அதிகாரிகளுக்கு இரண்டு நாட்கள் சுனாமி நிவாரண நடவடிக்கைகள் பற்றிப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன்பேரில், மனித நேயத்தோடு அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் குறிப்பிட்டுக் கூறுகிறேன் என்றால், தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூறாவளியாகச் செயல்பட்டு ஆற்றிய சுனாமி நிவாரணப் பணிகளால், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பெருமை உலக அளவிலே உயர்ந்திருப்பதற்குக் காரணம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

நான்கூட எண்ணிப் பார்த்தேன், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் கடுமையான நிதி நெருக்கடி. இந்த நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நிச்சயமாக மக்கள்மீதுதான் இந்த வரி என்ற மூட்டைச் சுமையைச் சுமத்த வேண்டியிருக்கும் என்று. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் ஒரு சிறந்த நிர்வாகி என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, 2001 ஆம் ஆண்டு 8,063 கோடி ரூபாய் வரி வருவாய் தமிழகத்திற்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. இன்றைக்கு அந்த வரி வருவாய் 13,890 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. மக்களைக் கசக்கிப் பிழியாமல், கஷ்டப்படுத்தாமல், கண்ணீர் சிந்தவிடாமல், புதிய வரிகளே இல்லாமல் பெறப்படுகிற இந்த வரி வருவாய், மந்திரத்தால் விளைந்த மாங்காய் அல்ல. ஏற்கெனவே நடைபெற்ற வரி ஏய்ப்புகளைக் கண்டறிந்து,

அதைத் தடுத்து, அரசு கஜானாவிற்கு வருவாயை வரவழைத்து, அதன்மூலம் தமிழகத்தின் ஆண்டு வருவாயை அதிகரிக்கச் செய்திருக்கிறார்கள். இது அம்மா அவர்களின் சிறப்பான நிர்வாகத் திறமைக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்த வரையில், எதை நினைக்கின்றாரோ, அதை நடத்திக் காட்டுகின்ற ஆற்றல் படைத்தவர். பாறைகளைப் பஞ்சாக்கும் அஞ்சாத நெஞ்சுறுதி; பாசத்திற்குப் பஞ்சாகும் மென்மையான கருணை மனம்; தன்னலமற்ற அம்மா அவர்களின் நல்லாட்சி, இந்த நல்லாட்சியை மனசாட்சியுள்ள எந்த மனிதரும் குறை சொல்லமுடியாது. நடைபோடும் பாதையில் நெறிதவறா உயர் மேன்மை, வறியவர்க்கு வாழ்வு தரும் மழையெனவே மனத் தூய்மை, வெல்வதற்கே பிறந்த அம்மா, உங்கள் பெயரைச் சொல்வதற்கே நாங்கள் புண்ணியம் செய்திருக்க வேண்டும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

கட்சிக்கு அப்பாற்பட்டு, மக்களைக் காப்பதற்கே ஆட்சிப் பொறுப்பேற்று, இன்றைக்குத் தமிழகத்தை முதன்மையாக்கும் முயற்சியில் ஒவ்வொரு துறையிலும் முன்னிலை அடைந்து, வெள்ளை முத்திரை பதிக்கின்றது, அம்மா அவர்களின் ஆட்சி. தமிழக மக்களில் படித்தவரானாலும் சரி, பாமரரானாலும் சரி, பணம் படைத்தவரானாலும் சரி, பசித்தவரானாலும் சரி, ஆத்திகரானாலும் சரி, நாத்திகரானாலும் சரி, குழந்தை முதல் மூத்த குடிமகன் வரை அனைத்துத் தரப்பு மக்களும் ஏகோபித்த ஒரே குரலில் வாழ்த்தும் வண்ணம் அமைந்த, மனித நேயமிக்க அம்மா அவர்களுடைய ஆட்சியை எந்த சக்தியாலும் அசைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழை மட்டுமல்ல; அவர்களின் நிழலைக்கூட எதிரிகள் யாரும் தொட்டுவிட முடியாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலால், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற இந்த பட்ஜெட்டை இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் யாரும் குறை சொல்ல முடியவில்லை. தேடித் தேடித் தேடித் தேடிப் பார்த்தார்கள், ஏதாவது கிடைக்குமா என்று. உண்மையிலே கூறுகிறோம், வெளிப்படையாகக் கூறுகிறோம்; இந்த 4 ஆண்டு காலம் முடிவுறுகின்ற இந்த ஆட்சியில், இந்த ஆட்சியின்மீது, புரட்சித் தலைவி



அம்மா அவர்களின் தலைமையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியின்மீது, இந்த ஆட்சியிலே பங்கேற்றிருக்கின்ற அமைச்சர்கள்மீது, எள்ளளவாவது, எள் முனையளவாவது, ஏதாவது ஒரு வகையில் குற்றம் சுமத்த முடிந்ததா என்று எதிர்க்கட்சியினரைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள்கூட கூறினார். மத்திய அரசு இரண்டு பாலங்களுக்கு அனுமதி தந்துவிட்டது, இன்னும் நீங்கள் அதை ஏன் செயல்படுத்தவில்லை என்று கேட்டார். திரு. மகேந்திரன் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். 2002-2003 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் சார்பிலே ஒரு பட்ஜெட் வெளியிடப்பட்டது. அந்த பட்ஜெட்டிலே பெரம்பூர் பகுதி என்று இப்போது நீங்கள் குறிப்பிட்ட பேசின் பிரிட்ஜ், போஜராஜன் நகர், கண்ணன் தெரு, கொருக்குப்பேட்டை சந்திப்புக் கடவுகளிலே அமைக்கப்படுகின்ற பாலங்கள் மக்களுடைய 40 ஆண்டு காலப் பிரச்சினை. இதை அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், உடனடியாக, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் அதற்கு ஒரு வரைபடத்தைத் தயார்படுத்தச் சொல்லி, சென்னை Anna University-யிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, அந்த வரைபடத்தைத் தயாரித்து, 2002-2003-சென்னை மாநகராட்சி-நிதியாண்டு பட்ஜெட்டிலே, ஒவ்வொரு பாலத்திற்கும் முதற்கட்டச் செலவாக ஐம்பது, ஐம்பது இலட்சத்தை ஒதுக்கினார்கள். அன்றையதினமே, அந்தப் பணி ஆய்வு செய்து முடிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்திற்கு அந்தக் கருத்துரு அனுப்பப்பட்டு, இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான், அந்தப் பாலத்தை மத்திய அரசாங்கத்தினுடைய இந்த ஆண்டு நிதி வருவாயிலே சேர்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-40

ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தளவில், எங்கு எந்தப் பணியாக இருந்தாலும், அதை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், உடனடியாக நடத்திக் காட்டுகின்ற வல்லமை படைத்தவர்தான் எங்கள் அம்மா என்பதைக் கூறி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலைத்த ஆட்சியின் நிழலில்-- ஆறரைக் கோடி தமிழ் மக்களின் நல்வாழ்வு செழித்திருக்க அம்மா அவர்கள் நீடூழி வாழ, எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அம்மாவை வணங்கி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-3-2005) செவ்வாய்க்கிழமை, காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*37. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*38. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*39. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

- ஏதுமில்லை -

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186275